# மெய்யறிவு.

வ. உ. சிதம்பரம் பிள்ளை.

எஸ். வி. என். பிரஸ், சென்னை.

80672a

Copy right.
1915.

# பொருட்குறிப்பு.


| பொருள் | | பக்கம். |
|---|---|---|
| பாயிரம் | ... | v |
| சிறப்புப் பாயிரம் | ... | vii |
| தன்னையறிதல் | ... | 1 |
| விதியியல் அறிதல் | ... | 10 |
| உடம்பை வளர்த்தல் | ... | 20 |
| மனத்தை யாள்தல் | ... | 32 |
| தன்னிலையில் நிற்றல் | ... | 42 |
| மறங் களைதல் | ... | 52 |
| அறம் புரிதல் | ... | 62 |
| தவஞ் செய்தல். | ... | 71 |
| மெய்யுணர்தல் | ... | 82 |
| மெய்ந்நிலை யடைதல் | ... | 93 |
| பிழை திருத்தம் | ... | 104 |

உ
திருச்சிற்றம்பலம்.
திருநாவுக்கரசு னால்
நிலையம்,
கல்லத்திடுக்குத் ( , )
திருநெல்வேலி

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினும்
மேன்மே லுயர்த்தி நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

# பாயிரம்.

இராஜநிந்தனைக் குற்றத்திற்காக யான் நாடு கடத்தல் தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் வசித்த காலத்தில் என் பக்கத்தில் வசித்துக்கொண்டிருந்த கொடுங் குற்றவாளிகளுக்குப் பல பாவங்களையும், அவற்றால் இம்மையிலும் மறுமையிலும் விளையும் கேடுகளையும், அவற்றை நீக்குதற்குரிய மார்க்கங்களையும் அடிக்கடி யான் எடுத்துக் கூறுவதுண்டு. ஒரு நாள் அக்குற்றவாளிகளிற் சிலர் "பல பாவங்களையும் தொகுத்துச் சில பாக்களாகச் செய்து கொடுத்தால் அவற்றை நாங்கள் மனப் பாடம் செய்து வைத்து அடிக்கடி நினைத்துக் கொள்வோம்." என்று கூறினர். அவர் சொற்படி அன்றிரவு இந்நூலின் "மறங்களைதல்" என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி மறுநாள் அவர்களுக்குச் சொன்னேன். அவற்றை அவர்கள் மனப் பாடம் செய்தபின்னர் அவர்களது விருப்பப்படியே இந்நூலின் "அறம்புரிதல்" என்னும் அதிகாரத்திலுள்ள பத்து வெண்பாக்களையும் பாடி அவர்களுக்குச் சொன்னேன். பின்னர் இவ்விருபது வெண்பாக்களையும் இரண்டு அதிகாரங்களாக்கி, அவற்றிற்கு முன்னும் பின்னும் சில அதிகாரங்களைச் சேர்த்து, மொத்தம் நூறுவெண்பாக்களாக்கி, அவற்றை "மெய்யறிவு" என்னும் பெயருள்ள இந்நூலாக உருப்படுத்தினேன். உரைகோளாளர் ஒருவரால் இதன் உரை எழுதப்பட்டது. அவர் பெயரை வெளியிட அவர் விரும்பாததால் அதனை யான் இங்குக் கூறவில்லை.

இந்நூல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தம் நான்கில் இன்பம் தவிர மற்றைய மூன்றையும் உணர்த்தாநின்ற நூல்களின் சாரம் என்று கொள்ளத்தக்கது. அறநூலும் பொருள் நூலும் வீட்டுநூலும் கற்றுணர்ந்து அம்முப்பொருள்களையும் அடைவிக்கும் நெறிகளில் ஒழுகுபவரே இந்நூலைச் சொல்லுதற்கு உரியர். இந்நூல் சொல்லப்படுவோர் அறங்களைச் செய்யவும் . காக்கவும் அவற்றிற்குப் பொருத்தமான நிலைகளை எய்தவும் விரும்பி முயற்சிக்கச் செய்தலே இந்நூலைச் சொல்லும் முறை .அறத்தையோ, பொருளையோ, வீட்டையோ, அவற்றை எய்தற்கு ஏற்ற நிலைகளையோ, அடைய அவாவுகின்ற ஆண் பாலாரும் பெண் பாலாரும் இந்நூலைக் கேட்டற்கும் கற்றற்கும் உரியர். இந்நூல் கூறும் அற்நெறியையும் பொருள் நெறியையும் வீட்டு நெறியையும் நன்கு உணர்ந்து பற்றி நின்று அவற்றில் ஒழுகுதலே இந்நூலைக் கேட்கும் அல்லது கற்கும் முறை. இந்நூலும் எனது முதல் மனைவி வள்ளியம்மை சரித்திரமும் தென் ஆபிரிக்காவில் வசித்து வராநின்ற எனது மெய்ச்சகோதரர்கள் ஸ்ரீமாந். த.வேதியப்பிள்ளை யவர்களும் ஸ்ரீமாந். சொ. விருத்தாசலம்பிள்ளை யவர்களும் அளித்த பொருளுதவியால் அச்சிடப் பெற்றன.

இராக்ஷஸஹு ஆவணிமீ ௩௨
திருமயிலை, சென்னை. } வ. உ. சிதம்பரம்பிள்ளை.

# சிறப்புப் பாயிரம்.

இந்நூலை இயற்றியவர்கள் நமது தேச பக்தரும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும், "மெய்யறம்" முதலிய நூல்களின் ஆசிரியருமான ஸ்ரீமாந். **வ. உ. சிதம்பரம்பிள்ளை** யவர்கள்.

அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் உணர்த்தும் பல நூல்களின் பொருள்களையும் தொகுத்துக் கூறுகின்றமையால் இஃது அம்முப் பொருள் நூல்களின் வழிநூலாகும்.

தமிழ் நூல்கள் வழங்கும் நாடுகளிலெல்லாம் (அவற்றுள் ஒன்றாகிய) இதுவும் வழங்கற்பாலது. அஃதாவது, தமிழ் நூல்களுக்குரிய எல்லைகளே இந் நூற்கும் எல்லைகளெனக் கொள்க.

அறம், பொருள், வீடு என்பவற்றைப் பற்றித் தற்காலத்து மாந்தரிற் பலர் கொண்டுள்ள பொய் யறிவைப் போக்குகின்றமையால் இந்நூல் "மெய் யறிவு" என்னும் பெயரைக் கொண்டது.

அறத்தைச் செய்ய அவாவி நிற்கின்ற ஓர் ஆண் மகனை நோக்கி அவனுடைய ஆசிரியன் கூறுகின்றது போல இந்நூல் இயற்றப் பட்டுள்ளது. இது சில புதிய கோட்பாடுகளையும் கூறுகின்றது.

அறமும், அறத்திற்கு இன்றியமையாத பொருளும், அறத்தால் எய்தப்படும் வீடும், அம்மூன்று பொருள்களையும் ஈட்டுதற்குரிய நெறிகளும், இந்நூல் நுதலிய பொருள்களாம்.

அறத்தைச் சரியாகப் புரிதலும், பொருளை நியாயமாக ஈட்டலும், வீட்டை நேராக அடைதலும், அவற்றிற்கு அநுகூலமான நிலைகளை எய்தலும் இந்நூலைக் கேட்போர் பெறும்பயன்களாம்.

இந்நூல் நமது பிள்ளையவர்கள் இராஜநிந்தனைக் குற்றத்திற்காக **நாடுகடத்தல்** தீர்ப்புப் பெற்றுக் கண்ணனூர்ச் சிறையில் வசித்தபோது இயற்றப்பட்டு இவ்வருடம் அரங்கேற்றப் பெற்றது.

அறிவும் அன்பும் ஓர் உருவாய்த் திரண்டு, நம்மவர் நன்மைக்காக அவதரித்துள்ள, ஸ்ரீமாந். தி. செல்வகேசவராய முதலியாரவர்கள், யம். ஏ., முன்னிலையில் இஃது அரங்கேற்றப் பெற்றது.

இந்நூல் நமது தொன்னூல்களைப் போல இவ்வுலகின்கண் நீடு நின்று நிலவுமாறு அருள்புரிய எல்லாம் வல்ல இறைவனை எமது நெஞ்சத்துள் வைத்து வணங்குகின்றோம்.

சென்னை.
இராக்ஷஸ௵
ஆவணிமீ ௩௨

கல்யாணசுந்தர யதீந்திரர்.

# மெய்யறிவு.

## முதல் அதிகாரம்—தன்னை யறிதல்.

தன்னை யறிதல் தலைப்படுத்துங் கல்வியென
முன்னையவர் நன்கு மொழிந்திருந்து-மென்னைகொல்?
தன்னை யறியாது சார்ந்தபல கண்டறியப்
பின்னையவ ருன்னல் பிடித்து. (க)

அநுவயம் :—தன்னை அறிதலை தலைப்படுத்தும் கல்வியென முன்னையவர் நன்கு மொழிந்திருந்தும், தன்னை அறியாது, சார்ந்த பலவற்றைப் பிடித்துக் கண்டறியப் பின்னையவர் உன்னல் என்னை ?

பதவுரை :-தன்னை அறிதல்-தனது இலக்கணங்களைத் தெரிந்துகொள்ளுதலை, தலைப்படுத்தும்-மேம்பாடுறச்செய்யும், கல்வியென-படிப்பு என்று, முன்னையவர்-முன்னோர், நன்கு மொழிந்திருந்தும்-தெளிவாகக் கூறியிருந்தும், தன்னை அறியாது-தனது இலக்கணங்களைத் தெரிந்துகொள்ளாது, சார்ந்த-(தம்மை) அடுத்த, பல-பல (உலக) விவகாரங்களை, பிடித்து-பற்றி, கண்டறிய-ஆராய்ந்து தெரிய, பின்னையவர்-இக்காலத்துள்ளோர், உன்னல்-எண்ணல், என்னை-யாதுகாரணம் பற்றி ?

**கருத்துரை** :—உலகத்துப் பொருள்களின் இலக்கணங்களை யெல்லாம் கற்கத் தொடங்கு முன்னர் தனது இலக்கணங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கொல் அசை. பிரிநிலை ஏகாரம் தொக்கது.

தன்னியல்பைக் காணுந் தகுதியிலா ரிவ்வுலகின்
பொன்னியல்பைக் காணப் புகுவதென்னே?—உன்னியல்பைக்
கூறுகின்றே னென்மெய்க் குருவினடி போற்றியறத்
தேறுகின்றாய் கேட்பா யினிது. (உ)

**அ-ம்** :—அறத்து ஏறுகின்றாய்! தன் இயல்பைக்காணும் தகுதியில்லார் இவ்வுலகின் பொன்னியல்பைக் காணப்புகுதல் என்? என் மெய்க்குருவின் அடிபோற்றி உன் இயல்பைக் கூறுகின்றேன். இனிது கேட்பாய்.

**ப-ரை** :—அறத்து ஏறுகின்றாய் - தருமமாகிய ஏணியில் ஏறிக்கொண்டிருக்கின்றோய்! தன் இயல்பை-தனது இலக்கணங்களை, காணும் தகுதியில்லார்-அறியும் திறமையில்லாதவர், இவ்வுலகின்-இவ்வுலகத்தின், பொன் இயல்பை-பொருள் நிலைமைகளை, காண-ஆராய்ந்து அறிய, புகுதல் என்-முற்படுதல் யாது காரணம்பற்றி? என்மெய்க்குருவின்-எனது மெய்ப்பொருளாகிய ஆசிரியனது, அடிபோற்றி-பாதங்களை வணங்கி, உன் இயல்பை-உனது இலக்கணங்களை, கூறுகின்றேன்-சொல்லுகின்றேன். இனிது கேட்பாய்-நன்றாகக் கேட்பாய்.

க-ரை :—தனது இலக்கணங்களைத் தெரிந்து கொள்ளத்தக்க திறமை இல்லாதவர் இவ்வுலகத்தினது பொருள் நிலைமைகளை ஆராய்ந்து அறிய முற்படக் கூடாது.

ஓ அசை. இகபர உந்நதநிலைகளை எய்தச்செய்வது அறமாகலான், அது ஏணியாக உருவகம் செய்யப்பட்டது.

உன்னுமிடத் துன்பா லுடம்புமன மன்னுன்மா
என்னுமொரு மூன்றே யிருப்பனகாண்.—மன்னும்
பிறவெல்லா மம்மூன் றுள். பேணு மவற்றின்
உறவெல்லாஞ் சொல்வே னொருங்கு. (௩)

அ-ம் :—உன்பால் உன்னுமிடத்து, உடம்பு மனம் ஆன்மா என்னும் ஒரு மூன்றே இருப்பன; பிறவெல்லாம் அம்மூன்றுள் மன்னும்; பேணும் அவற்றின் உறவையெல்லாம் ஒருங்கு சொல்வேன்.

ப-ரை:—உன்பால் - உன்னிடத்து, உன்னுமிடத்து-ஆராயுங்கால், உடம்பு - சரீரம், மனம்-உள்ளம், ஆன்மா - உயிர், என்னும்-என்று சொல்லப்படும், ஒரு மூன்றே-ஒரு மூன்று பொருள்களே, இருப்பன-உள்ளன. பிறவெல்லாம் (உன்பால் காணப்படும்) மற்றைய யாவும், அம்மூன்றுள்-அவ்வுடம்பு மனம் ஆன்மாவுள், மன்னும்-சேரும். பேணும்-ஓம்பத்தக்க, அவற்றின் - அப்பொருள்களின், உறவு எல்லாம்-சம்பந்தங்களை யெல்லாம், ஒருங்கு சொல்வேன்-மொத்தமாகக் கூறுவேன்.

**க-ரை :**—உன்னிடத்தில் உடம்பு மனம் ஆன்மா என்னும் மூன்று பொருள்களேயுள்ளன ; உன்பால் உள்ள மற்றைய எல்லாம் அம்மூன்றினது பாகுபாடுகளே யாகும்.

மன், காண் என்பன அசைகள்.

பாதமுத லாகப் பலவுறுப்பா யாகாயம்
வாதமனல் நீர்மண் மருவிவந்த—நாத
மிரத்த நரம்புதசை யென்புபிற கூடி
யுரத்தினொடு நிற்ப துடம்பு. (ச)

**அ-ம் :**—ஆகாயமும் வாதமும் அனலும் நீரும் மண்ணும் மருவி வந்த நாதமும் இரத்தமும் நரம்பும் தசையும் என்பும் பிறவும் கூடிப் பாதம் முதலாகப் பல உறுப்பாய் உரத்தினொடு நிற்பது உடம்பு.

**ப-ரை :**—ஆகாயமும் வாதமும் அனலும் நீரும் மண்ணும்-ஆகாயமும் வாயுவும் தேயுவும் அப்புவும் பிருதிவியும், மருவி வந்த-சேர்ந்து உண்டாய, நாதம்-நாதமும், இரத்தம் - உதிரமும், நரம்பு - நாடிகளும், என்பு - தடிகளும், பிற - தோல் மயிர் முதலியனவும் பிராணன் அபானன் முதலிய வாயுக்களும், கூடி-சேர்ந்து, பாதம் முதலாக-பாதங்கள் முதற்கொண்டு சிரசுவரையுள்ள, பல உறுப்பாய்-பல உறுப்புக்களாகி, உரத்தினொடுநிற்பது- (காட்சிக்குப் புலப்படத்தக்க) பலத்தோடு பொருந்தியுள்ளது, உடம்பு-சரீரம்.

**க-ரை:** —பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டாய நாதம் முதலியனவும் நரம்புமுதலியனவும்

பிராணன் முதலியனவும் சேர்ந்து பாதம் முதல் சிரசுவரையுள்ள பல உறுப்புக்களாகிக் காட்சிக்குப் புலப்பட்டு நிற்பது உடம்பு.

எண்ணும்மைகள் தொக்கன. உறுப்பு சாதியொருமை.

ஆக்க லளித்த லழித்த லிவைமூன்று
மூக்கமொடு செய்யு முரங்கொண்டுங்—காக்கும்
அறம்புரிய முற்படா தைம்பொறியிற் சென்று
மறம்புரியுஞ் சத்தி மனம். (ரு)

**அ-ம்:**—ஆக்கல் அளித்தல் அழித்தல் இவை மூன்றையும் ஊக்கத்தொடு செய்யும் உரத்தைக்கொண்டும், ஐம் பொறியிற் சென்று காக்கும் அறத்தைப் புரிய முற்படாது மறத்தைப் புரியும் சத்தி மனம்.

**ப-ரை:**—ஆக்கல்-சிருஷ்டி, அளித்தல்-ஸ்திதி, அழித்தல்-சம்ஹாரம், இவை மூன்றும்-இத்தொழில்கள் மூன்றையும், ஊக்கமொடு-ஊக்கத்தோடு, செய்யும்-நடத்தும், உரம்கொண்டும்-வலிமையைக்கொண்டிருந்தும், ஐம்பொறியில்-மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து வாயில்களில், சென்று-பிரவேசித்து, காக்கும்-பிறவித்துன்பங்களினின்று காப்பாற்றும், அறம்புரிய முற்படாது - தருமங்களைச்செய்ய முன்னுறாது, மறம் புரியும்-அதருமங்களைச்செய்யும், சத்தி-(நினைப்பாகிய) சக்தி, மனம்-மனமாம்.

**க-ரை:**—சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் என்னும் தொழிலையும் செய்யத்தக்க வலிமையைக் கொண்

டிருந்தும், ஐம்பொறிவாயில்களிற் சென்று தருமங்களைச் செய்யாது அதருமங்களைச் செய்யும் சக்தியே மனமாம.

தீநெறியை விட்டுத் திருப்பி மனமதனை
ஆநெறியிற் சேர்த்திங் கறஞ்செய்து—மோனத்
திடனுடைத்த வம்மனத்தைச் செற்றடக்கி யஃதன்
மடனுடைக்கும் வாலறிவான் மா. (சு)

**அ-ம்** :—மனமதனைத் தீநெறியை விட்டுத்திருப்பி, ஆம்நெறியில் சேர்த்து, இங்கு அறத்தைச் செய்து, மோனத்திடனை உடைத்த அம்மனத்தைச் செற்று, அஃதன் மடனை உடைக்கும் வால் அறிவு ஆன்மாவாம்.

**ப-ரை** :—மனமதனை - உள்ளத்தை, தீநெறியை விட்டுத்திருப்பி — பாவவழியை விட்டு விலக்கி, ஆம் நெறியில் சேர்த்து — ஆகும் ( புண்ணிய ) வழியில்சேர்த்து, இங்கு — இவ்வுலகத்தில், அறம் செய்து - தருமத்தைப் புரிந்து, மோனத்திடன் உடைத்த-(தனது) மௌனவலியைக்கெடுத்த, அம் மனத்தைச் செற்று அடக்கி-அவ்வுள்ளத்தை வெகுண்டு கீழ்ப்படுத்தி, அஃதன்-அம்மனத்தின், மடன் உடைக்கும் - மடமையைப்போக்கும், வால் அறிவு- தூய அறிவு, ஆன்மா-ஆன்மாவாம்.

**க-ரை** :—மனத்தைத் தீநெறியினின்று திருப்பி, நன்னெறியில் உய்த்துத் தருமம்புரிந்து, தனது மௌனத்தைக் கெடுத்த அம்மனத்தை வெகுண்டு கீழ்ப்படுத்தி, அதன் மடமையைப் போக்கும் தூய அறிவு ஆன்மாவாம்.

ஆன்மா மனத்தை யடர்க்குமுரங் கொண்டிருந்து
மான்மா நிகர்த்து மனத்தையிழந்—தூன்மா
பொருந்திநிற்கா தாதலினாற் போயுமனந் தாழ்வில்
வருந்திநிற்கு மஃதடுத்து வாழ்ந்து. (எ)

**அ-ம்** :—ஆன்மா மனத்தை அடர்க்கும் உரத்தைக்கொண்டிருந்தும், மான்மாவை நிகர்த்து மனத்தை இழந்து ஊன்மாவைப் பொருந்தி நிற்காது; ஆதலினால், மனம் தாழ்வில் போயும் அஃதை அடுத்து வாழ்ந்து வருந்தி நிற்கும்.

**ப-ரை** :—ஆன்மா - ஆன்மாவானது, மனத்தை அடர்க்கும் - மனத்தைக் கொல்லும், உரம் கொண்டிருந்தும்-வலிமையைக் கொண்டிருந்தும், மான்மா நிகர்த்து - (மயிரை இழந்து வாழாத) மான் மிருகத்தைப்போன்று, மனத்தை இழந்து - மனத்தைப்பிரிந்து, ஊன்மா - சரீர மிருகத்தை, பொருந்தி நிற்காது-மருவிநில்லாது; ஆதலினால்-ஆதலால், மனம்-மனம், தாழ்வில்போயும்-தீ நெறியிற்சென்றும், அஃது அடுத்து-(ஆன்மா) அதனைச் சேர்ந்து, வாழ்ந்து வருந்தி நிற்கும்-வாழ்ந்து துன்பத்தை அடைந்து நிற்கும்.

**க-ரை** :—ஆன்மா மனத்தை வெல்லும் வலியுள்ளதாயிருந்தும், அது மனத்தைப் பிரிந்து உடம்பில் நில்லாது. ஆதலால், மனம் தீநெறிகளிற் சென்றும் ஆன்மா அதனோடுசேர்ந்து உடம்பில் நின்று துயருறுகின்றது.

பாரிணையாள் மன்னன்றன் பார்காண வெண்ணியொரு
தேரிணையாண் மாவோடு சேர்தல்போல்—ஒரும்
அறிவிணையா ளான்மா அறஞ்செய்ய வெண்ணிச்
செறியுமுள மாளுடம்பு சேர்ந்து. (அ)

**அ-ம்** :—பாரிணை ஆள் மன்னன் தன் பாரைக் காண எண்ணி ஒரு தேரிணை ஆள் மாவோடு சேர்தல் போல் ஒரும் அறிவிணையாள் ஆன்மா அறத்தைச் செய்ய எண்ணியே உள்ளம்ஆளும் உடலோடுசேர்ந்து செறியும்.

**ப-ரை**:— பாரிணை - பூமியை, ஆள் மன்னன்- ஆளுகின்ற அரசன், தன் பார் காண - தனது ஆள்கைக்குட்பட்ட பூமியைப்பார்க்க, எண்ணி - நினைந்து, ஒரு தேரிணை-ஒரு ரதத்தை, ஆள் மாவோடு-ஆளுகின்ற குதிரையோடு, சேர்தல் போல்- பொருந்துதல் போல, ஒரும்-உணரும், அறிவிணை ஆள் ஆன்மா-அறிவை ஆள்கின்ற ஆன்மாவானது, அறம்செய்ய-தருமத்தைப் புரிய, எண்ணி-நினைந்தே, உளம்ஆள் உடம்பு - மனம் ஆளும் உடம்போடு, சேர்ந்து செறியும்-பொருந்திக்கலக்கும்.

**க-ரை** :—ஆன்மா ஒரு சரீரத்தை ஆள்கின்ற மனத்தோடு சம்பந்தப்படுவது அறத்தைப் புரிதற் கேயாம்.

தேரும் குதிரையும் இல்லாது ஓர் அரசன் தனது நாடுமுழுவதையும் காண்டல் எவ்வாறு அரிதோ அவ்வாறே உடம்பும் மனமும் இல்லாது அறத்தைச் செய்தல் அரிதென்பதாம்.

மனக்குதிரை மெய்யறத்தின் மார்க்கத்தை விட்டுத்
தனக்குவியன் மாதர்நிலஞ் சாரு—முனற்றைக்
கடிவாளத் தாலிழுத்துக் காட்டிநெறி சேர்க்கும்
பிடிவாத மாவான்மா பின்பு.

அ-ம் :—மனக்குதிரை மெய்யறத்தின் மார்க்கத்தை விட்டுத் தனக்குவியலையும் மாதரையும் நிலத்தையும் சாரும்; பின்பு ஆன்மா உனற்கைக்கடிவாளத்தால் (அதைப்) பிடிவாதமாக இழுத்து (அதற்கு) நெறியைக் காட்டி (அதை) நெறியிற் சேர்க்கும்.

ப-ரை :—மனக்குதிரை - மனமாகிய குதிரை, மெய்யறத்தின் மார்க்கத்தைவிட்டு - உண்மையான தருமமாகிய வழியை நீங்கி, தனக் குவியல்-(அதருமநிமித்தங்களாகிய) பொருட்குப்பையையும், மாதர் - பெண்டிர்களையும், நிலம் - பூமியையும், சாரும் பொருந்தும்; பின்பு - பின்னர், ஆன்மா - ஆன்மாவானது, பிடிவாதமாக-ஓரேபிடியாக, உனற்கைக்கடிவாளத்தால்- சிந்தித்தல் என்னும் கடிவாளத்தால், இழுத்து - அம்மனத்தை இழுத்து, நெறி காட்டி - அதற்கு அறவழியைக் காட்டி, நெறியில் சேர்க்கும் - (அதை) அவ்வறவழியில் சேர்க்கும்.

க-ரை :—மனம் அறநெறியைவிட்டு மறநெறியில் செல்லும்; ஆன்மா அதைப் பிடிவாதமாக இழுத்து அறநெறியில் சேர்க்கும்.

உடம்புமனத் தோடுபுணைத் துள்ளவொரு நல்ல
சடம்பொருது நின்றான்மா தன்னின்—அடம்புரிந்து
நன்னெறியிற் சேர்க்கவதை நாய்போலப் பின்பற்றும்
புன்னெறியிற் போய மனம். (ம)

**அ-ம் :**—உடம்பு மனத்தோடு புணைத்துள்ள ஒரு நல்ல சடம் ; ஆன்மா தன் அடத்தைப்புரிந்து (அதனோடு) பொருதுநின்று அதை நன்னெறியில் சேர்க்க, புன்னெறியில்போய மனம் நாய் போல (அதை)ப் பின்பற்றும்.

**ப-ரை :**—உடம்பு-சரீரம், மனத்தோடு உள்ளத்தோடு, புணைத்துள்ள-சேர்க்கப்பட்டுள்ள, ஒரு நல்ல சடம்-ஒருநல்ல அசித்துப்பொருள். ஆன்மா-ஆன்மாவானது, தன் அடம்புரிந்து-தனது பலத்தைக் கொண்டு, பொருது நின்று - (உடம்போடு) சண்டைசெய்து, அதை - அவ்வுடம்பை, நன்நெறியில்-அறவழியில், சேர்க்க-உய்க்க, புன்நெறியில்-மறவழியில், போய மனம்-சென்ற உள்ளம், நாய்போல (தான் விரும்பிய பொருளைப் பின்பற்றிச்செலலும்) நாய்போல, பின்பற்றும்-(அதைப்) பின்பற்றி (நல்ல நெறியில்) செல்லும்.

**க-ரை :**—மனம் மறநெறியைவிட்டு அறநெறிக்குத் திரும்பவில்லையானால், மனத்தோடு சேர்க்கப்பட்டுள்ள சரீரத்தை ஆன்மா அறநெறியில் செலுத்தின், சரீரத்தைப்பற்றிய மனம் அறநெறியில் செல்லும்.

## 2-ம் அதி. விதியியல் அறிதல்.

*விதிவிதியென் றுழ்கின்றார் வினைகத் துன்பில்*
*விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு—பதியொருவ*
*னுண்டென்று நம்பி யொருசிலரிங் கன்னாரிற்*
*கண்டறியேன் பேதையரைக் காண்.* (கக)

**அ-ம்** :—ஒரு சிலர் விதியை விதிக்கத் தம்மை யன்றி வேறு பதி ஒருவன் உண்டென்று நம்பி விதி விதி என்று துன்பில் வீணுக ஆழ்கின்றார். இங்கு அன்னாரின் பேதையரைக் கண்டறியேன்.

**ப-ரை** :—ஒருசிலர் - ஒருசில மனிதர், விதி விதிக்க-தமது விதிகளை ஏற்படுத்த, தம்மையன்றி-தம் மையல்லாமல், வேறு பதி ஒருவன்-மற்றொரு தலை வன், உண்டென்று-இருக்கிறான் என்று, நம்பி-நம் பிக்கை கொண்டு, விதிவிதி என்று-(தமது துன்பத் தைப் போக்க முயற்சி செய்யாது) இஃது எமது விதிப்பயன் எமது விதிப்பயன் என்று சொல்லிக் கொண்டு, துன்பில்-துன்பத்தில், வீணுக-அநாவசிய மாக, ஆழ்கின்றார்-தாழ்கின்றார். இங்கு-இவ்வுலகத் தில், அன்னாரின்-அவரைப்போல, பேதையரை-மடை யரை, கண்டறியேன் - ( யான் ) பார்த்தறியேன்.

**க-ரை** :—தன் விதியை விதிக்கும் தலைவன் தானே ; இறைவன் அல்லன் என்பதாம்.

ஓருயிர்தான் றுன்புறவு மோருயிர்தா னின்புறவுஞ்
சீருறையு மீசன்றான் செய்தலெவன் ?—ஓரஞ்
செயல்தானோ வீசனியல் சீரளிக்குஞ் செம்மை
உயல்தானோ வீசற் குவப்பு ? (கஉ)

**அ-ம்** :—சீர் உறையும் ஈசன் ஓர் உயிர் துன்பு உறவும் ஓர் உயிர் இன்பு உறவும் செய்தல் எவன் ? ஓரம் செயல்தானோ ஈசனது இயல் ? சீரை அளிக்கும் செம்மை உயல்தானோ ஈசற்கு உவப்பு ?

ப-ரை :—சீர் உறையும்-புகழ்கள் தங்குகின்ற, ஈசன்-கடவுள், ஓர் உயிர் துன்பு உறவும்-ஓர் ஆன்மா துன்பத்தை அநுபவிக்கவும், ஓர் உயிர் இன்பு உற வும்-மற்றோர் உயிர் இன்பத்தை அநுபவிக்கவும், செயல்-செய்தல், எவன்-யாது காரணம்பற்றி? ஓரம்-பட்சபாதம், செயல்தானோ-செய்தல்தானோ, ஈசனது இயல்-கடவுளது இயற்கை? சீர் அளிக்கும்-புகழ் களெல்லாம் நல்கும், செம்மை-நடுவுநிலைமை, உயல் தானோ-தவறல்தானோ,ஈசற்கு-கடவுளுக்கு, உவப்பு-சந் தோஷம்?

க-ரை :—நடுவுநிலைமை வாய்ந்த இறைவன் காரணமின்றி ஓர் உயிர் துன்பத்தை அநுபவிக்கவும் மற்றோர் உயிர் இன்பத்தை அநுபவிக்கவும் விதிக்க மாட்டான். அவ்வாறு விதிப்பது அவனுடைய திரு விளையாடல் என்பது தவறு. சிலர் துன்பத்தை அநு பவித்தற்கும் வேறு சிலர் இன்பத்தை அநுபவித் தற்கும் காரணம் அவரவரது கருமங்களே என்பது குறிப்பெச்சம்.

தான் மூன்றும் அசைகள்.

ஊழ்ப்படியா மென்னி னுயர்ந்தோர்பான் மோக்கமொடு
கீழ்ப்படியு மேற்படியுங் கேட்டலெவன்?—காழ்ப்ப
அறஞ்செயலா லாவதெவன்? அஃதொழித்து மிக்க
மறஞ்செயலா லாவதெவன் மற்று? (கக)

அ-ம் :—ஊழ்ப்படி ஆம் என்னின், மோக்கத் தொடு கீழ்ப்படியையும் மேல்படியையும் உயர்ந்தோர்

பால் கேட்டல் எவன்? காழ்ப்ப அறத்தைச் செய லால் ஆவது எவன்? அஃதை ஒழித்து மிக்க மறத் தைச் செயலால் ஆவது எவன்?

**ப-ரை:**—ஊழ்ப்படி-விதிப்படி, ஆம். என்னின்- (எல்லாம்) நிகழும் என்றால், மோக்கமொடு-மோக்ஷத் தோடு, கீழ்ப்படியும் - நரகத்தையும், மேல்படி யும்-சுவர்க்கத்தையும் (பற்றி), உயர்ந்தோர் பால்- பெரியோர் இடத்தில், கேட்டல்-கேட்டுத்தெளிதல், எவன்-யாது காரணம்பற்றி? காழ்ப்ப-மிகுதியாக, அறம் செயலால் - புண்ணியங்களைச் செய்தலால், ஆவது-ஆகும்பயன், எவன்-யாது? அஃது ஒழித்து- அதனைவிடுத்து, மிக்க-மிகுதியாக, மறம் செயலால்- பாவங்களைச் செய்தலால், ஆவது - ஆகும் பயன், எவன்-யாது?

**க-ரை:**—விதிப்படியே யாவும் நடக்குமென்றால் நரகம் சுவர்க்கம் மோக்ஷம் இவற்றைப்பற்றியும் இவற் றின் ஏதுக்களைப்பற்றியும் விசாரணை செய்யவேண்டி யதுமில்லை; புண்ணியபாவங்களைச் செய்யவேண்டி யதுமில்லை.

கருமத்தின்படியாவும் நிகழுமேயன்றிக் கடவுள் விதித்தபடி எல்லாம் நிகழுமென்று கூறுதல் பிழை யென்பது குறிப்பெச்சம்.

விதிதன்னி னிங்கு மிகுவலிய தில்லைச்
சதிசெயினும் வந்தது தான் றாக்கு—மதியால்
அதனையடல் கூடாதென் றன்றோ·றுரைத்த
இதனைவிட லெங்ஙனெனின். (கஅ)

**அ-ம் :—** இங்கு விதிதன்னின் மிகுவலியது இல்லை ; அது சதி செயினும் வந்துதாக்கும் ; அதனை மதியால் அடல் கூடாது : என்று ஆன்றோர் உரைத்த இதனை விடல் எங்ஙன் எனின்.

**ப-ரை :—** இங்கு - இவ்வுலகில், விதிதன்னின்- ஊழின், மிகுவலியது இல்லை-மிகுந்த பலமுடையது இல்லை ; சதிசெயினும்-அதனைவிலக்க வஞ்சகம் செயினும், அது-அவ்விதி, வந்து தாக்கும்-வந்துவருத்தும்; அதனை - அவ்விதியை, மதியால்-புத்தியால், அடல் - வெல்லுதல், கூடாது-முடியாது ; என்று ஆன்றோர்- என்று பெரியோர், உரைத்த இதனை-கூறிய இவ்வுரையை, விடல்-நீக்குதல், எங்ஙன் எனின் - எவ்வாறு என்றால்.

**க-ரை :—** விதியை மாற்றும் திறமை மனிதனுக்கு உண்டென்றது சரி; ஆனால் ஆன்றோர் விதியானது மிக வலியுடையது; அதனை மதியால் வெல்லமுடியாதென்று கூறியிருக்கின்றனரே; அவ்வுரையைத் தள்ளுவது எவ்வாறு? என்றால்.

தான் என்பது அசை. இச்செய்யுளிற் கண்ட வினாவுக்கு விடை அடுத்தசெய்யுளில் வருகின்றது:

அவருரையி னுட்பொருளை யாதிமுன்பு சொல்வேன்.
தவறதெனக் கூறுபவர் தாழ்வர்.—புவியில்
விதைத்தவிதை யெல்லாமே மேல்விளையும். சாரும்
விதைத்தவினை யெல்லாமே மேல். (கரு)

**அ-ம் :**—அவரது உரையின் உட்பொருளை ஆதி முன்பு சொல்வேன்; அது தவறு எனக்கூறுபவர் தாழ்வர். புவியில் விதைத்த விதை எஃதோ அஃதே மேல் விளையும். (அதுபோல்) விதைத்த வினை எஃதோ அஃதே மேல் சாரும்.

**ப-ரை :**—அவர் உரையின் - அவ்வான்றோரது வாக்கின், உட்பொருளை-உட்கருத்தை, ஆதிமுன்பு-கடவுள் முன், சொல்வேன் - கூறுவேன். அது தவறு என-அது தப்பு என்று, கூறுபவர் - சொல்லுபவர், தாழ்வர் - தாழ்வையடைவர். புவியில் - பூமியில், விதைத்தவிதைஎஃது-இட்டவித்து எஃதோ, அஃதே மேல் விளையும்-அவ்வித்தே பின்னர் விளையும்; (அதுபோல) விதைத்தவினை எஃது-செய்த கருமம் எஃதோ, அஃதே மேல் சாரும்-அக்கருமமே விளைந்து வந்து பொருந்தும்.

**க-ரை.**—விதைத்த வித்துக்களே விளைந்து பலன்களாக வருவதுபோலச் செய்த கருமங்களே விளைந்து இன்பதுன்பங்களாக வந்து பொருந்தும்.

வேலவிதை மாங்கனியை மேவச்செய் யாததுபோற்
பாவவினை யின்பத்தைப் பார்க்கவிடா—தாவிங்
கெருக்கிலையின் பாலீயா தீயாது துன்பம்
பெருக்கநல்கு நல்வினைதான் பின். (கசு)

**அ-ம் :**—இங்கு வேலவிதை மாங்கனியை மேவச் செய்யாது : அதுபோல், பாவவினை இன்பத்தைப் பார்க்கவிடாது. ஆ எருக்கிலையின் பாலை ஈயாது: அது போல், பெருக்கத்தை நல்கும் நல்வினை பின் துன்பத்தை ஈயாது.

**ப-ரை :**—இங்கு - இவ்வுலகில், வேல விதை - வேல (முள்மர) வித்து, மாங்கனியை - மாம்பழத்தை, மேவச்செய்யாது-(நாம்) அடையும்படி செய்யமாட்டாது: அதுபோல்-அதுபோல, பாவவினை-பாவச்செயல், இன்பத்தை-இன்பத்தை, பார்க்கவிடாது- (நாம்) அடையவிடாது. ஆ-பசு, எருக்கிலையின் பாலை-எருக்கிலையின் பாலை, ஈயாது-கொடாது: (அதுபோல), பெருக்கம் நல்கும்-(இன்பங்களுக்கு ஏதுவாகிய) ஆக்கத்தைக் கொடுக்கும், நல்வினை-நல்ல கருமம், பின் துன்பம் ஈயாது-பின்னர் துன்பத்தைக் கொடாது.

**க-ரை :**—பாவகருமம் இன்பத்தைக் கொடுக்க மாட்டாது. புண்ணிய கருமம் துன்பத்தைக் கொடுக்கமாட்டாது.

மறவினையின் வித்திட்டால் வன்றுன் புறுமா
லறவினையின் வித்திட்டா லாரின்—புறுமிந்
நியதிநிகழ் வூழ்ிதனை நீக்கமுடி யாதென்
றியலறிந்தார் சொன்னு ரிவண். (கஎ)

**அ-ம் :**—இவண் இயலை அறிந்தார் மறவினையின் வித்தை இட்டால் வன்துன்பு உறும், அறவினையின் வித்தை இட்டால் ஆர் இன்பு உறும், இந்நியதி நிகழ்வே ஊழ், இதனை நீக்கமுடியாது என்று சொன்னார்.

**ப-ரை :**—இவண்-இவ்வுலகில்,இயல் அறிந்தார்-(விதியின்) இலக்கணத்தைத் தெரிந்தோர், மறவினையின்-பாவகர்மமாகிய, வித்தை இட்டால்-விதையை விதைத்தால், வன்துன்பு உறும்-கொடுமையான துன்

பம் வந்து பொருந்தும்; அறவினையின் - புண்ணிய கருமமாகிய, வித்து இட்டால்-விதையை விதைத்தால், ஆர் இன்பு உறும் - நிறைந்த இன்பம் வந்து பொருந்தும்; இந்நியதி நிகழ்வு - இக்கிரம நிகழ்ச்சியே, ஊழ்-விதி ; இதனை நீக்கமுடியாது-இக்கிரம நிகழ்ச்சியை விலக்க முடியாது ; என்று சொன்னார்-என்று கூறினர்.

இம்மெய்யை நன்குணர்ந்தா ரின்றுவருந் தீயூழின்
வெம்மெய்யைத் துண்டுதுண்டா வெட்டிடுவர்—தம்மெய்
யறச்செயலான் முள்ளை யரிவாள்கொண் டீர்க்குந்
திறச்செயலார் போலச் சிரித்து. (கஅ)

அ-ம் :—இம்மெய்யை நன்கு உணர்ந்தார் அரிவாளைக் கொண்டு முள்ளை ஈர்க்கும் திறச் செயலார் போலச் சிரித்து இன்று வரும் தீ ஊழின் வெம் மெய்யைத் தம் அறச் செயலால் துண்டு துண்டாக வெட்டிடுவர்.

ப-ரை :—இம் மெய்யை-(மறம் துன்பத்தையும் அறம் இன்பத்தையும் விளைக்கும் என்னும்) இவ்வுண்மையை, நன்கு உணர்ந்தார்-உள்ளூரத் தெரிந்தவர், அரிவாள் கொண்டு - (வெட்டு) அரிவாளைக் கைக்கொண்டு, முள்ளை ஈர்க்கும் - (செடியிலுள்ள) முள்களை அரியும், திறச் செயலார் போல-வலிய செயலார் போல, சிரித்து-நகைசெய்து, தம் மெய் அறச்செயலால் - தமது மெய்யான புண்ணிய வினைகளால், இன்று வரும் தீ ஊழின்-இப்பொழுது வருகின்ற கெட்டவிதியின், வெம் மெய்யை-கொ

டிய உடலை (துன்பத்தை), துண்டு துண்டா வெட்டிடுவர் - கண்டம் கண்டமாக வெட்டி ஒழித்துவிடுவர்.

**க-ரை:**—மறம் துன்பத்தையும் அறம் இன்பத்தையும் பயக்குமென்ற உண்மையை அறிந்தவர், முள்கம்பிலுள்ள முள்களை அரிவாளால் செதுக்கி எறிந்துவிட்டு அக்கம்பைத் தமது வேலைகளுக்கு உபயோகித்துக் கொள்ளும் புத்திசாலிகள் போல, இப்பொழுது வருகின்ற கெட்ட விதியின் துன்பங்களையெல்லாம் இன்பங்களாகக் கொண்டு மேன் மேலும் அறவினைகளைச் செய்து அக் கெட்ட விதியை (அறிவையும் வலியையும் தருகின்ற) நல்ல விதிகளாக உபயோகித்துக்கொள்வர்.

ஆயின் கடவு ளளிப்பதிங் கென்னெனிற்
றாய்போல் வினையைத் தடிப்பித்துச்—சேயின்
பயனை யதற்கே பயக்கும் பிதாபோற்
பயனைப் பயக்கு முயிர்க்கு. (கக)

**அ-ம்:**—ஆயின், இங்குக் கடவுள் அளிப்பது என் எனின் தாய்போல் வினையைத் தடிப்பித்து, சேயின் பயனை அதற்கே ஈயும் பிதாபோல் உயிர்க்குப் பயனைப் பயக்கும்.

**ப-ரை:**—ஆயின்-மனிதரே தத்தம் விதிகளை ஆக்குபவரும் நீக்குபவருமானல், இங்கு-இவ்வுலகில், கடவுள் அளிப்பது-கடவுள் செய்வது, என் எனின்-யாது என்றால், தாய்போல்-பிள்ளைகளை வளர்க்கும்

தாய் போல, வினையைத் தடிப்பித்து - கருமங்களை வளர்த்து, சேயின் பயனை-பிள்ளைகளின் சம்பாத்தியங்களை, அதற்கே ஈயும்-அததற்கே கொடுக்கும், பிதா போல்-தந்தைபோல, உயிர்க்கு-மனித உயிர்களுக்கு, பயனை - அதனதன் வினைப்பயன்களை, பயக்கும் - கொடுக்கும்.

க-ரை :—கடவுள் மனிதரது வினைகளைக் காத்து வளர்த்து அவரவர் வினையின் பயன்களை அவரவர்க்கு நல்குவர்.

இன்றுமறஞ் செய்கின்றா ரெண்ணரிய துன்பங்க
ளென்றுமிவண் கொண்டுதுய ரீர்நரகுட்—சென்றிடுவ
ரென்றுமிவ ணின்பமுற விச்சித்தா லின்றுமுத
னன்றுதரு நல்வினையை நாடு. (உ௰)

அ-ம் :—இன்று மறத்தைச் செய்கின்றார் இவண் என்றும் எண்ணரிய துன்பங்களைக் கொண்டு, துயர் ஈர் நரகுள் சென்றிடுவர்; இவண் என்றும் இன்பத்தை உற இச்சித்தால் நன்றைத் தரும் நல்வினையை இன்று முதல் நாடு.

ப-ரை :—இன்று-இக்காலத்து, மறம்செய்கின்றார்-பாவவினைகளைச் செய்கிற மனிதர், இவண்-இவ்வுலகில், என்றும்-(அவர்வாழும்) காலமெல்லாம், எண்ணரிய துன்பங்கள்-நினைத்தற்கரிய பலகொடிய துன்பங்களை, கொண்டு-அநுபவித்து, துயர் ஈர் நரகுள் - துன்பங்கள் உயிர்களை வருத்துகின்ற நரக உலகத்துள், சென்றிடுவர்-(மறுமையில்) புகுவர்:

இவண் என்றும்-இவ்வுலகத்தில் எக்காலத்திலும், இன்பம் உற இச்சித்தால் - இன்பங்களை அநுபவிக்க (நீ) விரும்பினால், நன்றுதரும் - இன்பங்களைக் கொடுக்காநின்ற, நல்வினையை - புண்ணிய வினைகளை, இன்று முதல்-இக்கணம் முதலாக, நாடு- விரும்பிச் செய்.

**க-ரை:**—இன்று பாவவினைகளைச் செய்கின்ற மனிதர் என்றும் கொடிய துன்பங்களை அநுபவிப்பர். என்றும் இன்பங்களை அநுபவிக்க நீ விரும்பினால், நீ இக்கணம் முதலாகவே புண்ணிய வினைகளைச் செய்யத் தொடங்கு.

## 3-ம் அதி.—உடம்பை வளர்த்தல்.

மன்னுமிந்தப் பூவுலகின் மாண்புற்ற பல்பொருளு
ளுன்னுடம்பிற் கொப்பிலையா லூக்கியதைப்—பன்னும்
பிணியெஃதுஞ் சாராது பேணிவளர்த் தென்றும்
பணியுமா றுள்வாய் பரிந்து. (உக)

**அ-ம்:**—உன் உடம்பிற்கு மன்னும் இந்தப் பூவுலகில் மாண்பு உற்ற பல்பொருளுள் ஒப்பு இல்லை. (ஆதலால்) பன்னும் பிணி எஃதும் அதைச் சாராது ஊக்கிப் பரிந்து பேணி வளர்த்து (அஃது) என்றும் பணியுமாறு (அதனை) ஆள்வாய்.

**ப-ரை:**—உன் உடம்பிற்கு-உனது சரீரத்திற்கு, மன்னும் இந்தப் பூவுலகில்-நிலைபெற்றிருக்கா நின்ற இப்புவியுலகத்தில், மாண்பு உற்ற-பெருமை பெற்ற, பல் பொருளுள்-பல பொருள்களுள், ஒப்பு இல்லை-

நிகராய பொருள் இல்லை. (ஆதலால்) பன்னும் பிணி எஃதும்-வைத்திய நூலார் கூறும் வியாதி எதுவும், சாராது - அச்சரீரத்தைப் பொருந்தாதவகை, ஊக்கிப்பரிந்து - மேன்மேலும் முயன்று வருந்தி, பேணி வளர்த்து-பாதுகாத்து வளர்த்து, என்றும் பணியுமாறு-(அஃது) எக்காலத்தும் உனது உத்தரவுகளுக்குக் கீழ்ப்படியத்தக்க விதத்தில், ஆள்வாய்-அதனை அடக்கி ஆள்வாய்.

க-ரை:—மனித உடம்பு பெறுதற்கரிய தொன்றாதலின், அதனை எவ்வித வியாதியும் பொருந்தாதவாறு காத்து, வலிமையுறுமாறு வளர்த்து, உனக்குக் கீழ்ப்படியுமாறு அடக்கி ஆள்வாய்.

ஆல் அசை.

பூதமைந்துஞ் சேர்ந்து பொருந்திவந்த வுன்னுடம்பில்
வாதமன னீர்மூன்று மாணுடைய—வாத
லியற்கையுள தாகாய மெஃதுளுமண் மூன்றன்
செயற்கையான் மாறுந் தினம். (உஉ)

அ-ம்:—பூதம் ஐந்தும் சேர்ந்து பொருந்தி வந்த உன் உடம்பில் வாதம் அனல் நீர் மூன்றும் மாணுடைய ஆதல் இயற்கை; ஆகாயம் எஃதுளும் உளது; மூன்றன் செயற்கையால் மண் தினம் மாறும்.

ப-ரை:—பூதம் ஐந்தும்-ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் ஐந்தும், சேர்ந்து பொருந்தி - கலந்து கூடியதால், வந்த உன் உடம்பில்-

தோன்றிய உனது சரீரத்தில், வாதம் அனல் நீர் மூன்றும் - வாயு தேயு அப்பு இம்மூன்றும், மாணுடைய ஆதல்-பெருமை யுடையன ஆகுதல், இயற்கை-இயல்பு ; (ஏனெனின்) ஆகாயம் எஃது ளும் உளது - ஆகாயம் எப்பொருளிலும் நிறைந்துள் ளது; மூன்றன் செயற்கையால்-வாயு தேயு அப்பு சம் பந்தத்தால், மண் தினம் மாறும்-மண்ணின் தன் மை எப்பொழுதும் மாறுதல் அடையும்.

**க-ரை:**—ஐந்து பூதங்களின் சேர்க்கையால் தோன்றிய சரீரத்தில் வாயுவும் தேயுவும் அப்பு வும் முதன்மையாக நின்று அதனை ஆளும்.

மண் ஆகுபெயர்.

உன்னுடைய பெற்றோ ருடம்பியல்பா னீயிங்கு
மன்னுகின்ற காலத்தான் மண்ணியல்பாற்-சொன்னவவை
மூன்றுஞ் சமமாகு முற்பட் டிரண்டொன்று
தோன்று மதுகாண் தொடர்ந்து. (உ௩)

**அ-ம்:**—உன்னுடைய பெற்றோரது உடம் பின் இயல்பாலும் நீ இங்கு மன்னுகின்ற காலத் தாலும் மண்ணின் இயல்பாலும் சொன்ன அவை மூன்றும் சமமாகும்; இரண்டு ஒன்று முற்பட்டுத் தோன்றும்; தொடர்ந்து அதைக் காண்.

**ப-ரை:**—உன்னுடைய பெற்றோர் — உனது தாய் தந்தையரது, உடம்பு இயல்பால் - சரீரத் தின் தன்மையாலும், நீ இங்கு மன்னுகின்ற—நீ இவ்

வுலகத்தில் பிறக்கின்ற, காலத்தால்—சீதோஷ்ண நிலைகளாலும், மண்ணின் இயல்பால் — நிலத்தின் தன்மையாலும், சொன்ன அவை மூன்றும்—மேற் சொல்லிய வாயு தேயு அப்பு என்னும் மூன்றும், சமமாகும்-அதனதன் அளவில் நிற்கும்; (அல்லது) இரண்டொன்று-அம்மூன்றில் இரண்டேனும் ஒன் றேனும், முற்பட்டுத் தோன்றும்-மேற்பட்டு நிற்கும். தொடர்ந்து - சரீரத்தைப் பற்றிநின்று, அதைக் காண்-(அம் மூன்றும் நிற்கின்ற) நிலைகளை அறிவாயாக.

**க-ரை :**—தாய் தந்தையரது சரீரநிலைமைகளையும், ஜனனகாலத்தின் நிலைமையையும், ஜனனநிலத்தின் நிலைமையையும் அநுசரித்துச் சரீரத்தில் வாதம் (வாயு), பித்தம் (தேயு), சிலேற்பனம் (நீர்) இம் மூன்றும் தன் தன் நிலையில் நிற்கும்; அல்லது ஒன்று இண்டு அதிகப்பட்டு நிற்கும். அதனை நீ அறி.

வெய்யனவுந் தண்ணியவும் வேண்டுங்காண் வாதவுடல்
வெய்யனவே தண்ணுடலம் வேண்டுங்காண்-வெய்யவுடல்
தண்ணியவே வேண்டுங்காண் சார்ந்தறிவா யுன்னுடம்பை
நண்ணியுள நீர்மைகளை நன்கு. (உ௪)

**அ-ம் :**—வாத உடல் வெய்யனவற்றையும் தண்ணியவற்றையும் வேண்டும்; தண்உடலம் வெய் யனவற்றையே வேண்டும்; வெய்யவுடல் தண்ணிய வற்றையே வேண்டும். உன் உடம்பைச் சார்ந்து நண்ணியுள்ள நீர்மைகளை நன்கு அறிவாய்.

**ப-ரை :**—வாத உடல்-வாதம் மிகுந்துள்ள சரீ ரம், வெய்யனவும்-உஷ்ண பதார்த்தங்களையும்,

தண்ணியவும்-சீத பதார்த்தங்களையும், வேண்டும்-விரும்பும்; தண் உடலம் - சிலேற்பனம் மிகுந்துள்ள சரீரம், வெய்யனவே உஷ்ண பதார்த்தங்களையே, வேண்டும்- விரும்பும்; வெய்ய உடல்-பித்தம் மிகுந்துள்ள சரீரம், தண்ணியவே-சீத பதார்த்தங்களையே, வேண்டும்-விரும்பும். உன் உடம்பை-உனது சரீரத்தை, சார்ந்து நண்ணியுள்ள-பொருந்தி நிலைத்துள்ள, நீர்மைகளை-தன்மைகளை, நன்கு அறிவாய்-நன்றாகத் தெரிவாயாக.

க-ரை:—வாதம் மிகுந்து நிற்கின்ற சரீரத்திற்கு உஷ்ணகாலத்தில் சீதபதார்த்தங்களும் சீதகாலத்தில் உஷ்ணபதார்தங்களும் பொருந்தும்; சிலேற்பனம் மிகுந்து நிற்கின்ற சரீரத்திற்கு எப்போதும் உஷ்ண பதார்த்தங்களே பொருந்தும்; பித்தம் மிகுந்து நிற்கின்ற சரீரத்திற்கு எப்போதும் சீதபதார்த்தங்களே பொருந்தும். இவ்வேதுக்களைக் கொண்டு சரீரத்தில் வாதம் பித்தம் சிலேற்பனம் எந்நிலைகளில் நிற்கின்றனவென்பதை அறிக.

நாண்மூன்றும் அசைகள்.

பார்த்துநன்கு பின்னர் பதார்த்தகுண மேற்பவற்றை
யோர்த்துணர்ந்து கொள்ளென்று முன்னலத்தைப்-பேர்க்கும்
பிறபொருள்கள் கொள்ளாய் பிணியுற்றாற்கொள்வாய்
பலபிணிகள் தீர்த்தானைப் பார்த்து. (உரு)

அ-ம் :—பின்னர் பதார்த்த குணத்தை நன்கு பார்த்து, ஏற்பவற்றை ஓர்த்து உணர்ந்து என்றும்

கொள்; உன் நலத்தைப் பேர்க்கும் பிறபொருள்களை என்றும் கொள்ளாய். பிணி உற்றால் பலபிணிகளைத் தீர்த்தானைப் பார்த்துக் கொள்வாய்.

**ப-ரை:**—பின்னர்- உனது சரீரத்தில் அம்மூன்றனது நிலைகளை நீ அறிந்த பிற்பாடு, பதார்த்த குணம் - பதார்த்தங்களின் குணங்களைப்பற்றிக் கூறும் நூலை, நன்கு பார்த்து-நன்றாகப் படித்து, ஏற்பவற்றை - உனது சரீரத்திற்குப் பொருந்துவனவற்றை, ஓர்த்து உணர்ந்து-ஆராய்ந்து தெரிந்து, என்றும் கொள்-எக்காலத்திலும் கொள்வாயாக; உன் நலத்தை - உனது சரீர ஆரோக்கியத்தை, பேர்க்கும் - கெடுக்கும், பிறபொருள்கள் - மற்றைய பொருள்களை, என்றும் கொள்ளாய்-ஒருபோதும்கொள்ளேல்; பிணியுற்றால்-வியாதி (உன்னை) உற்றால், பல பிணிகள் தீர்த்தானை-(பலர் கொண்ட) பலவியாதிகளைத் தீர்த்த வைத்தியனை, பார்த்துக் கொள்வாய்-தெரிந்துஅவனிடம் மருந்து கொள்வாயாக.

**க-ரை:**—சரீரத்தில் வாதம் பித்தம் சிலேற்பனம் என்னும் மூன்றில் எது மிகுந்து நிற்கிறதென்று தெரிந்து, பதார்த்தகுணநூலைப் படித்து, சரீரத்தில் மிகுந்து நிற்பதைச் சமப்படுத்தத் தக்க பதார்த்தங்களைக் கொள்க; அதிகப்படுத்தத் தக்க பதார்த்தங்களைக் கொள்ளற்க; வியாதி யுற்றால் பல வியாதிகளைத் தீர்த்து அநுபவம் முதிர்ந்த வைத்தியனைத் தெரிந்து உடனே மருந்து கொள்க.

வைகறையிற் கண்விழித்து மாசொழித்து மெய்யறங்கள்
கைவருதற் கீசனருள் கண்ணிப்பின்—மையல்
அறுத்தற்கா நூனன்காய்ந் தியானையுர மெய்யிற்
செறுத்தற்கா நற்சிலம்பம் செய். (உசு)

**அ-ம்** :—வைகறையில் கண்ணை விழித்து, மாசை ஒழித்து, மெய்யறங்கள் கைவருதற்கு ஈசனது அருளைக் கண்ணி, பின் மையலை அறுத்தற்கு ஆம் நூலை நன்கு ஆய்ந்து, யானையின் உரம் மெய்யில் செறுத்தற்கு ஆம் நல் சிலம்பத்தைச் செய்.

**ப-ரை** :—வைகறையில்-இரவு மூன்றாம் சாமத்தில், கண் விழித்து - துயிலை ஒழித்து, மாசு ஒழித்து-ஜலம் மலங்களைக் கழித்து, மெய்யறங்கள்-உண்மையான தருமங்கள், கைவருதற்கு-கைகூடுதற்காக, ஈசன் அருள் - கடவுளது கிருபையை, கண்ணி-சிந்தித்து, பின்-பின்னர், மையல் அறுத்தற்கு-மயக்கத்தை ஒழித்தற்கு, ஆம் நூலை-ஆகும் நூல்களை, நன்கு ஆய்ந்து-விபரீதம் ஐயம் நீங்குமாறு கற்று, யானை உரம் - ஒருயானையின் பலம், மெய்யில்-சரீரத்தில், செறுத்தற்கு-பொருந்துதற்கு, ஆம் நல் சிலம்பம்-ஆகும் நல்ல சிலம்பப் பயிற்சிகளை, செய் -செய்வாயாக.

**க-ரை** :—சூரிய உதயத்திற்கு ஒரு சாம நேரத்திற்கு முன்னர்ப் படுக்கையை விட்டு எழுந்திருந்து, ஜல மலங்களைக் கழித்து, அறங்களைச் செய்யும் பாக்கியத்தைக் கொடுக்கவேண்டுமென்ற பிரார்த்தனை

யோடு கடவுளைத் தியானித்து, அறநூல்களைக் கற்று,
சிலம்பப் பயிற்சிகளைச் செய்.
காலையிலே மாவேறிக் காதவழி சென்றுவந்து
சோலையிலே சற்றிருந்து சோர்வகற்றிப்-பாலினெய்யி
லட்டவுண வுண்டுதயத் தப்பாலுன் வேலைகளைத்
திட்டப் படிநன்கு செய். (உஎ)

அ-ம் :—காலையில் மாமேல் ஏறிக் காதவழி சென்றுவந்து, சோலையில் சற்று இருந்து சோர்வை அகற்றி, பாலிலோ நெய்யிலோ அட்ட உணவை உதயத்து உண்டு, அப்பால் உன் வேலைகளைத் திட்டப்படி நன்கு செய்.

ப - ரை :—காலையில் - அதிகாலையில், மா ஏறி-குதிரைமீது ஏறி, காதவழி-ஏழரை நாழிகைத் தூரம், சென்றுவந்து - சவாரிசெய்து போய்த் திரும்பி வந்து, சோலையில்-நன்மலர்க்காவில், சற்று-சிறிது நேரம், இருந்து-தங்கி, சோர்வு அகற்றி-களைப்பை நீக்கி, பாலில் நெய்யில் அட்ட-பாலிலாவது நெய்யிலாவது சமைத்த, உணவு-உணவை, உதயத்து உண்டு-சூரிய உதய நேரத்தில் உட்கொண்டு, அப்பால் - பின்னர், உன்வேலைகளை - உனது லௌகிகத்தொழில்களை, திட்டப்படி-குறித்த அளவு, நன்கு செய்-திருந்தச் செய்.

க-ரை :—அதிகாலையில் குதிரைச்சவாரி செய்து வந்து, பூஞ்சோலையில் தங்கி அயர்வையை நீக்கி, சூரிய உதய சமயத்தில் பாலிலாவது நெய்யிலாவது

சமைத்த உணவை உண்டு, பின்னர்ப் பொருள் வருவாய்க் குரிய தொழில்களைச் செய்.

பிரிநிலை ஓகாரங்கள் தொக்கன. பிரிநிலை ஏகாரங்கள் உதயத்தையும், வீசுதல் முதலியவற்றையும், விலக்கிநின்றன.

மதியம் வருமுன்னர் வாழ்நீர் குளித்துப்
புதியகறி நெய்தயிர்நெற் பொங்கல்-பசியளவிற்
குண்டிருந்து வெற்றிலைப்பாக் கூறுநீர் மூன்றருந்திக்
கண்டிருப்பாய் வேலை களை. (உஅ)

**அ-ம்** :—மதியம் வரும் முன்னர் வாழ்நீரில் குளித்து, புதிய நெய்யோடும் கறியோடும் தயிரோடும் நெல் பொங்கலைப் பசியளவிற்கு உண்டு, இருந்து, வெற்றிலைப் பாக்கில் ஊறு நீரில் மூன்றை அருந்தி, வேலைகளைக் கண்டிருப்பாய்.

**ப-ரை** :—மதியம் வரும் முன்னர்-பகல் பதினைந்து நாழிகை வருவதற்குமுன், வாழ் நீர் குளித்து-குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து, புதிய நெய் கறி தயிரோடும்-அப் பொழுது சித்தப்படுத்தப் பட்டநெய்யோடும் கறியோடும் தயிரோடும், நெல் பொங்கல் - அப்பொழுது ஆக்கப்பட்ட பச்சரிசிச் சாதத்தை, பசி அளவிற்கு-பசி நீங்கத்தக்க அளவு வரை, உண்டு - சாப்பிட்டு, இருந்து -(ஒரு சௌகரியமான இடத்தில்) அமர்ந்து, வெற்றிலைப் பாக்கு ஊறு நீர்-வெற்றிலை பாக்கு முதலியவற்றை வாயிலிட்டு அதில் ஊறுகின்ற நீரில், மூன்று அருந்தி -

முதல் இரண்டு முறை ஊறிய நீரைவிலக்கி மூன்றும் முறை ஊறிய நீரை உட்கொண்டு, வேலைகளைக் கண் டிருப்பாய் - மற்றவர் செய்யும் உனது வேலைகளைப் பார்த்துக்கொண் டிருப்பாயாக.

க-ரை :—பகல் பதினைந்து நாழிகைக்கு முன் சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்து, புதிதாகச் சமைக்கப்பட்ட பச்சரிசிச் சாதத்தைப் புதிதாகச் செய்யப்பட்ட கறிகளோடும் புதிதாக உருக்கப் பட்ட நெய்யோடும் முதல் நாள் பாலில் உறைக்கப் பட்ட தயிரோடும் சேர்த்து உண்டு, ஓர் இடத்தில் அமர்ந்து, வெற்றிலை பாக்கு முதலியவற்றைச்சுவை த்து, அவற்றில் ஊறுகின்ற ஜலத்தில் முதல் இரண்டு முறை ஜலத்தை உமிழ்ந்து விட்டு மூன்றும் முறை ஊறும் ஜலத்தை உட்கொண்டு, (மற்றையவற்றை உமிழ்ந்து விட்டு) பிறரால் செய்யப்படும் உனது வேலைகளைப் பார்வை யிடு.

வாழ் என்பது வெந்நீரை விலக்கி நின்றது. புதிய என்பது முந்திய பொழுதுகளில் சித்தப்படுத்தப் பட்ட நெய் முதலியவற்றை விலக்கி நின்றது. செய்யு ளுக்கு இயைந்தவாறு கறி, நெய், என்பவை முன் பின் னாக மாற்றி வைக்கப்பட்டன. கண்டிருப்பாய்என்பது கடுமையான வேலைகளை விலக்கி நின்றது.

மாலை மலங்கழித்து மாணீசன் றுடொழுது
நாலைந்து நாழிகைக்கு ணன்கட்ட-பாலினெய்யிற்
கோதுமைசேர்த் துண்டு குறுநடைபின் கொண்டுதுயின்
மாதுமதிக் கோர்கான் மருவு. (உக)

**அ-ம்** :—மாலையில் மலத்தைக் கழித்து, மாண் ஈசனது தாளைத் தொழுது, நன்கு அட்ட கோது மையை நெய்யோடும் பாலோடும் சேர்த்து நாலைந்து நாழிகைக்குள் உண்டு, பின் குறுநடையைக் கொண்டு துயில்; மதிக்கு ஓர் கால் மாதை மருவு.

**ப-ரை** :—மாலை - சூரிய அஸ்தமன சமயத்தில், மலம் கழித்து - மலஜலங்களைக் கழித்து, மாண் . ஈசன் தாள் தொழுது - மாட்சிமை பொருந்திய கடவுளது அருளடியைச் சிந்தித்து வணங்கி, நன்கு அட்ட கோதுமையை நெய்யோடும் பாலோடும் சேர்த்து - நன்ருகச் சமைக்கப்பட்ட கோதுமையரிசி உணவை நன்ருகக் காய்ச்சப் பட்ட நெய்யோடும் பாலோடும் சேர்த்து, நாலு ஐந்து நாழிகைக்குள் - இரவு நான்கு நாழிகைக்கு மேல் ஐந்து நாழிகைக் குள்ளாக, உண்டு - சாப்பிட்டு, பின் குறுநடை கொண்டு - பின்னர் சிறிது நேரம் மெதுவாக உலாவி, துயில் - உறங்குவாயாக; மதிக்கு ஓர் கால் - மாதத்திற்கு ஒரு முறை, மாது - மனைவியை, மருவு - கூடு.

**க-ரை** :—மாலையிலும் மலஜலங்களைக் கழிக்க வேண்டும்; கடவுளைத் தியானிக்க வேண்டும்; மாலை ஐந்து நாழிகைக்குள் நன்ருகச் சமைக்கப்பட்ட கோதுமையரிசிஉணவை நெய் பால்களோடு சாப்பிட வேண்டும். அதன் பின்னர் சிறிது நேரம் மெதுவாக உலாவ வேண்டும்; பின்னரே நித்திரைக்குச் செல்ல வேண்டும். மாதத்திற்குஒரு முறையே மனைவியோடு சேர வேண்டும்.

வமனநசி யம்பேதி மன்னுறீர் நான்காய்
அமர்மதியி லஞ்சன நெய் சௌள—மமரிரண்டு
மூன்றெட்டு நாளிற்கொள் முந்துமல நீர்கழிக்கத்
தோன்றுபகற் றுஞ்சலிராத் துஞ்சு. (௩௰)

அ-ம்:—வமனத்தையும் நசியத்தையும் பேதியையும், ஆறு, இரண்டு, நான்காய் அமர் மதியில் கொள்; அஞ்சனத்தையும், நெய்யையும், சௌளத்தையும் அமர் இரண்டு, மூன்று, எட்டு நாளில் கொள்; மலத்தையும் நீரையும் கழிக்க முந்து; தோன்று பகலில் துஞ்சல்; இராவில் துஞ்சு.

ப-ரை:—வமனம் நசியம் பேதி-வாந்தியை உண்டுபண்ணும் மருந்தையும் செவிநோய் மூக்குநோய் உண்டாகாமல் தடுப்பதற்காக அவற்றில் வார்க்கப் படும் மருந்துகளையும் பேதியை உண்டுபண்ணும் மருந்தையும், ஆறு இரண்டு நான்காய் அமர் மதியில் கொள் - (முறையே) ஆறு இரண்டு நான்காய்ப்பொருந்தி வருகிற மாதங்களில் கொள்வாயாக; அஞ்சனம் நெய் சௌளம்-கண்நோய் உண்டாகாது தடுத்தற்காக அதில் இடும் மருந்தையும் எண்ணெய் முழுக்கையும் சௌளத்தையும், அமர் இரண்டு மூன்று எட்டு நாளில் கொள் - (முறையே) நிலையாகவரும் இரண்டு மூன்று எட்டு நாள்களில் கொள்வாயாக; மலம் நீர் கழிக்க முந்து-மலத்தையும் ஜலத்தையும் கழிக்கவேண்டிய நேரங்களில் தாமதம் செய்யாது கழிப்பாயாக; தோன்று பகல்-பல உயிர்கள் இயங்குகின்ற பகல் காலத்

தில், துஞ்சல்-நித்திரை செய்யாதே; இரா துஞ்சு-இராக்காலத்தில் உறங்கு.

**க-ரை:**—சரீரத்தை வியாதி பற்றாது தடுப்பதற்கு இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன செயல்களைச் செய்யவேண்டுமென்பது கூறப்பட்டது. செய்யுளுக்கு நிரல் நிறையாகப் பொருள் கொள்ளப்பட்டது.

## ௭-ம் அதி.—மனத்தை யாள்தல்.

மனமென்ற தீநினைப்பை மாணான்மா தன்னி
னினமென்று பின்பற்ற விங்குத்—தினமும்
வருந்துமுடம் புற்றிடவும் வாழ்நாளெல் லாந்துன்
பருந்திடவு நேர்ந்த தறி. (௬க)

**அ-ம்:**—மனம் என்ற தீ நினைப்பை மாண் ஆன்மா தன்னின் இனம் என்று பின்பற்ற, இங்குத் தினமும் வருந்தும் உடம்பை உற்றிடவும் வாழ் நாளில் எல்லாம் துன்பை அருந்திடவும் நேர்ந்தது அறி.

**ப-ரை:**—மனம் என்றதீ நினைப்பை - உள்ளம் என்ற தீய நினைப்பை, மாண் ஆன்மா - மாட்சியுற்ற ஆன்மா, தன்னின் இனமென்று - தனது சுற்றமென்று கருதி, பின்பற்ற-தான் (ஆன்மா) அதன் பின் செல்ல, இங்கு - இவ்வுலகில், தினமும்-நாள் தோறும், வருந்தும் உடம்பு-துன்பங்களைப் பொருந்துகின்ற சரீரத்தை, உற்றிடவும் கொள்ளவும், வாழ் நாள் எல்லாம் - ஜீவிக்கும் காலத்திலெல்லாம், துன்பு

அருந்திடவும் - பல துன்பங்களை அநுபவிக்கவும், நேர்ந்தது-சம்பவித்தது, அறி-(இதனை) அறிவாயாக.

**க-ரை:**—ஆன்மாவானது தீய நினைப்புக்களைக் கொண்ட காரணத்தாலேயே துன்பத்திற்கு உறைவிடமாகிய சரீரத்தைக் கொள்ளவும ஜீவகாலமெல்லாம் துன்பங்களை அநுபவிக்கவும் நேர்ந்தது.

மனந்தா னுனைக்கெடுக்கு மாறுப் பகையின்
இனந்தானென் றெஞ்ஞான்று மெண்ணி—மனந்தன்
செயலெல்லாம் பார்த்ததனைச் சீரியவற் றுய்ப்பின்
அயலெல்லாம் போமழிந்து. (௩௨)

**அ-ம்:**—மனம் உன்னைக் கெடுக்கும் மாறுப் பகையின் இனம் என்று எஞ்ஞான்றும் எண்ணி, மனம் தன் செயலையெல்லாம் பார்த்துச் சீரியவற்றில் அதனை உய்ப்பின் அயலெல்லாம் அழிந்துபோம்.

**ப-ரை:**—மனம்-மனமானது, உன்னைக் கெடுக்கும்-உனக்குக் கெடுதல் புரியும், மாறுப் பகையின்-தீய பகையின், இனம் என்று-உறவு என்று, எஞ்ஞான்றும் எண்ணி-எப்பொழுதும் சிந்தித்து, மனம் தன்-மனத்தின், செயல் எல்லாம்-செயல்களையெல்லாம், பார்த்து - கவனித்து, சீரியவற்று-நல்ல விஷயங்களில், அதனை - அம்மனத்தை, உய்ப்பின் - செலுத்தின், அயல்எல்லாம் -(உன்னைப்பற்றிய) தீயவையெல்லாம், அழிந்துபோம் - நாசமடைந்து போம்.

**க-ரை:**—மனமானது உனக்குக் கெடுதி செய்யும் பகையின் இனமென்று நினைத்து, அது பற்றும் விஷயங்களை யெல்லாம் கவனித்து, அது நல்ல விஷயங்களில் மாத்திரம் செல்லும்படி செய்வாயாயின், உன்னைப்பற்றிய தீயவையாவும் அழிந்துபோம்.

தான் இரண்டும் அசைகள்.

மனத்தின்பின் செல்லாது மாணறங்கள் சார்ந்த
புனத்தின்பி னித்தமதைப் போக்கின்-றனத்தும்
பிறவற்றுஞ் சால்பெய்திப் பேரின்ப வெள்ளத்
திறவற்று வாழ்வா யிவண். (௩௩)

**அ-ம்:**—(நீ) மனத்தின் பின் செல்லாது, (நீ) அதனை மாண் அறங்கள் சார்ந்த புனத்தின் பின் நித்தம் போக்கின், (நீ) இவண் தனத்தும் பிறவற்றும் சால்பு எய்தி, இறவற்றுப் பேரின்ப வெள்ளத்து வாழ்வாய்.

**ப-ரை:**—மனத்தின் பின் செல்லாது - (உன்) மனம் போன போக்கிலே போகாது, அதை- (நீ)அம் மனத்தை, மாண் அறங்கள்-சிறந்த தருமங்கள், சார்ந்த புனத்தின் பின்-பொருந்திய கொல்லையின் பின்னர், போக்கின்-செலுத்துவாயாயின், இவண்-(நீ)இவ்வுலகத்தில், தனத்தும்-செல்வத்திலும், பிறவற்றும்-அறிவு ஆரோக்கியம் முதலியவற்றிலும், சால்பு எய்தி-நிறைவையடைந்து, இறவற்று-அழிவில்லாது, பேரின்ப வெள்ளத்து-நிரதிசயாநந்தப் பெருக்கில், வாழ்வாய்-எப்பொழுதும் வாழ்ந்திருப்பாய்.

**க-ரை** :—உனது மனம் போன போக்கிலே போகாது, நீ உனது மனத்தை அறநெறியில் செலுத்துவாயாயின், நீ இவ்வுலகத்தில் செல்வம் அறிவு ஆரோக்கியம் முதலியவற்றை அடைந்து, நீ அழிவற்று மோக்ஷ இன்பத்தில் வாழ்ந்திருப்பாய்.

சகல செல்வங்களுக்கும் இன்பங்களுக்கும் அறநெறி ஏதுவாதலால், அந்நெறியை உலகப்பொருள்களுக்கும் இன்பங்களுக்கும் ஏதுவாயபுனமென்று கூறப்பட்டது.

பொறிவாயி லைந்தும் புகலரிய தீய
செறிவாயி லவ்வைந்திற் சென்றிங்-கறிவாய்
மறனெல்லா மீட்டி வலனெல்லாம் போக்கி
யறனெல்லாந் தேய்க்கு மகம். (௩௪)

**அ-ம்** :—பொறிவாயில் ஐந்தும் புகலரிய தீய செறி வாயில். அகம் அவ்வைந்தில் சென்று இங்கு மறனையெல்லாம் ஈட்டி, வலனையெல்லாம் போக்கி, அறனையெல்லாம் தேய்க்கும்.

**ப-ரை** :—பொறிவாயில் ஐந்தும்-மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து வழிகளும், புகலரிய-சொல்லுதற்கரிய, தீய-தீயவிஷயங்களை, செறி வாயில்-கொள்கின்ற வழிகள். அகம்-மனமானது, அவ்வைந்தில் சென்று-அவ்வைந்து வழிகளிலும் போய், மறன் எல்லாம்-பாவங்களை யெல்லாம், ஈட்டி- சேகரித்து,வலன் எல்லாம்-பலவகை வலிகளையும், போக்கி-தொலைத்து, அறன் எல்லாம்-தருமங்களை யெல்லாம், தேய்க்கும்-அழிக்கும்.

**க-ரை :**—ஞானேந்திரியங்கள் ஐந்தும் தீய விஷயங்களைக் கொள்கின்ற வழிகள். மனமானது அவ்வைந்து வழிகள் மூலமாகவும் சென்று, பாவங்களைச் செய்து, வலிகளைப் போக்கி, தருமங்களை அழிக்கும்.

உளம்பொறியிற் சென்றுநித்த மோடிவிழு கின்ற
களம்பலவு முன்னோடிக் கண்டு - விளம்பதற்கு
நன்மைதரு மிந்திந்து நன்மையொழித் தல்லனிறை
இன்மைதரு மிந்திந்திங் கென்று. (௩௫)

**அ-ம் :**—நித்தம் உளம் பொறியில் சென்று ஓடி விழுகின்ற களம் பலவற்றையும் (நீ) முன் ஓடிக் கண்டு, இங்கு இந்து இந்து நன்மையைத் தரும், இந்து இந்து அல்லலை நிறை இன்மையைத் தரும் என்று அதற்கு விளம்பு.

**ப-ரை :**—நித்தம்-ஒவ்வொரு நாளும், உளம் - மனமானது, பொறியில் சென்று - ஐம்பொறி வழிகளில் புகுந்து, ஓடி விழுகின்ற-விரைந்து போய்ப் பற்றுகின்ற, களம் பலவும்-விஷயங்கள் பலவற்றையும், முன் ஓடிக் கண்டு-(நீ) அதற்கு முன்னர் ஓடிப் போய்ப் பார்த்து, இங்கு-இவ்வுலகத்தில், இந்து இந்து-இந்த இந்த விஷயம், நன்மை தரும்-இன்பத்திற் கேதுவாகிய செல்வத்தைக் கொடுக்கும், இந்து இந்து-இந்த இந்த விஷயங்கள், அல்லல்நிறை-துன்பங்களை நிறைக்காநின்ற, இன்மை தரும்-வறுமையைக் கொடுக்கும், என்று அதற்கு விளம்பு - என்று (நீ) அம்மனத்திற்குச் சொல்.

**க-ரை :**—நீ உனது மனம் நினைக்கும் விஷயங்களை ஆராய்ந்து, அவற்றில் இன்ன இன்னவை ஆக்கத்தைக் கொடுக்கும், இன்ன இன்னவை கேட்டைக் கொடுக்கும் என்று உனது மனத்திற்குச் சொல்.

உன்னுரையைக் கேளா துளம்பின்னுந் தீயவுறின்
சொன்னபொறி யைந்தனையுந் தொல்லுலகின்-மன்னு
மறப்பொருள்கள் சேராத மார்க்கத்திற் சென்மெய்த்
திறப்பொருளை யென்றுஞ்சிந் தித்து. (௩௬)

**அ-ம் :**—உளம் உன் உரையைக் கேளாது பின்னும் தீயவற்றை உறின், (நீ) என்றும் மெய்த் திறப் பொருளைச் சிந்தித்து, தொல் உலகில் மன்னும் மறப் பொருள்கள் சொன்ன பொறி ஐந்தனையும் சேராத மார்க்கத்தில் செல்.

**ப-ரை :**—உளம்-மனமானது, உன்உரையைக் கேளாது-நீ சொல்லியவற்றைக் கொள்ளாது, பின்னும் தீய உறின்-பின்னரும் தீய விஷயங்களைப் பற்றுமாயின், என்றும் மெய்த்திறப் பொருளை - (நீ) எப்பொழுதும் உண்மையானவலியுள்ள(பரம்)பொருளை, சிந்தித்து-தியானித்து, தொல் உலகில் மன்னும்-பழமையான உலகத்தில் பொருந்தி நிற்காநின்ற, மறப் பொருள்கள் - பாவ நிமித்தங்களாகிய பொருள்கள், சொன்ன பொறி ஐந்தனையும்-முன் சொல்லிய மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்தையும், சேராத மார்க்கத்தில் செல்-பொருந்தாத வழியில் செல்.

**க-ரை**:—இன்ன பொருள்களைப் பற்றினால் துன் பங்கள் வந்து சேருமென்று நீ சொல்லியதை உனது மனமானது கேளாமல் திரும்பவும் அப்பொருள் களில் செல்லுமாயின், உனது பொறிகளை அப்பொ ருள்கள் சேர முடியாத மார்க்கத்திற் செல்.

உளஞ்செறியு மைம்பொறியு மொன்றியுள மெய்யை
வளஞ்செய்யு மூணெல்லா மாற்றி—யிளஞ்சிறுவ
ருண்பவற்றைக் கொண்டுமுன ருண்டவள வின்முக்கால்
நண்பகலி லுண்குளித்து நன்கு. (௩௭)

**அ-ம்**:—உளம் செறியும் ஐம்பொறியும் ஒன்றி யுள மெய்யை வளம் செய்யும் ஊணை எல்லாம் மாற்றி, நண்பகலில் நன்கு குளித்து, இளம் சிறுவர் உண்ப வற்றைக் கொண்டு, (நீ) முன்னர் உண்ட அளவில் முக்கால் உண்.

**ப-ரை**:—உளம்-மனமானது, செறியும்-பற்றும், ஐம் பொறியும்-ஐந்து ஞானேந்திரியங்களும், ஒன்றி யுள - பொருந்தியுள்ள, மெய்யை - உடம்பை, வளம் செய்யும்-கொழுக்கச்செய்யும், ஊண் எல்லாம்-(நெய், கோதுமை, பச்சரிசி, உழுந்து முதலியவை சம்பந் தித்த) உணவுகளை யெல்லாம், மாற்றி-நீக்கி, நண்ப கலில்-பகல் பத்து நாழிகைக்கு மேல் இருபது நாழி கைக்குள், நன்கு குளித்து-நன்றாக ஸ்நானம்செய்து, இளம் சிறுவர்-குழந்தைகள், உண்பவற்றை-உண்ணும் (புழுங்கலரிசி, பச்சைப்பயறு, பால் முதலியவை சம்பந்தித்த) உணவுகளை, கொண்டு - (தெரிந்து) கொண்டு, முனர் உண்ட அளவில்-(நீ) முன்பு உண்டு

கொண்டிருந்த அளவில், முக்கால் உண் - முக்கால் பாகம் சாப்பிடு.

**க-ரை :**—உனது உடம்பைக் கொழுக்கச் செய்யும் உணவுகள் இன்னவென்று தெரிந்து, அவற்றை நீக்கி, உனது உடம்பைக் கொழுக்கச் செய்யாத உணவுகளைத் தெரிந்து, முன் நீ சாப்பிட்ட அளவில் முக்கால் பாகம் பகல் ஒரு போது மாத்திரம் உண்.

இரவுநடுச் சாமத்தி லெஞ்ஞான்றுந் தூங்கு
பரவுபிற நேரமெலாம் பார்நூல்—கரவி
லுனதுமனம் வேண்டுமென வுன்னுகின்ற தீய
வுனதுபொறி யைச்சேரா தோடு. (௩அ)

**அ-ம் :**—எஞ்ஞான்றும் இரவு நடுச்சாமத்தில் தூங்கு; பரவு பிற நேரத்தில் எல்லாம் நூலைப் பார்; உனது மனம் கரவில் வேண்டுமென உன்னுகின்ற தீய உனது பொறியைச் சேராது ஓடு.

**ப-ரை :**—எஞ்ஞான்றும் - ஒவ்வொரு நாளும், இரவு நடுச்சாமத்தில்-இராத்திரியில் பத்து நாழிகை முதல் இருபது நாழிகைவரை, தூங்கு - நித்திரை செய்; பரவு பிற நேரம் எல்லாம்-பரவுகின்ற மற்றைய சாமங்களிலெல்லாம், நூல் பார் - அறநூல்களை ஆராய்ச்சி செய்; உனது மனம் - உன்னுடைய மனமானது, கரவில் - பிறர் அறியாமல், வேண்டுமென- கொள்ளவேண்டுமென்று, உன்னுகின்ற - கருதுகின்ற, தீய-கெட்ட பொருள்கள், உனது பொறியை - உன்னுடைய ஞானேந்திரியங்களை, சேராது-நெருங்

காதவாறு, ஓடு-(அப்பொருள்கள் உள்ள இடங்களை விட்டு) விரைந்து நீங்கு.

க-ரை :—ஒவ்வொரு நாளும் இராத்திரியில் பத்து நாழிகை முதல் இருபது நாழிகைவரை உறங்கு; மற்றைய நேரமெல்லாம் அறநூல்களை ஆராய்ச்சி செய்; உனது மனமானது பிறருக்குத் தெரியாமல் கொள்ளவேண்டுமென்று கருதுகிற கெட்டபொருள்கள் உனது ஞானேந்திரியங்களை நெருங்காதபடி நீ அவை யுள்ள இடங்களை விட்டு விரைந்து நீங்கு.

வனத்தை யடைந்தங்கண் வாழ்தனித்து நன்குன்
மனத்தை வசப்படுத்து மட்டுந்—தனத்தை
நிலத்தை மகளிரை நெஞ்சத்துட் கொள்ளா
வலத்தை யணைந்து மகிழ்ந்து. (நகூ)

அ-ம் :—(நீ) வனத்தை அடைந்து, உன் மனத்தை நன்கு வசப்படுத்தும் மட்டும் தனத்தையும் நிலத்தையும் மகளிரையும் நெஞ்சத்துள் கொள்ளாத வலத்தை அணைந்து மகிழ்ந்து, அங்கண் தனித்து வாழ்.

ப-ரை :—வனத்தை அடைந்து - நன்மரங்கள் அடர்ந்த ஒரு காட்டிற்குச் சென்று, உன் மனத்தை- உனது நினைப்பை, நன்கு வசப்படுத்தும் மட்டும்-நன்றாக அடக்கியாளும் காலம் வரை, தனத்தை நிலத்தை மகளிரை-பொன் முதலிய வற்றையும் வீடு முதலிய வற்றையும் மனைவி முதலியவர்களையும், நெஞ்சத்துள் கொள்ளா - (உனது) நினைப்பில் கொள்ளாத,

வலத்தை அணைந்து - வலிமையைப் பொருந்தி, மகிழ்ந்து - இன்பமுற்று, அங்கண் தனித்து வாழ்- அங்குத் தனிமையாக வாழ்ந்து கொண்டிரு.

க-ரை:—நீ நன்மரங்கள் அடர்ந்துள்ள ஒரு காட்டிற்குச் சென்று, உனது மனம் உனக்கு வசப் படும் வரை, மண்ணையும் பொன்னையும் பெண்ணையும் நினையாது, அங்குத் தனித்து வாழ்.

மனந்தா னுனக்கு வசப்பட் டடங்குந்
தினந்தா னுனக்குநலன் சேர்நாள்—தனந்தா
னறந்தா னரசுதா னுன்றெங்கு நிற்பான்
திறந்தா னிலவுமுனைச் சேர்ந்து. (சம)

அ-ம்:—மனம் உனக்கு வசப்பட்டு அடங்கும் தினமே உனக்கு நலன் சேர் நாள். (அன்று முதல்) தனமும் அறமும் அரசும் எங்கும் ஊன்று நிற்பானது திறமும் உன்னைச் சேர்ந்து நிலவும்.

ப-ரை:—மனம்-மனமானது, உனக்கு வசப்பட்டு- உனக்குஇணங்கி, அடங்கும்தினம்தான்-கீழ்ப்படும்நாளே, உனக்கு நலன் சேர் நாள்-உனக்கு நன்மைகளெல்லாம் வந்து சேரும் (நல்ல) நாள். தனம் - (அன்று முதல்) எட்டு வகைச் செல்வங்களும், அறம்-முப்பத்திரண்டு அறங்களும், அரசு - பலதேச அரசுகளும், எங்கும் ஊன்று நிற்பான் திறமும்- எவ்விடத்திலும் நிறைந்து, விளங்குகின்ற இறைவனது சர்வ வல்லமையும், உனைச் சேர்ந்து நிலவும் - உன்னைப் பொருந்தி நிற்கும்.

**க-ரை:**—உனது மனம் உனக்கு வசப்பட்டு அடங்கும் நாளே உனக்கு நன்மைகளெல்லாம் சேரும் நாள். அஃது உனக்கு வசப்பட்டு அடங்கியது முதல் சகல செல்வங்களும், தருமங்களும், அரசுகளும், கடவுளது சர்வவல்லமையும், உனக்குச் சித்திக்கும்.

*தான் ஐந்தும் அசைகள்.*

## 5-ம் அதி.—தன்னிலையில் நிற்றல்.

*தன்னிலையி னில்லாது தாரணியில் வாழ்ந்திடுதல்*
*புன்னிலையி னிற்றலெனப் போதித்தார்—நன்னிலைய*
*ராதலினு னீயின்றே யந்நிலையை யெய்தமறை*
*யோதுநெறி சொல்வே னுவந்து.* (சக)

**அ-ம்:**—*தன் நிலையில் நில்லாது தாரணியில் வாழ்ந்திடுதல் புல்நிலையில் நிற்றல் என நல்நிலையர் போதித்தார். ஆதலினால், நீ அந்நிலையை இன்றே எய்த, மறை ஓதும் நெறியை உவந்து (உனக்குச்) சொல்வேன.*

**ப-ரை:**—*தன் நிலையில்-தன் எதார்த்த நிலையில், நில்லாது-நில்லாமல், தாரணியில்-இப்புவியில், வாழ்ந்திடுதல் - வாழ்தல், புல்நிலையில் - இழிந்த நிலையில், நிற்றல் என - நிற்றலாகு மென்று, நல்நிலையர் - நல்ல ஒழுக்கத்தவர், போதித்தார்-உபதேசித்தார். ஆதலினால்-ஆதலால், நீ அந்நிலையை-நீ அவ்வுனது நிலையை, இன்றே எய்த-இன்றைக்கே அடைதற்கு, மறை*

ஓதும் நெறி-வேதங்கள் கூறுகின்ற மார்க்கத்தை, உவந்து சொல்வேன் - மகிழ்ந்து (உனக்குக்) கூறுவேன்.

க-ரை :—தன்நிலை தவறி நிற்றல் இழிந்த நிலையில் நிற்றலாமென்று நல்ல ஒழுக்கத்தவர் கூறுகின்றனர். ஆதலால், நீ உனது நிலையை அடையுமாறு வேதங்கள் கூறுகின்ற மார்க்கத்தை உனக்குக் கூறுவேன்.

உன்னியல்பை முன்ன ருரைத்துள்ளே னன்றாக
வுன்னியதை மேன்மேலு மூக்கமுட—னுன்னியல்பை
நீயென்றுங் கைக்கொண்டு நிற்பாயே னீமெய்யின்
சேயென்று காண்பாய் சிறந்து. (சஉ)

அ-ம் :—உன் இயல்பை முன்னர் உரைத்துள்ளேன். (நீ) அதனை நன்றாக மேல்மேலும் ஊக்கத்துடன் உன்னி, நீ உன் இயல்பை என்றும் கைக்கொண்டு நிற்பாயேல், நீ சிறந்து மெய்யின் சேய் என்று காண்பாய்.

ப-ரை:—உன் இயல்பை-உனது இலக்கணங்களை; முன்னர் உரைத்துள்ளேன் - முதல் அதிகாரத்தில் கூறியுள்ளேன். அதை நன்றாக-(நீ) அதனைச் சரியாக, மேல்மேலும் ஊக்கமுடன் உன்னி-மேலும் மேலும் ஊக்கத்தோடு நினைந்து, (நீ) உன் இயல்பை - நீ உனது இலக்கணங்களை, கைக்கொண்டு நிற்பாயேல்-விடாது நிற்பாயானல், நீ சிறந்து - நீ சிறப்புற்று, மெய்யின் - (நீ) மெய்ப்பொருளினது, சேய் என்று - குழந்தை என்று, காண்பாய்-அறிவாய்.

க-ரை:—முதல் அதிகாரத்தில் நான் கூறியுள்ள உன் இலக்கணங்களை நீ என்றென்றும் நினைந்து கைக்கொண்டு நிற்பாயேல், நீ மேம்பாடுற்று நீ கடவுளது குழந்தையென்று தெரிந்துகொள்வாய்.

தேயமெலாங் காண்டற்குத் தேரூர்வான் செய்வதொத்து
மாயமனம் பூட்டியுள மாணுடம்பைத் — தூய
நிலைமையுற வைத்தாள்த னீசெய்ப வற்றுள்
தலைமையுறு மொன்று தனித்து. (சங)

அ-ம்:—தேயத்தை எல்லாம் காண்டற்குத் தேரை ஊர்வான் செய்வது ஒத்து, மாய மனத்தைப் பூட்டியுள்ள மாண் உடம்பைத் தூயநிலைமையே உற வைத்து ஆள்தல் நீ செய்பவற்றுள் தனித்துத் தலைமை உறும் ஒன்று.

ப-ரை:—தேயம் எலாம் காண்டற்கு- உலகத்திலுள்ள பல தேசங்களையும் பார்ப்பதற்காக, தேர்ஊர்வான்-தேரை நடாத்திச் செல்கின்றவன், செய்வது ஒத்து-தனது தேரை நல்ல நிலைமையில் வைத்துக் கொள்வது போல, மாயமனம் பூட்டியுள- மாயமனத்தைப் பூட்டியுள்ள, மாண் உடம்பை- மாட்சிமைப்பட்ட சரீரத்தை, தூய நிலைமை உற-சுத்தமான நிலைமைகளே பொருந்துமாறு, வைத்து ஆள்தல்-(நீ) பாதுகாத்து நடாத்துதல், நீ செய்பவற்றுள் - நீ செய்யவேண்டிய நல்ல செயல்களில், தனித்துத் தலைமை உறும் ஒன்று - ஒப்பற்று முதலாவதாக நிற்கும் செயலாம்.

**க-ரை :**—தேசங்களை யெல்லாம் காணக் கருதித் தேரில் ஏறி நடாத்திச் செல்வோன் அத்தேரில் எவ் வகைப் பழுதும் உறாதவாறு கவனத்தோடு காத்து வருதல் போல, நீ உனது உடம்பில் எவ்வகைத் தீதும் பொருந்தாதவாறு காத்துவரல் வேண்டும்.

இரண்டாஞ் செயல்பொறிவா யின்மூல மெய்யிற்
றிரண்டா மறம்பலவுஞ் செய்து-புரண்டா
மறம்பலவு நீத்துமன மாமெய்யைச் சேருந்
திறம்பலவு மாள்த றெரிந்து. (சச)

**அ-ம் :**—(நீ செய்யவேண்டிய நல்ல செயல்களில்) இரண்டாம் செயல், மெய்யில் திரண்டு ஆம் அறம் பலவற்றையும் பொறிவாயில் மூலம்செய்து, புரண்டு ஆம் மறம் பலவற்றையும் நீத்து, மனம் மா மெய்யைச் சேரும் திறம் பலவற்றையும் தெரிந்து ஆள்தல்.

**ப-ரை :**—இரண்டாம் செயல்-(நீ செய்ய வேண்டிய நல்ல செயல்களில்) இரண்டாவது செயல், மெய் யில் திரண்டு ஆம்-மெய்ப்பொருளில் திரண்டு உண் டாகும், அறம் பலவும் - தருமங்கள் அனைத்தையும், பொறி வாயில் மூலம் செய்து - ஞானேந்திரியங்கள் ஐந்தின் வழியாகவும் செய்து, புரண்டு ஆம்-(அறங் கள்) திரிந்து உண்டாகும், மறம் பலவும் நீத்து - அதருமங்கள் அனைத்தையும் விலக்கி, மனம்-மனமா னது, மாமெய்யைச் சேரும்-பெருமைவாய்ந்த மெய்ப் பொருளைக் கூடுதற்குரிய, திறம் பலவும் தெரிந்து ஆள்தல் - குணங்கள் பலவற்றையும் அறிந்து கைக் கொண்டு நிற்றல்.

**க-ரை :—**நீ செய்ய வேண்டிய நல்ல செயல்களுள் இரண்டாவது செயலாவது, உனது பொறி வாயில்கள் மூலமாகப் புண்ணியங்களை யெல்லாம் செய்து, பாவங்களை யெல்லாம் விலக்கி, மனம் மெய்ப்பொருளைச் சேருதற்குரிய குணங்களை யெல்லாம் கைக் கொண்டு நிற்றல்.

மூன்றாஞ் செயலரிய மோனநிலை யெய்தலது
தோன்றாது நிற்கமனந் தொல்லுலகி—லான்ற
வறிவுமுனர் நின்றறங் கறம்புரிந்தே யின்பச்
செறிவடைதல் மெய்யைத் தெளிந்து. (சரு)

**அ-ம் :—**மூன்றாம் செயல் அரிய மோன நிலையை எய்தல். அது மனம் தோன்றாது நிற்க, ஆன்ற அறிவு முன்னர் நின்று, மெய்யைத் தெளிந்து, அறத்தைப் புரிந்து, இன்பச் செறிவை அடைதல்.

**ப-ரை :—**மூன்றாம் செயல் - (நீ செய்ய வேண்டிய நல்ல செயல்களுள்) மூன்றாவது செயல், அரிய- எய்துதற்கு அரிய, மோனநிலை எய்தல் - மௌன நிலையை அடைதல். அது - மௌன நிலையாவது, மனம் தோன்றாது நிற்க - நினைப்பு முற்படாது நிற்க, ஆன்ற அறிவு - நிறைந்த அறிவு வடிவமாகிய ஆன்மா, முனர் நின்று - முன்னாக நின்று, மெய்யைத் தெளிந்து-மெய்ப்பொருளை நன்கு உணர்ந்து, அறம் புரிந்து-புண்ணியங்களைச் செய்து, இன்பச்செறிவு- இன்பச் செறிவை (பேரின்பத்தை), அடைதல் - எய்துதலாம்.

**க-ரை :**—நீ செய்ய வேண்டிய நல்ல செயல்களுள் மூன்றாவது செயலாவது, அடைதற்கு அரிய மௌன நிலையை அடைதல். மௌனநிலை என்பது மனம் முற்படாதவாறு ஆன்மா முன்நின்று, மெய்ப்பொருளை யுணர்ந்து, அறங்களைப் புரிந்து பேரின்பத்தை அடைதலாம்.

ஆங்கு ஏ என்பன அசைகள்.

மோனநிலை யெய்தியவர் முக்கால முங்காண்பர்
ஞானநிலை யந்தமது நன்கறிவாய்—தான
தருமமெலா மந்நிலையைச் சார்தற்குச் செய்யுங்
கருமமென நன்றாகக் காண். (சஅ)

**அ-ம் :**—மோன நிலையை எய்தியவர் முக்காலத்தையும் காண்பர். அது ஞான நிலையின் அந்தம். (இவ்வுண்மையை நீ) நன்கு அறிவாய். தான தருமம் எல்லாம் அந்நிலையைச் சார்தற்குச் செய்யும் கருமமென நன்றாகக் காண்.

**ப-ரை :**—மோன நிலை எய்தியவர் - மௌன நிலையை அடைந்தவர், முக்காலமும் காண்பர் - இறந்தகாலத்தில் நடந்தவற்றையும் நிகழ்காலத்தில் நடக்கின்றவற்றையும் எதிர்காலத்தில் நடப்பவற்றையும், காண்பர் - அறிவர். அது-மௌன நிலையானது, ஞானநிலை அந்தம்- ஞானநிலையின் முடிவு. நன்கு அறிவாய்- (இவ்வுண்மையை நீ) நன்றாகத் தெரிந்து கொள்வாயாக. தான தருமம் எல்லாம்-தானம்தருமம் தவம் முதலிய யாவும், அந்நிலையை - மௌன நிலையை, சார்தற்கு-அடைதற்கு, செய்யும் கருமம் என-

செய்யப்படும் செயல்களென்று, நன்றாகக்காண்-நன்கு அறிவாயாக.

க-ரை :—மௌன நிலையை அடைந்தவர் மூன்று காலங்களிலும் நிகழும் செய்கைகளை யெல்லாம் அறிவர். மௌன நிலை ஞானத்தின் உந்நத நிலை. தான தருமங்களெல்லாம் அம் மௌன நிலையை அடைவதற்காகச் செய்யப்படும் சாதனங்களே.

"மோனமென்பது ஞானவரம்பு." என்றார் ஔவை யாரும்.

இந்நிலையை யெய்துதலே யெஃதற்கு மேலதென்று மிந்நிலையி னின்றிடலே யீங்கறிஞர்—தன்னிலையி னிற்றலென்றுங் கூறியுளார் நீயிந்த நன்னிலையை யுற்றுநிற்கப் பார்மெய் யுறும். (சஎ)

அ-ம் :—ஈங்கு இந்நிலையை எய்துதலே எஃதற்கும் மேலது என்றும், இந்நிலையில் நின்றிடலே தன் நிலையில் நிற்றல் என்றும், அறிஞர் கூறியுள்ளார். நீ இந்த நல் நிலையை உற்று நிற்க, பாரும் மெய்யும் (உன்னை) உறும்.

ப-ரை :—ஈங்கு-இவ்வுலகில், இந்நிலையை-மௌனநிலையை, எய்துதலே - அடைதலே, எஃதற்கும் - மனிதர் அடையக்கூடிய எப்பதவிக்கும், 'மேலது என்றும்-மேலானது என்றும், இந்நிலையில் - மௌன நிலையில், நின்றிடலே - இடை விடாது நிற்றலே, தன் நிலையில் நிற்றல் என்றும்-தனது சொந்த நிலையில் நிற்றல் என்றும், அறிஞர் - ஆன்றோர், கூறியு

ளார்-சொல்லியிருக்கின்றனர். நீ இந்த நல் நிலையை-நீ இந்த நல்ல பதவியை, உற்று நிற்க - பொருந்தி நிற்க, பார் மெய் உறும்-உலக அரசும் மெய்ப்பொருள் நிலையும் உனக்கு எய்தும்.

**க-ரை :**—மௌன நிலையை அடைதல் மனிதர் அடையத்தக்க எப்பதவிக்கும் மேலான பதவி. மௌன நிலையில் நிற்றலே தன்நிலையில் நிற்றல். நீ இந்நிலையை அடைவாயாயின், நீ உலக அரசும் கடவுளும் ஆவாய்.

பொன்னுலகிற் கந்தமுண்டு புன்னரகிற் கந்தமுண்டு
தன்னிலையி னிற்பவரே சந்ததமு—மன்னுமொரு
மெய்ப்பொருளி லைக்கியமாய் வீடுற்று வாழ்ந்திருப்பர்
பொய்ப்பொருளெல் லாநீக்கிப் போந்து. (சஅ)

**அ-ம் :**—பொன் உலகிற்கு அந்தம் உண்டு. புல் நரகிற்கு அந்தம் உண்டு. தன்நிலையில் நிற்பவரே பொய்ப் பொருளை யெல்லாம் நீக்கிப் போந்து, சந்ததமும் மன்னும் ஒரு மெய்ப்பொருளில் ஐக்கியமாய் வீடு உற்று வாழ்வர்.

**ப-ரை :**—பொன் உலகிற்கு - சுவர்க்கத்திற்கும், அந்தம் உண்டு - முடிவு உண்டு. புல் நரகிற்கு - இழிவான நரகத்திற்கும், அந்தம் உண்டு - முடிவு உண்டு. தன் நிலையில் நிற்பவரே - தனது சொந்த நிலையில் நிற்பவரே, பொய்ப்பொருள் எல்லாம்-அழிந்து போகும் மனைவி மக்கள் முதலிய உறவினரையும் வீடு காடு செல்வம் முதலியவற்றையும், நீக்கிப் போந்து-

துறந்து கடந்து, சந்ததமும் மன்னும் - எக்காலமும் நிலைத்து நிற்கும், மெய்ப்பொருளில் - கடவுளோடு, ஐக்கியமாய்-ஏகமாய், வீடு உற்று-பந்த நீக்கம் அடைந்து, வாழ்ந்திருப்பர் - பேரின்பத்தை எய்திநிற்பர்.

க-ரை:—சுவர்க்க வாழ்வும் ஒரு முடிவை அடையும். அவ்வாறே நரக வாழ்வும் ஒரு முடிவை அடையும். தன் நிலையை எய்தியவரோ மெய்ப்பொருளில் ஐக்கியமாய் என்ஞான்றும் பேரின்பத்தில் வாழ்ந்து நிற்பர்.

பொறிவாயிற் றுன்பமுறல் புன்னரக மாங்குப்
பொறிவாயி லின்பமுறல் பொன்னு—டறிவாய்நீ
யிவ்விரண்டு நீத்தநிலை யேமோக்க மிங்கன்றி
யெவ்விடத்து மூன்றிலெது மில். (சக)

அ-ம்:—பொறிவாயிலால் துன்பத்தை உறலே புல் நரகம். பொறிவாயிலால் இன்பத்தை உறலே பொன்நாடு. இவ்விரண்டையும் நீத்த நிலையே மோக்கம். (இம்) மூன்றில் எஃதும் இங்கன்றி (வேறு) எவ்விடத்திலும் இல். (இந்த உண்மையை) நீ அறிவாய்.

ப-ரை:—பொறிவாயில் துன்பம் உறல்.- மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் துன்பங்களை அநுபவித்தலே, புல் நகரம் - இழிந்த நரகம். பொறிவாயில் இன்பம் உறல்-மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் இன்பங்களை அநுபவித்தலே, பொன் நாடு-உயர்ந்த சுவர்க்கம். இவ்விரண்டும் நீத்த நிலையே-

பொறிவாயில்களால் துன்பங்களையும் இன்பங்களையும் அநுபவித்தலை விட்ட தன்மையே, மோக்கம்-மோக்ஷம். மூன்றில் எதும் - இம்மூன்றில் எஃதும், இங்கு அன்றி - இவ்வுலகத்தில் அல்லாமல், எவ்விடத்தும் இல்-வேறு எங்கும்இல்லை. நீஅறிவாய் (இந்த உண்மையை) நீ அறிவாயாக.

க-ரை:—ஞானேந்திரியங்கள் வாயிலாகத் துன்பங்களை அநுபவித்தலே சுவர்க்கம் என்றும் ஞானேந்திரியங்கள்வாயிலாக இன்பங்களை அநுபவித்தலே நரகம்என்றும் ஞானேந்திரியங்கள் வாயிலாகத் துன்பங்களையும் இன்பங்களையும் அநுபவித்தலை விடுதலே மோக்ஷம் என்றும் நூல்கள் சொல்லும். இம்மூன்றும் வெவ்வேறு உலகங்கள் என்று கூறுதல் பொய்.

ஆங்கு அசை.

தன்னையறிந் துணர்ந்து தன்னுடம்பைச் சீர்ப்படுத்தித்
தன்னுளத்தை யாண்டென் றுந்தாரணியின்—மன்னு
யறனெல்லாஞ் செய்துதவ மாற்றிடுவோன் மெய்யின்
றிறனெல்லாங் கொள்வான் சிறந்து. (ரும)

அ-ம்:—தன்னை அறிந்து உணர்ந்து, தன் உடம்பைச் சீர்ப்படுத்தி, தன் உளத்தை என்றும் ஆண்டு, தாரணியின் மன்னுய், அறத்தை எல்லாம் செய்து, தவத்தை ஆற்றிடுவோன், சிறந்து மெய்யின் திறத்தையெல்லாம் கொள்வான்.

ப-ரை:—தன்னை அறிந்து-தனது இலக்கணங்களை எல்லாம் தெரிந்து, உணர்ந்து-(தன்னை) அநுபவமாக உணர்ந்து, தன் உடம்பை-தனது சரீரத்தை, சீர்ப்படுத்தி-பலப்படுத்தி, தன் உளத்தை-தனது மனத்தை, என்றும்-எப்பொழுதும், ஆண்டு-அடக்கி நடாத்தி, தாரணியின் மன் ஆய்-உலகத்தின் அரசனாகி, அறன் எல்லாம் செய்து - தருமங்களையெல்லாம் செய்து, தவம் ஆற்றிடுவோன்-தவத்தைச் செய்து முடிப்போன், சிறந்து-மேம்பட்டு, மெய்யின்-கடவுளது, திறன் எல்லாம்-சர்வ சக்திகளையும், கொள்வான் - அடைவான்.

க-ரை:-தனது இலக்கணங்களை அறிந்து, தன்னை அநுபவமாக உணர்ந்து, தனது சரீரத்தைப் பலப்படுத்தி, தனது மனத்தை அடக்கி நடாத்தி, உலகத்தின் அரசனாகி, அறங்களையெல்லாம் செய்து, தவத்தைச் செய்து முடிப்போன் கடவுளது சர்வ வல்லமைகளையும் பெற்றுக் கடவுளாய் நிற்பான்.

## 6-ம் அதி.—மறங் களைதல்.

கொலைகளவு கள்காமம் பொய்யெள் ளளவு
மிலையுளத்து மென்றக்கா லென்று—மலையளவு
நோயும் பனிபோல நொந்தழியு மெய்ப்பொருளை
யாயு மறிவு மிகும். (ருக)

அ-ம்:—கொலையும் களவும் கள்ளும் காமமும் பொய்யும் என்றும் எள் அளவும் உளத்தும் இல்லை என்றக்கால், மலையளவு நோயும் பனி போல நொந்து அழியும்; மெய்ப்பொருளை ஆயும் அறிவும் மிகும்.

**ப-ரை :**—கொலை-கொல்லுதலும், களவு - திருடுதலும், கள்-கள்ளுண்டலும், காமம்-காமமும், பொய்-பொய்கூறலும், என்றும் - எக்காலத்தும், எள் அளவும்-ஒரு சிறிதும், உளத்தும்-மனத்தினும், இலை என்றக்கால்-இல்லையென்றால், மலையளவு - மலை போன்ற பெரிய, நோயும் - பிணிகளும், நொந்து அழியும் - வருந்தி நீங்கும்; மெய்ப்பொருளை-கடவுளை, ஆயும்-ஆராயும், அறிவும்-ஞானமும், மிகும்-அதிகப்படும்.

**க-ரை :**—கொலை முதலிய பஞ்ச மா பாதகங்களையும் ஒருவன் தனது நினைப்பினும் கொள்ளாது விடுவானாயின், அவனை அடுத்த பலவகைப் பிணிகளும் நீங்கும்; கடவுளை உணரும் அறிவும் அதிகரிக்கும்.

எண்ணும்மைகள் தொக்கன.

கொலைசெயலுங் கொல்லெனலுங் கொல்வாரைச் சேர்ந்து
நிலையுதலுங் கொல்லற்கு நெஞ்சோ—டலையுதலுங்
கொன்றதனைத் தின்றிடலுங் கூறிடலு மாக்குதலு
மொன்றற்கின் றொசைபலு மொன்று. (ருஉ)

**அ-ம் :**—செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை :**—கொலை செயலும்-ஓர் உயிரைக் கொல்லுதலும், கொல் எனலும்-நீ கொல் என்று ஏவுதலும், கொல்வாரைச் சேர்ந்து நிலையுதலும் - கொலை செய்வாரைக் கூடி நிற்றலும், கொல்லற்கு நெஞ்சோடு அலையுதலும் - கொலை செய்தற்காக மனத்தோடு சேர்ந்து அலைதலும், கொன்றதனைத் தின்றி

டலும் - மாமிசத்தை உட்கொள்ளலும், கூறிடலும்-(சமைத்தற்காக) மாமிசத்தை அரிதலும், ஆக்குதலும் - மாமிசத்தைச் சமைத்தலும், ஒன்றற்கு இன்னா செயலும்-ஓர் உயிர்க்குத் துன்பம் செய்தலும், ஒன்று-என்ற இவை யெல்லாம் ஒரே வகைப் பாவம்.

க-ரை :—ஓர் உயிரைக் கொல்லுதல் மாத்திரம் கொலை யென்று கருதற்க. அதனைக் கொலை புரிய ஏவுதல் முதலிய செயல்கள் அனைத்தும் கொலையே.

களவுசெய லஃதேவல் கள்வாரைச் சேர்தல்
களவுபொருண் மாற்றலுணல் கள்வார்க்—குளவு சொலல்
வாங்கியதை யில்லென்றல் வஞ்சனைசூ தால்வௌவ
லாங்கனைய வெல்லா மது. (ருரு)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—களவு செயல்-பிறன் பொருளை அவன் சம்மதமின்றிக் கொள்ளுதலும், அஃது ஏவல்-களவு செய்யுமாறு ஒருவனை ஏவுதலும், கள்வாரைச் சேர்தல் - திருடரைக் கூடுதலும், களவு பொருள் மாற்றல்-களவினால் வந்த பொருள்களை விற்றலும், களவு பொருள் உண்ணல்-களவினால் வந்த பொருள்களை அநுபவித்தலும், கள்வார்க்கு உளவு சொலல்-களவு செய்வோர்க்குப் பொருள் இருக்கும் இடம் முதலியவற்றைச் சொல்லுதலும், வாங்கியதை இல்லென்றல்-திரும்பக் கொடுப்பதாகக் கூறிப் பிறனிடமிருந்து பெற்ற பொருளைத் திரும்பக் கொடாமையும், வஞ்சனை சூதால் வௌவல்- வஞ்சகமான செய

லாலும் சூதாட்டத்தாலும் பிறன் பொருளைக் கவர்தலும், ஆங்கு அனைய எல்லாம் - அது போன்ற செயல்கள் அனைத்தும், அது-களவேயாம்.

க-ரை :—பிறன் பொருளைத் திருடுதல் மாத்திரம் களவு என்று கருதற்க. பிறன் பொருளைத் திருடுமாறு ஒருவனை ஏவுதல் முதலிய செயல்கள் அனைத்தும் களவே.

ஆங்கு அனைய வெல்லாம் என்பது இறந்தான் பொருளைக் கவர்தல், மறந்தான் பொருளைக் கவர்தல் முதலியவற்றைக் குறித்து நின்றது. எண்ணும்மைகள் தொக்கன.

கள்ளுண்ணக் காசளித்தல் கள்விற்றல் கள்ளாக்கல்
கள்ளுண்ணுந் தீயாரைக் காதலித்த—லுள்ளறிவை
மாய்க்குமதன் றன்மையுள மற்றவற்றை யுட்கொள்ளல்
தாய்க்குமடுங் கள்ளருந்தல் தான். (ரு௪)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—கள் உண்ணக் காசு அளித்தல்-கள்ளை உண்ணுதற்காக ஒருவனுக்குப் பொருளைக் கொடுத்தலும், கள் விற்றல்-கள்ளை வைத்து விற்றலும், கள் ஆக்கல்-கள்ளை இறக்குதலும், கள் உண்ணும் தீயாரைக் காதலித்தல்-கள்ளை உண்ணுகின்ற பாவிகளை நேசித்தலும், உள் அறிவை மாய்க்கும்-உள்ளத்தின் அறிவைக் கெடுக்கும், அதன் தன்மையுள-கள்ளின் குணத்தைக் கொண்டுள்ள, மற்றவற்றை உட்கொள்ளல்- கஞ்சா அபினி முதலியவற்றை உட்கொள்ளு

தலும், தாய்க்கும் அடும்-பெற்ற தாய்க்கும் வருத்தத்தை விளைக்கும், கள் அருந்தல் தான்-கட்குடியே யாம்.

க-ரை :—கள் முதலிய மயக்க வஸ்துக்களை உண்ணுதல் மாத்திரம் கட்குடிப்பாவமென்று கருதற்க. அவற்றை உண்ணுதற்காக ஒருவனுக்குக் காசு கொடுத்தல் முதலிய அனைத்தும் கட்குடிப்பாவமே.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச் சான்றோர் முகத்துக் களி" என்றனர் திருவள்ளுவரும்.

கொண்டதுணை யல்லாரைக் கூடிடுத லஃதுன்ன
லண்டிவரு மேதிலரை யந்நினைவாற்-கண்டிடுத
லச்செயல்கள் போன்றவற்றை யாள்தலவை யாதரித்த
லிச்செயலெல் லாங்காம மே. (௫௫)

அ-ம் :— கொண்ட துணை அல்லாரைக் கூடிடுதல், அஃதை உன்னல், அண்டிவரும் ஏதிலரை அந்நினைவால் கண்டிடுதல், அச்செயல்களைப் போன்றவற்றை ஆள்தல் ஆதரித்தல், இச்செயல் எல்லாம் காமமே.

ப-ரை:—கொண்ட துணை அல்லாரை-பலர் அறியத் தனது உயிர்த்துணையாகக் கொள்ளப்பட்டவர் தவிர மற்றவரை, கூடிடுதல்- சேர்தல், அஃது உன்னல் - அம்மற்றவரைச் சேர நினைத்தல், அண்டிவரும் ஏதிலரை-தன்னைச் சமீபித்து வரும் தனது துணையல்லாரை, அந்நினைவால் கண்டிடுதல் - அவரைச் சேர வேண்டுமென்ற நினைப்போடு நோக்குதல், அச்செயல்கள் போன்றவற்றை ஆள்தல் - அச்செயல்களைப் போன்ற வெறிச் செயல்களைச் செய்தல், ஆதரித்தல்

அவற்றிற்கு உதவி புரிதல், இச்செயல் எல்லாம் - இச் செயல்கள் யாவும், காமமே-காமப்பாவமே.

**க-ரை** :—தனது துணையல்லாரைக் கூடல் முதலிய அனைத்தும் காம மென்னும் பாவமேயாம்.

பொய்யுரைத்த லாக்கல் புறங்கூற னிந்தித்தன்
மெய்ம்மறைத்தல் கோள்குறளை மேவிடுதல்-வெய்ய
வுரைபகர்தல் பொய்ந்நட் புறுதியில கூறல்
புரைபடுவ சொல்லலெலாம் பொய். (ருசு)

**அ-ம்** :—செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை** :—பொய் உரைத்தல்-பொய்யைச்சொல்லுதல், பொய் ஆக்கல்-பொய்யைச் சிருஷ்டித்தல், புறம் கூறல்-பிறனது புறத்தில் அவனை இழித்துக் கூறல், நிந்தித்தல்-பிறனை வைதல் ; மெய்மறைத்தல்-உண்மை வெளிப்படாது செய்தல், கோள் மேவிடுதல்-புறங்கூறலைக் கேட்டல், குறளை மேவிடுதல்-பிறன் மீது வருத்தத்தை விளைக்கும் சொற்களைச் சொல்லுதல், வெய்ய உரை பகர்தல்-கடினமான சொற்களைச் சொல்லுதல், பொய் நட்பு-அகத்தில் நேசியாது புறத்தில் நேசிப்பது போல நடித்தல், உறுதியில கூறல்-நன்மை பயக்காத சொற்களைச் சொல்லுதல், புரைபடுவ சொல்லல்-நிறைவேற்றப்படாது போம் வாக்குகளைக் கூறல், எலாம் பொய்-இவையும் இவற்றைச் சம்பந்தித்த பிறவும் பொய்யென்னும் பாவமாம்.

**க-ரை**:—பொய் சொல்லுதல் முதலிய அனைத்தும் பொய்யின் பகுதியிற் படும்.

'மேவிடுதல்' முன்னும் சேர்க்கப் பட்டது.
நல்லுயிரை நல்வினையை நற்பொருளைக் காத்தற்குச்
சொல்லியவெல் லாஞ்செயினுந் தோடமிலை-யல்லாமல்
தீயுயிரைத் தீவினையைத் தீப்பொருளைக் காத்தற்காங்
காயவெலாம் பாவ மறி. (௬௭)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை:—நல் உயிரை-உயிர்களுக்கு நன்மையைப் புரியும் உயிர்களையாவது, நல்வினையை-உயிர்களுக்கு நன்மையை விளைக்கும் செயல்களையாவது, நல்பொருளை-உயிர்களுக்கு நன்மையை விளைக்கும் பொருள்களையாவது, காத்தற்கு-பாதுகாக்கும் பொருட்டு, சொல்லிய எல்லாம்-மேற்சொல்லிய பஞ்ச மா பாதகங்களை யெல்லாம், செய்யினும்-செய்தாலும், தோடம் இலை-குற்றம் இல்லை. அல்லாமல்- இவ்வாறல்லாமல், தீ உயிரை-உயிர்களுக்குத் தீமையைப் புரியும் உயிர்களையாவது, தீ வினையை-உயிர்களுக்குத் தீமைகளை விளைக்கும் செயல்களையாவது, தீப்பொருளை-உயிர்களுக்குத் தீமைகளை விளைக்கும் பொருள்களையாவது, காத்தற்கு-பாதுகாக்கும் பொருட்டு, ஆய எல்லாம்-செய்யப்பட்ட செயல்கள் எல்லாம், பாவம்-பாவமாகும். அறி-இதனை நன்றாக அறிவாயாக.

க-ரை :—நல்ல உயிர்களையாவது நல்ல வினைகளையாவது நல்ல பொருள்களையாவது காத்தற்குச் செய்யும் பாவச் செயல்களும் புண்ணியச்செயல்களாம். தீய உயிர்களையாவது தீய வினைகளையாவது தீய பொருள்களையாவது காத்தற்குச் செய்யும் புண்ணியச் செயல்களும் பாவச் செயல்களாம்.

ஆங்கு அசை. இது மேற் கூறியவற்றிற்கு ஒரு புறனடை

காலைவரு முன்னெழுந்து கைகால்கள் சுத்திசெய்து
சீலைதனை மாற்றியுயர் சிற்பொருளை - ஞாலமுள
நல்லுயிரு மேர்த்தொழிலு நல்லரசும் வாணிகமுந்
தொல்லறமும் வாழத் தொழு. (நஅ)

அ-ம் :—காலை வரும் முன் எழுந்து, கை கால்களைச் சுத்தி செய்து, சீலைதனை மாற்றி, ஞாலத்துள்ள நல் உயிரும் ஏர்த்தொழிலும் நல் அரசும் வாணிகமும் வாழ உயர் சித்பொருளைத் தொழு.

ப-ரை :—காலை வரும் முன் எழுந்து-விடிவதற்கு முன்னர்ப் படுக்கையை விட்டு எழுந்து, கைகால்கள் சுத்திசெய்து-கைகளையும் கால்களையும் கழுவி, சீலைதனை மாற்றி-இரவு உடுத்திருந்த உடையைக் களைந்து வேறு உடையை உடுத்துக்கொண்டு, ஞாலம் உள-புவியில் உள்ள, நல் உயிரும்-நன்மைபுரியும் உயிர்களும், ஏர்த்தொழிலும்-விவசாயமும், நல் அரசும்-நன்மை புரியும் அரசுகளும், (நல்) வாணிகமும்-நல்ல வியாபாரங்களும், வாழ-பெருகும் பொருட்டு, உயர் சித்பொருளை - மேலான அறிவாகிய பரம்பொருளை, தொழு-வணங்குவாயாக.

க-ரை :—அதிகாலையில் நித்திரை நீங்கி, முகம் முதலியவற்றைக் கழுவி, சுத்த வஸ்திரம் தரித்து, இவ்வுலகத்தில் நல்ல உயிர்களும், நல்ல விளைவுகளும், நல்ல அரசுகளும், நல்ல வாணிகங்களும் பெருகும் பொருட்டுக் கடவுளை வணங்கு.

கை கால்கள் என்பவை முகம் முதலியவற்றை யும் அடக்கி நின்றன. இரவு கட்டியிருந்த உடை அசுத்தமாயிருக்கக்கூடு மென்பது பற்றி அதனை மாற் ற வேண்டு மென்று கூறப்பட்டது. தனது நன்மையை மாத்திரம் கருதிக் கடவுளைத் தொழுதல் தாழ்வென் பதும் பல உயிர்களின் நன்மையையும் கருதித் தொ ழுதல் உயர்வென்பதும் குறிப்பிக்கப் பட்டன.

பின்னுனது நெஞ்சத்துட் பின்னியுள பாவமெலா
முன்னியவை நீக்கற் குறுதிமொழி—பன்னி
முதனாளிற் செய்தவெலா மூதறிவா லாராய்ந்
திதமான கொள்ளயலை யீர். (௫௬)

அ-ம்:—பின் உனது நெஞ்சத்துள் பின்னியுள்ள பாவத்தை யெல்லாம் உன்னி, அவற்றை நீக்கற்கு உறுதிமொழியைப் பன்னி, முதல்நாளில் செய்தவற் றை யெல்லாம் முது அறிவால் ஆராய்ந்து, இதமான வற்றைக் கொள், அயலை ஈர்.

ப-ரை:—பின்-கடவுளைத் தொழுத பின்னர், உனது நெஞ்சத்துள் - உனது மனத்தின் ஆழத்தில், பின்னியுள - பற்றிப் படர்ந்துள்ள, பாவம் எலாம்- பாவங்களை யெல்லாம், உன்னி - நினைத்துப்பார்த்து, அவை நீக்கற்கு- அவற்றை விடுவதற்கு, உறுதிமொழி பன்னி-சத்தியம் செய்து கொண்டு, முதல் நாளில்- முந்திய தினத்தில், செய்த எலாம்-நீ செய்த சகல கருமங்களையும், முது அறிவால் ஆராய்ந்து - பழமையான அறிவைக் கொண்டு (நல்லவை இன் னவை தீயவை இன்னவை என்று) ஆராய்ச்சி செய்து,

இதமான கொள்-நல்ல கருமங்களைப் பின்னும் செய்; அயலை ஈர்-தீய கருமங்களை விட்டு விடு.

**க-ரை:**—விடியற்காலையில் நல்ல உயிர்கள் முதலியவற்றின் பெருக்கத்திற்காகக் கடவுளைத் தொழுத பின்னர், உனக்கு அடிக்கடி எழுகின்ற பாவ நினைவுகளைத் தெரிந்து, அவற்றை மேல் நினையாதும் புரியாதும் விடுவதாக உனக்கு அருமையான பொருள்களின் மீது ஆணையிட்டு, முதல் நாளில் நீ செய்த கருமங்களை யெல்லாம் நினைத்துப் பார்த்து, அவற்றில் நல்லவை இன்ன தீயவை இன்ன என்று ஆராய்ந்து, நல்லவற்றை மேலும் மேலும் செய்; தீயவற்றை மேல் செய்யாமல் விடு.

உண்ணுதற்கு முன்னு முறங்குதற்கு முன்னுமெய்மை
யுண்ணினைந்து போற்றி யுனதொழுக்க-மெண்ணிக்
கடிந்தவற்றை நீக்கிக் கடியாத செய்யின்
முடிந்தனவுன் வேலை முறை. (கூ)

**அ-ம்:**—(நீ) உண்ணுதற்கு முன்னும் உறங்குதற்கு முன்னும் மெய்யை உள் நினைந்து போற்றி, உனது ஒழுக்கத்தை எண்ணி, கடிந்தவற்றை நீக்கிக் கடியாதவற்றைச் செய்யின், உன் வேலை முறை முடிந்தன.

**ப-ரை:**—உண்ணுதற்கு முன்னும்-நீ ஒவ்வொரு வேளையிலும் சாப்பிடத் தொடங்குதற்கு முன்னரும், உறங்குதற்கு முன்னும்- நீ ஒவ்வோர் இரவும் நித்திரைக்குச் செல்லுதற்கு முன்னரும், மெய்யை-மெய்ப்

பொருளே, உள் நினைந்து போற்றி-மனத்தால் தியானித்து வணங்கி, உனது ஒழுக்கம் எண்ணி-உனது ஒழுக்கத்தை(முக்கரணச் செயல்களையும்) நினைந்து, கடிந்தவற்றை நீக்கி-அறநூல்களால் விலக்கப்பட்டவற்றை விடுத்து, கடியாத செய்யின்-அந்நூல்களால் விலக்கப்படாதவற்றைச் செய்தால், உன்வேலை முறை முடிந்தன-(உனது ஆன்ம நன்மைக்காக நீ செய்ய வேண்டிய) உன் இயம நியம முறைகள் முடிவுற்றன.

**க-ரை** :—நீ உண்ணுதற்கும் உறங்குதற்கும் முன் கடவுளை வணங்கி, அதற்கு முன் நீ செய்த கருமங்களை யெல்லாம் எண்ணி, தீயவற்றை விலக்கி, நல்லவற்றைச் செய்.

## 7-ம் அதி.—அறம் புரிதல்.

அருளீகை யுண்மையறி வாசையின்மை வாய்மை
பொருளீயு மின்பமொடு போதத்—தெருளீயும்
வீடீயு மாணீயு மெய்ப்பொருளி னெண்ணரிய
பீடீயு மென்றுமிவை பேண். (சுக)

**அ-ம்**—: செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை** :—அருள் - அருளும், ஈகை - ஈகையும், உண்மையறிவு - உண்மையறிவும், ஆசையின்மை - ஆசையின்மையும், வாய்மை - வாய்மையும், பொருள் ஈயும் - செல்வத்தைக் கொடுக்கும், இன்பமொடு போதத்தெருள் ஈயும் - இன்பத்தோடு அறிவின் தெளிவைக் கொடுக்கும், வீடு ஈயும் - துறவைக்கொடுக்கும், மாண் ஈயும்-சிறப்பைக் கொடுக்கும், மெய்ப்

பொருளின் - கடவுளது, எண்ணரிய - நினைத்தற்கு அரிய, பீடு ஈயும் - வலிமையைக் கொடுக்கும். (ஆத லால்) என்றும் - எப்பொழுதும், இவை - இவ்வைந் தையும், பேண்-பேணுவாயாக.

க-ரை:—அருள் முதலிய ஐந்தும் பொருள் முதலிய ஆறையும் கொடுக்கும். ஆதலால் இவ்வைந் தையும் பேண்.

அருளென்ப தெவ்வுயிர்க்கு மன்புபா ராட்டல்
தெருளொன்றி நிற்பாரைச் சேர்தன்-மருளொன்றிக்
காய்வார்க்கு நல்லறிவு காட்டிடுதன் மெய்ப்பொருளை
யாய்வார்க் கனைத்துமளித் தல். (சுஉ)

அ-ம்:—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை:—அருள் என்பது-அருள் என்று சொல் லப்படுவது, எவ் உயிர்க்கும்-சகல உயிர்களிடத்தும், அன்பு பாராட்டல் - அன்பைச் செலுத்துதலும், தெருள் ஒன்றி நிற்பாரைச் சேர்தல் - தெளிந்த அறி வைக் கொண்டு நிற்பாரோடு கூடுதலும், மருள் ஒன் றிக் காய்வார்க்கு - மயக்கத்தைக் கொண்டு வருந்து வார்க்கு, நல் அறிவு காட்டிடுதல் - நல்ல அறிவை அளித்தலும், மெய்ப்பொருளை ஆய்வார்க்கு-கடவுளை ஆராய்வார்க்கு, அனைத்தும் அளித்தல் - அவர் வேண்டும் எல்லாவற்றையும் கொடுத்தலுமாம்.

க-ரை:—அருள் என்பது பல உயிர்களிடத் தும் அன்பு பாராட்டுதல் மாத்திரமன்று. அறிஞ ரோடு நட்புச் செய்தலும், அறிவில்லார்க்கு அறிவை

அளித்தலும், கடவுளை விசாரிப்பார் வேண்டும் உதவிகளை எல்லாம் செய்தலும் அருளின்பால் படும்.

ஈகையென்ப தெவ்வுயிர்க்கு மில்லாத கண்டளித்த
லீகையொன்றி நிற்பாரை யிவ்வுலகில்—வாகைபுனை
மன்னர்க்கு மன்னரென வாக்கானு மேத்தியவர்
சொன்னபணி செய்தல் தொழுது. (சுரு)

அ-ம்:—ஈகை என்பது எவ்வுயிர்க்கும் இல்லாதவற்றைக் கண்டு அளித்தல், இவ்வுலகில் ஈகையை ஒன்றி நிற்பாரை வாகையைப் புனையும் மன்னர்க்கு மன்னரென வாக்கானும் ஏத்தி, அவர் சொன்ன பணியைத் தொழுது செய்தல்.

ப-ரை:—ஈகை என்பது-ஈகை என்று சொல்லப் படுவது, எவ் உயிர்க்கும் இல்லாத கண்டு அளித்தல்-சகல உயிர்களுக்கும் இல்லாதவற்றைத் தானே பார்த்துக்கொடுத்தலும், இவ் உலகில் - இவ்வுலகத்தில், ஈகை ஒன்றி நிற்பாரை-ஈகையைக் கைக்கொண்டு நிற்பாரை, வாகை புனை மன்னர்க்கு மன்னர் என-வெற்றி மாலையைச் சூடும் அரசர்க்கு அரசரென்று, வாக்கானும் ஏத்தி-(மனத்தானும்) வாக்கானும் துதித்து, அவர் சொன்னபணி தொழுது செய்தல்-அவர் சொல்லிய ஊழியங்களை வணங்கிச் செய்தலுமாம்.

க-ரை:—ஈகை என்பது பல உயிர்களுக்கும் வேண்டுவனவற்றைத் தானே அறிந்து, கொடுத்தலும் அவ்வாறு கொடுப்பார் சக்கரவர்த்திகளென மதித்து அவர் சொல்லிய ஊழியங்களைச் செய்தலுமாம்.

உண்மையறி வென்ப துலகத்து நன்னூலின்
திண்மையறிந் தவ்வழியே சென்றிடுதல்—வண்மைத்
தொழிலெல்லாஞ் செய்தறிதல் தூலத்தைச் சார்ந்த
இழிவெல்லாம் பாழுக் கிடல். (சுச)

**அ-ம் :—** செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை :—**உண்மையறிவு என்பது-உண்மையறிவு என்று சொல்லப்படுவது, உலகத்து நல் நூலின்—உலகத்திலுள்ள நல்ல நூல்களின், திண்மை அறிந்து-சாரத்தை அறிந்து, அவ்வழியே சென்றிடுதல் - அந் நெறிகளிலே ஒழுகுதலும்; வண்மைத் தொழில் எல்லாம்-பெரிய லாபத்தைத்தரும் தொழில்களை யெல்லாம், செய்து அறிதல்-செய்து தெரிதலும்; தூலத்தைச் சார்ந்த-சரீரத்தைப் பொருந்திய, இழிவு எல்லாம்-கெட்ட பழக்கங்களை யெல்லாம், பாழுக்கு இடல்-நீக்கி விடுதலுமாம்.

**க-ரை :—**உண்மையறிவு என்பது, நல்ல நூல்களின் சாரத்தை அறிந்து அவ்வாறு ஒழுகுதலும், பொருளை மிகுதியாகத் தரும் தொழில்களை யெல்லாம் செய்தறிதலும், சரீரத்தினது கெட்ட பழக்கங்களையெல்லாம் விடுதலுமாம்.

ஆசையின்மை யென்பதுள மைம்பொறிவா யின்மூல
மாசைகொளுந் தீயவற்றை யாளாது-மீசையுள
வாண்பிள்ளை யென்னவிருந் தப்பொறியா ளுள்ளத்தை
நாண்பிள்ளை யாக்கி நகல். (சரு)

**அ-ம் :—**செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை** :—ஆசையின்மை என்பது-ஆசையின்மை என்று சொல்லப்படுவது, உளம்-மனமானது, ஐம் பொறிவாயின் மூலம்-மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாக, ஆசை கொளும்-விரும்பும், தீயவற்றை ஆளாது-கெட்ட பொருள்களைக் கொள்ளாது, மீசையுள ஆண்பிள்ளை என்ன இருந்து - மீசை வைத்திருக்காநின்ற ஆண்மகன் என்றுசொல்லுமாறு (மனத்திற்கு மேலே) இருந்து, அப்பொறி ஆள் உள்ளத்தை - அவ் வைம் பொறி களையும் ஆளும் மனத்தை, நாண் பிள்ளை ஆக்கி நகல்-தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்து மகிழ்தலாம்.

**க-ரை** :— ஆசையின்மை என்பது, மனமானது ஐம் பொறிகளின் வழியாக அடைய விரும்பும் தீய பொருள்களைக் கொள்ளாது அம்மனம் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்தலாம்.

**வாய்மையென்ப தென்று மனம்வாக்குக் காயத்திற்**
**றூய்மையொன்றிநிற்றலுண்மைசொல்லலிவண்-சேய்மையினுந்**
**தீமை தருபவற்றைச் செப்பாமை நன்மைதரு**
**நீர்மையன சொல்ல னினைத்து.** (சுசு)

**அ-ம்** :—வாய்மை என்பது மனத்திலும் வாக்கிலும் காயத்திலும் என்றும் தூய்மை ஒன்றி நிற்றலும், உண்மையைச் சொல்லலும், இவண்சேய்மையினும் தீமையைத் தருபவற்றைச் சொல்லாமையும், நன்மையைத் தரும் நீர்மையனவற்றை நினைத்துச் சொல்லலுமாம்.

ப-ரை :—வாய்மை என்பது - வாய்மை என்று சொல்லப்படுவது, மனம் வாக்கு காயத்தில் - நினைப்பிலும் சொல்லிலும் செயலிலும், தூய்மை ஒன்றி நிற்றல் - நன்மை பொருந்தி நிற்றலும்; உண்மை சொல்லல்-நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறே சொல்லுதலும்; இவண் சேய்மையினும் - இவ்வுலகத்தில் தூரமான இடத்திலும் காலத்திலும், தீமை தருபவற்றைச் செப்பாமை - உயிர்களுக்குத் துன்பங்களைக் கொடுக்கும் சொற்களைச் சொல்லாமையும், நன்மைதரும் நீர்மையன-உயிர்களுக்கு இன்பங்களைக் கொடுக்கும் தகுதியுடைய சொற்களை, நினைத்துச் சொல்லல்-ஆராய்ந்து சொல்லுதலுமாம்.

க-ரை :—வாய்மையாவது நல்ல நினைப்பையும் நல்ல சொல்லையும் நல்ல செயலையும் பொருந்துதலும், உள்ளதை உள்ளவாறு கூறுதலும், உயிர்களுக்குத் துன்பங்களை விளைக்கும் சொற்களைச் சொல்லாமையும், உயிர்களுக்கு இன்பங்களை விளைக்கும் சொற்களைச் சொல்லுதலுமாம்

அருளாதி நான்கையுமிங் காகாத செய்யும்
பொருளாதி பாற்படுத்தல் போத—மருளாகு
மெய்யறிவி னன்னெறியின் மேம்பாட்டி லாசையின்மை
பொய்யறிவி லாய புரை. (சு௭)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—அருள் ஆதி நான்கையும்-அருளையும் ஈகையையும் உண்மையறிவையும் வாய்மையையும்,

இங்கு-இவ்வுலகில், ஆகாத செய்யும்-தீய செயல்களைப் புரியும், பொருள் ஆதி பால்படுத்தல்-பொருள்களிடத்தும் உயிர்களிடத்தும் செலுத்துதல், போத மருளாகும் - அறிவின் மயக்கமாம். மெய்யறிவில்-கடவுள் ஞானத்திலும், நல் நெறியில்-அற வழிகளிலும், மேம்பாட்டில் - சிறப்பிலும், ஆசையின்மை - விருப்பம் இல்லாமை, பொய் அறிவில் ஆய புரை - விபரீத ஞானத்திலிருந்து உண்டாய குற்றமாம்.

க-ரை :—அருள் முதலிய நான்கையும் தீமைகளை விளைக்கும் உயிர்களிடத்தும் பொருள்களிடத்தும் உபயோகித்தல் மடமை. மெய்ஞ்ஞானத்திலும் அறத்திலும் சிறப்பிலும் ஆசையில்லாதிருத்தல் குற்றம்.

இஃது ஒரு புறனடை

கண்விழித்த நேரமுதற் கண்டுயிலு நேரம்வரை
கண்ணளவுக் கெட்டுகின்ற காட்சிக்கு- ளுண்ணுயிரு
முன்செயலால் வேறுயிரா லூணின்மையாற்பகையின்
வன்செயலால் வாடவிடாய் மற்று. (கூஅ)

அ-ம்:—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—கண் விழித்த நேரம் முதல் - (நீ)காலையில் நித்திரை நீங்கி எழுந்திருந்த நேரம் முதல், கண் துயிலும் நேரம் வரை-நீ இரவில் நித்திரைக்குச் செல்லும் நேரம் வரை, கண் அளவுக்கு- கண்பார்வைக்கு, எட்டுகின்ற காட்சிக்குள் - தெரிகின்ற எல்லைக்குள், நுண் உயிரும் - (ஈ எறும்பு முதலிய) அற்ப உயிர்க

ளும், உன் செயலால் - உனது செயல்களாலாவது, வேறு உயிரால்-வேறு உயிர்களாலாவது, ஊணின்மையால் - உணவு இல்லாமையினுலாவது, தன்பகையின் வன் செயலால் - தம் பகையான உயிர்களின் கொடிய செயல்களாலாவது, வாடவிடாய்-வருந்துமாறு இடம் கொடாதே.

க-ரை :—நீ நித்திரையினின்று எழுந்திருந்த கணம் முதல் நீ நித்திரைக்குச் செல்லும் கணம் வரை உனது பார்வைக்கு எட்டக்கூடிய எல்லைக்குள் அற்ப உயிர்களும் உனது செயல்களாலாவது வேறு உயிர்களாலாவது உணவு இல்லாமையாலாவது தமது பகை உயிர்களாலாவது வருந்து மாறு விடற்க.

மற்று அசை.

அறம்பொருளில் லின்பமுட னாதியருள் சேர்க்குந்
திறம்பெருக்கு நூலெல்லாஞ் சிந்தி—நிறம்பலசே
ராடைசெய லூண்விளைத்த லாக்கலரண் போர்முறைவா
னாழிநிலஞ் செல்லலகழ் வாள். (சூகூ)

அ-ம் :—அறம் பொருள் இல்லின்பமுடன் ஆதியின் அருளைச் சேர்க்கும் திறத்தைப் பெருக்கும் நூல் எல்லாவற்றையும் சிந்தி. பல நிறம் சேர் ஆடையைச் செய்யலையும் ஊண் விளைத்தலையும் அரணை ஆக்கலையும் போர்முறையையும் வானிலும் ஆழியிலும் நிலத்திலும் செல்லலையும் அகழ்வையும் ஆள்.

ப-ரை :—அறம் பொருள் இல் இன்பமுடன் - தருமம் செல்வம் மனையாளோடு துய்க்கும் இன்பம்

ஆகிய இவற்றுடன், ஆதி அருள் சேர்க்கும்-கடவுளது கிருபையை அடைவிக்கும், திறம் பெருக்கும்-திறமையை வளர்க்கும், நூல் எல்லாம்- நூல்களையெல்லாம், சிந்தி-ஆராய்வாயாக. பல நிறம் சேர்-பல நிறங்கள் கலந்த, ஆடை செயல்-துணிகளை நெய்தலையும், ஊண் விளைத்தல்-உணவுப் பொருள்களை உண்டு பண்ணுதலையும், அரண் ஆக்கல் - கோட்டைகளைக் கட்டுதலையும், போர்முறை - போர் முறைகளையும், வான் ஆழி நிலம் செல்லல் அகழ்வு-வானிலும் கடலிலும் புவியிலும் செல்லுதலையும் பொருள்கள் எடுத்தலையும், ஆள்-கைக்கொள்.

க-ரை :—புருஷார்த்தங்கள் நான்கையும் அடையும் திறனைப் பெருக்குகின்ற நூல்களை ஆராய்ச்சி செய். நெசவு விவசாயம் கட்டடம் போர் இவற்றைக் கற்றுக்கொள். ஆகாயத்திலும் கடலிலும் நிலத்திலும் செல்லும் பலவகை விமானங்களையும் கலங்களையும் ரதங்கள் முதலியவற்றையும் செலுத்தவும் அவற்றிலுள்ள அரும் பொருள்களைக் கண்டு எடுக்கவும் கற்றுக் கொள்.

அகழ்வு ஆகுபெயர்.

வாக்குமனங் காயமொத்து வாழ்ந்திடுவா யென்ஞான்றுந்
தீக்குணமில் லாதனவே செப்பிடுவாய் - போக்குதரு
மெண்ணைதற்கு முள்ளத்தை யேகவிடாய் சால்புதரு
மெண்ணைதற்கு முள்ளத்தை யீ. (எம)

அ-ம் :—என்ஞான்றும் வாக்கும் மனமும் காய

மும் ஒத்து வாழ்ந்திடுவாய்; தீக்குணம் இல்லாத வற்றையே செப்பிடுவாய்; போக்கைத் தரும் எஃதற்கும் உள்ளத்தை ஏக விடாய்; சால்பைத்தரும் எஃதற்கும் உள்ளத்தை ஈ.

ப-ரை :—என்ஞான்றும் - எந்நாளும், வாக்கு மனம் காயம் ஒத்து வாழ்ந்திடுவாய்-சொல்லும் நினைப்பும் செயலும் ஒத்திருக்குமாறு வாழ்வாய்; தீக்குணம் இல்லாதனவே செப்பிடுவாய் - தீங்கை விளைக்கும் தன்மை இல்லாத சொற்களையே சொல்வாய்; போக்கு தரும் எஃதற்கும் உள்ளத்தை ஏக விடாய் - குறைவைத் தரும் எச் செயலுக்கும் உனது மனத்தைப் போக விடாய்; சால்புதரும்-நிறைவைத்தரும், எஃதற்கும் உள்ளத்தை ஈ - எச்செயலுக்கும் உனது மனத்தைக் கொடு.

க-ரை :—எப்பொழுதும் நினைப்பும் சொல்லும் செயலும் ஒரேவாறாக இருக்குமாறு வாழ்; தீங்கை விளைக்காத சொற்களையே பேசு; குறவைக் கொடுக்கும் எச் செயலிலும் உனது நினைப்பை விடற்க; நிறைவைத் தரும் எச் செயலிலும் உனது நினைப்பைச் செலுத்துக.

## 8-ம் அதி.—தவஞ் செய்தல்.

தவஞ்செய்த லொன்றேதான் றன்கருமஞ் செய்த
லவஞ்செய்தன் மற்றையன வாமே—சிவஞ்செய்யு
மெய்பணியுஞ் சென்றுமுன ரென்றுந் தவஞ்செய்வார்க்
கிப்புவியி லென்ப வினிது. (எக)

அ-ம் :—தவத்தைச் செய்தல் ஒன்றே தன் கரு

மத்தைச் செய்தல்; மற்றையன அவத்தைச் செய்தலாம். இப்புவியில் தவத்னதச் செய்வார்க்கு முன்னர்ச் சென்று சிவம் எப்பணியையும் என்றும் இனிது செய்யும் என்ப.

ப-ரை:—தவம் செய்தல் ஒன்றே - தவத்தைச் செய்தல் ஒன்றே, தன் கருமம் செய்தல் - தனது சொந்தக் கருமத்தைச் செய்தலாம்; மற்றையன-மற்றைய செயல்களெல்லாம், அவம் செய்தலாம் - பயனின்மையைச் செய்தலாம். இப்புவியில் - இவ்வுலகத்தின் கண், தவம் செய்வார்க்கு-தவத்தைச் செய்வார்க்கு, முனர் - முன், சிவம் - மெய்ப்பொருள், சென்று - போய், எப்பணியும் - எவ்வூழியத்தையும், என்றும்-எக்காலமும், இனிது செய்யும்-நன்கு செய்யும், என்ப-என்று ஆன்றோர் கூறுவர்.

க-ரை:—தவம் செய்தலே தன்கருமம் செய்தலாம்; மற்றையவற்றைச் செய்தல் வீணேயாம். தவம் செய்வார் முன் சிவம் சென்று எவ்வூழியமும் செய்யும்.

தான், ஏ அசைகள்.

இவ்வுலகில் வாழ்கின்ற வெவ்வுயிர்க்கு மெஞ்ஞான்று
மெவ்விதவின் னாங்கு மியற்றாமை—செவ்வி
தினியமுகத் தோடின்னா வேற்றிடன்மெய் யுள்ளித்
தனியிருத்தன் மூன்றுந் தவம். (எ௨)

அ-ம்:—இவ்வுலகில் வாழ்கின்ற எவ் உயிர்க்கும் எவ்வித இன்னாங்கும் எஞ்ஞான்றும் இயற்றாமை;

இன்னாத வற்றை இனிய முகத்தோடு செவ்விது ஏற்றிடல்; மெய்யை உள்ளித் தனியிருத்தல்; (இம்) மூன்றும் தவம்.

**ப-ரை:**—இவ்வுலகில் - இப்பூ உலகில், வாழ்கின்ற-உடம்போடு கூடி நிற்கின்ற, எவ் உயிர்க்கும்-தீய உயிர்களுக்கும், எவ்வித இன்னாங்கும்-எவ்வகைத் துன்பத்தையும், எஞ்ஞான்றும் - எந்நாளிலும், இயற்றாமை - செய்யாமை; இன்னா - துன்பங்களை, இனிய முகத்தோடு - மலர்ந்த முகத்தோடு, செவ்விது ஏற்றிடல்-இனிது கொள்ளல்; மெய் உள்ளி - மெய்ப்பொருளைத் தியானித்துக் கொண்டு, தனி இருத்தல்-தனிமையாக இருத்தல்; மூன்றும் தவம்-இம்மூன்றும் தவமாம்.

**க-ரை:**—உடம்போடு கூடி வாழ்கின்ற எவ்வுயிர்க்கும் எவ்வகைத் துன்பமும் செய்யாமையும், தன்பால் வரும் துன்பங்களை யெல்லாம் சந்தோஷத்தோடு கொள்ளுதலும், கடவுளைத் தியானித்துக் கொண்டிருத்தலும் தவமாகும்.

தியானத்திற்குத் தனித்திருத்தலே உத்தமமாதலால் 'மெய்யுள்ளித் தனியிருத்தல்' என்று கூறப்பட்டது. 'எவ்வுயிர்க்கும்' 'எஞ்ஞான்றும்' என்று கூறப்பட்டதால் தற்காப்பு நிமித்தம் பிற உயிர்களுக்குத் தீங்கு புரிதலும் விலக்கப்பட்டது.

**இம்மூன்றிலொன்றுசெயி னெய்துங்காண்மற்றிரண்டு**
**மிம்மூன்றுஞ் செய்துவரு வேமாயி—னம்மூன்று**

காலத்துஞ் செய்பாவங் காற்றுப் பறந்தொழியு
ஞாலத்து மேம்படுவோ நாம். (எஅ)

அ-ம்:—இம் மூன்றில் ஒன்றைச் செய்யின் மற்றிரண்டும் எய்தும்; இம்மூன்றையும் செய்து வருவேமாயின் நம் மூன்று காலத்தும் செய்பாவம் காற்றுப் பறந்து ஒழியும்; ஞாலத்து நாம் மேம்படுவோம்.

ப-ரை:—இம் மூன்றில் - முந்திய செய்யுளிற் சொல்லப்பட்ட மூன்று செயல்களில், ஒன்று செயின்-ஒன்றை (நாம்) செய்தால், மற்றிரண்டும் எய்தும்-மற்றிரண்டு செயல்களும் நம்மிடம் பொருந்தும்; இம்மூன்றும் செய்து வருவேமாயின் - இம்மூன்று செயல்களையும் (நாம்) செய்து கொண்டு வருவோமானால், நம்-நமது, மூன்று காலத்தும் - இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலங்களிலும், செய் - செய்யப்பட்ட, பாவம் - பாவங்கள், காற்றுப் பறந்து ஒழியும்-காற்றுப் போல விரைந்து நீங்கும்; நாம் ஞாலத்து மேம்படுவோம்-(பின்னர்) நாம் உலகின்கண் மற்றை எத்தேசத்தாரினும் உயர்ச்சியை அடைவோம்.

க-ரை:—தவச் செயல்களாகிய மூன்றில் ஒன்றைச் செய்யின், மற்றைய இரண்டுங் கைகூடும்; நாம் மூன்றையும் செய்து கொண்டு வருவோமாயின், நமது மூன்று காலங்களிலும் செய்யப்பட்ட பாவங்கள் நம்மைவிட்டு நீங்கிவிடும்; பின்னர் நாம் உலகத்தில் உயர்ச்சியை அடைவோம்.

காண் அசை. செய் என்பது வினைத்தொகை

சாதியெனும் பொய்கொண்டுந் தன்சமயப் பேய்கொண்டு
மாதினது நோய்கொண்டும் வாழுயிர்க—ளாதி
மகவென்று நோக்காது மாறுத செய்வர்
தகவென்றும் பேணு தவர். (எச)

அ-ம் :—தகவை என்றும் பேணுதவர், சாதி என்னும் பொய்யைக் கொண்டும், தன் சமயப் பேயைக் கொண்டும், மாதினது நோயைக் கொண்டும், வாழ் உயிர்களை ஆதியின் மக வென்று நோக்காது மாறுத செய்வர்.

ப-ரை :—தகவு என்றும் பேணுதவர்-பெருமையை ஒரு போதும் விரும்பாதவரே, சாதி எனும் பொய் கொண்டும்-சாதி என்னும் பொய்யைக் காரணமாகக் கொண்டும், தன் சமயப் பேய் கொண்டும்-தனது மதமாகிய பேயைப் பற்றியும், மாதினது நோய் கொண்டும்-காம நோயைக் கொண்டும், வாழ் உயிர்கள் - உடம்போடு கூடி வாழுகின்ற உயிர்களை, ஆதி மக என்று நோக்காது - மெய்ப்பொருளின் குழந்தைகளென்று கருதாது, மாறுத செய்வர். அவற்றிற்குத் துன்பங்களைப் புரிவர்.

க-ரை :—பிற உயிர்களுக்குத் தீங்கு புரிவதற்கு முக்கிய காரணம் மூன்றென்பதும், அவை சாதிபேதமும் மதபேதமும் காமமுமாம் என்பதும் கூறப்பட்டன.

ஆதிவழி வந்துநிற்கு மாருயிர்கள் தம்முள்ளே
சாதிமத வேற்றுமைதான் சார்வதெங்ஙன்?—ஆதி
ஒருவனென்ப தெல்லோர்க்கு மொத்தமுடி வென்றால்
வருவதெங்ஙன் வேற்றுமைதான் மற்று? (எரு)

அ-ம்:—ஆதியின் வழியாக வந்து நிற்கும் ஆர் உயிர்கள் தம்முள் சாதி மத வேற்றுமை சார்வது எங்ஙன்? ஆதி ஒருவன் என்பது எல்லோர்க்கும் ஒத்தமுடிவு என்றால் வேற்றுமை வருவது எங்ஙன்?

ப-ரை:—ஆதிவழி-மெய்ப்பொருளின் மூலமாக, வந்து நிற்கும்-தோன்றி நிற்கின்ற, ஆர் உயிர்கள் தம்முள் - அருமையான உயிர்களுக்குள், சாதிமத வேற்றுமை-சாதி பேதமும் மத பேதமும், சார்வது எங்ஙன்-வந்து பொருந்துவது எவ்வாறு? ஆதி-கடவுள், ஒருவன் என்பது - ஒருவனே என்பது, எல்லோர்க்கும்-சகல சாதியார்களுக்கும் சமயத்தார்களுக்கும், ஒத்த முடிவு என்றால்-பொருந்திய சித்தாந்தம் என்னின், வேற்றுமை - அவ்வுயிர்களுள் சாதி மத வேற்றுமைகள், வருவது எங்ஙன்-வந்து பொருந்துவது எவ்வாறு?

க-ரை:—உலகத்திலுள்ள பலவகை உயிர்களும் கடவுளிடத்துத் தோன்றியவை யென்பதும் கடவுள் ஒருவனே என்பதும் எல்லோர்க்கும் ஒத்த முடிவுகள். அவ்வாறிருக்க, அவ்வுயிர்களுள் சாதி பேதம் மத பேதம் உண்டென்று கூறுதல் பிழையே யன்றிப் பிறிதன்று.

ஏகாரமும், தான் இரண்டும், மற்றும் அசைகள்.

உள்ளமதா னாவா லுடம்பாலிங் கெவ்வுயிர்க்கு
மெள்ளளவுந் தீங்கிழையா திச்சையின்றி—நள்ளு
மொழுக்கத்தான் மேம்படுவ ரோர்சிலர்தான் மற்றோ
ரிழுக்கத்தாற் கீழ்ப்படுவ ரிங்கு. (எசு)

**அ-ம்:**—உள்ளமதால் நாவால் உடம்பால் இங்கு எவ் உயிர்க்கும் எள்ளின் அளவும் தீங்கை இழை யாதும் இச்சையின்றியும் நள்ளும் ஒழுக்கத்தால் ஒரு சிலர் இங்கு மேம்படுவர்; இழுக்கத்தால் மற் றோர் கீழ்ப்படுவர்.

**ப-ரை:**—உள்ளமதால் - நினைப்பால், நாவால்-சொல்லால், உடம்பால்-செயலால், இங்கு - இவ்வுல கின்கண், எவ் உயிர்க்கும்-எவ்வகை உயிர்க்கும், எள் அளவும்-ஒரு சிறிதும், தீங்கு இழையாது - துன் பத்தைச் செய்யாதும், இச்சை இன்றி-காமம் இன் றியும், நள்ளும்-எவ்வுயிரையும் நேசிக்கும், ஒழுக்கத் தால்-நடையால், ஓர் சிலர்-ஒரு சிலர், இங்கு மேம்படு வர்-இங்கு மேம்பாடு உடையவ ராவர்; இழுக்கத் தால்-அவ்வாறு செய்யத் தவறுதலால், மற்றோர்-மற் றையவர், கீழ்ப்படுவர் - இங்குக் கீழ்ப்பாடு உடைய வ ராவர்.

**க-ரை:**—மனம் வாக்கு காயம் என்னும் முக்கர ணங்களாலும் இவ்வுலகிலுள்ள எவ்வுயிர்க்கும் எவ் வளவும் தீமை புரியாதும் காமம் இல்லாதும் எவ்வுயி ரையும் நேசிக்கின்ற நடையால் சிலர் மேலோராக

மதிக்கப்படுவர்; முக்கரணங்களில் ஒன்றால் உயிர்க ளுக்குத் தீங்கு இழைத்தலாலும் காமத்தைக் கொள் ளலாலும் மற்றையோர் கீழோராக மதிக்கப்படுவர்.

எண்ணும்மைகள் தொக்கன. தான் அசை.

ஒழுக்கமொன்றே மெய்ப்பொருளை யொன்றுதற்கு மார்க்க
மிழுக்கமொன்றே மெய்ப்பொருள்விட் டீர்த்து-வழுக்குகின்ற
மார்க்கத்திற் றள்ளுமென மாண்மதமெல் லாஞ்சொலலாற்
சேர்க்கமுய லஃதென் றுந் தேர்ந்து. (எஎ)

அ-ம் :—ஒழுக்கம் ஒன்றே மெய்ப்பொருளை ஒன்றுதற்கு மார்க்கம்; இழுக்கம் ஒன்றே மெய்ப்பொ ருளை விட்டு ஈர்த்து வழுக்குகின்ற மார்க்கத்தில் தள்ளும்; என மாண் மதம் எல்லாம் சொலலால் அஃ தைத் தேர்ந்து சேர்க்க என்றும் முயல்.

ப-ரை :—ஒழுக்கம் ஒன்றே-(ஓர் உயிர்க்கும் தீங் கிழையாதும் ஒரு சிறிதும் காமமின்றியும் இராநின்ற) நடக்கை ஒன்றே, மெய்ப்பொருளை-கடவுளை, ஒன்று தற்கு - சேர்தற்கு, மார்க்கம்-வழியாம்; இழுக்கம் ஒன்றே-(உயிர்களுக்குத் தீங்கிழைத்தும் காமத்தைக் கொண்டும் இராநின்ற)தவறு ஒன்றே, மெய்ப்பொ ருள் விட்டு-கடவுளைவிட்டு, ஈர்த்து- பிரித்து, வழுக்கு கின்ற-கீழே விழுமாறு சறுக்குகின்ற, மார்க்கத்தில் தள்ளும்-வழியில் சேர்க்கும்; என-என்று, மாண் மதம் எலாம் சொலலால்-சிறந்த சமயநூல்கள் அனைத்தும் கூறுதலால், அஃது தேர்ந்து சேர்க்க என்றும் முயல்- அவ்வொழுக்கத்தை அறிந்து உன்னிடம் சேர்ப்ப

தற்கு ஒவ்வொரு நாளும் முயற்சி செய்.

க-ரை :— உயிர்களுக்குத் தீங்கிழையாமையும் காமமில்லாமையுமாகிய ஒழுக்கமே கடவுளை அடைதற்கு மார்க்க மென்றும், உயிர்களுக்குத் தீங்கிழைத்தலும் காமத்தைக் கொள்ளுதலுமாகிய இழுக்கமே கடவுளை விட்டுப் பிரிக்கும் மார்க்கமென்றும், ஆசிகமத நூல்கள் அனைத்தும் கூறுதலால் அவ்வொழுக்கத்தை நன்கு உணர்ந்து உன்னிடம் சேர்ப்பதற்கு எஞ்ஞான்றும் முயல்வாயாக.

இவ்வுலகி னிற்கின்ற வெவ்வுயிரு மீசன்மக
வெவ்வுடலு மீசனில மென்றெண்ணி--யெவ்வுயிர்க்கு
மூறொன்றுஞ் செய்யா துயர்வடைவாய் மெய்சேர்க்கு
மாறென்று காண்பா யது. (எஅ)

அ-ம் :—இவ்வுலகில் நிற்கின்ற எவ்உயிரும் ஈசனது மக, எவ்உடலும் ஈசனது இலம், என்று எண்ணி எவ் உயிர்க்கும் ஊறு ஒன்றும் செய்யாது உயர்வை அடைவாய்; அது மெய்யோடு சேர்க்கும் ஆறு என்று காண்பாய்.

ப-ரை:—இவ்உலகில்-இவ்வுலகத்தில், நிற்கின்ற-உடம்போடு கூடி வாழ்கின்ற, எவ்உயிரும்-சகல உயிர்களும், ஈசன் மக-கடவுளது குழந்தைகள், எவ் உடலும்-உயிரோடு கூடிய சகல சரீரங்களும், ஈசன் இலம்-கடவுளது வீடுகள், என்று எண்ணி-என்று நினைத்து, எவ் உயிர்க்கும்-யாதாம் ஓர் உயிர்க்கும், ஊறு ஒன்றும் செய்யாது-தீங்கு சிறிதும் புரியாது, உயர்வு அடை

வாய்-மேம்பாட்டை அடைவாயாக; அது-அவ்வாறு உயிர்களுக்குத் தீங்கு புரியாது மேம்பாடு அடைதல்-மெய் சேர்க்கும்-கடவுளோடு சேர்க்கும், ஆறு என்று-மார்க்கம் என்று, காண்பாய்.-அறிவாயாக.

**க-ரை:**—இவ்வுலகத்திலுள்ள சகல உயிர்களும் கடவுளுடைய குழந்தைகளென்றும் சகல உயிர்களின் உடல்களும் கடவுளது வீடுகளென்றும் நீ ஞாபகத்தில் வைத்து எவ்வுயிர்க்கும் எள்ளளவும் தீங்கு புரியாது மேம்பாடு அடைவாயாக; அவ்வாறு யாதாம் ஓர் உயிர்க்கும் தீங்கு புரியாது மேம்பாடு அடைதல் கடவுளோடு சேர்தற்குரிய வழியென்று அறிவாயாக.

உன்னுடலிற் குன்னுளத்திற் கூறுற்ற லஃதவற்றை
மன்னுதலி யற்கையென்று மற்றதனு - லுன்னறிவின்
மாசொழிய வஃதொளியை மன்னுமென்று முன்னன்மைக்
கீசனரு ளொன்றென்று மெண். (எகூ)

**அ-ம்:**—செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை :**—உன் உடலிற்கு-உனது சரீரத்திற்காவது, உன் உளத்திற்கு-உனது மனத்திற்காவது, ஊறு உற்றால்-துன்பம் நேர்ந்தால், அஃது-துன்பம், அவற்றை-சரீரத்தையும் மனத்தையும், மன்னுதல்-பொருந்துதல், இயற்கை என்றும்-இயல்பு என்றும், அதனால்-அத்துன்ப முறலால், உன் அறிவின்- உனது அறிவைப்பற்றிய, மாசு ஒழிய-குற்றம் நீங்க, அஃது-அவ்வறிவு, ஒளியை - பிரகாசத்தை, மன்னும் என்றும் - பொருந்தும் என்றும், உன் நன்மைக்கு-

உனது நன்மைக்காக, ஈசன் அருள் ஒன்று என்றும்-(அஃது) கடவுள் (உனக்குக்) கொடுத்த ஒப்பற்ற கருவி என்றும், எண்-நீ நினைப்பாயாக.

**க-ரை:**—உனது சரீரத்திற்காவது மனத்திற்காவது துன்பம் நேர்ந்தால், அவை துன்பத்தை யுறுதல் இயற்கை யென்றும், அத்துன்பத்தை உறலால் உனது அறிவின் மாசு நீங்கி அது பிரகாசத்தை அடையுமென்றும், அத்துன்பம் உனது நன்மைக்காகக் கடவுளால் உனக்குக் கொடுக்கப்பட்ட தென்றும் அறிவாயாக.

மற்று அசை. "சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம், சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" என்றார் திருவள்ளுவரும். அருள்-வினைத் தொகை.

எப்பெயராற் கூறிடினு மெவ்வியல்பை யேற்றிடினு
மெப்பொழுது மெய்ப்பொருள்தா னேகங்காண்-செப்பமுட
னப்பொருளைப் பேணி னறமாதி நான்குமுனை
யிப்பொழுதே சேரு மிவண். (அ௰)

**அ-ம்:**—எப்பெயரால் கூறிடினும் எவ்இயல்பை ஏற்றிடினும் மெய்ப்பொருள் எப்பொழுதும் ஏகம். அப்பொருளைச் செப்பமுடன் பேணின், இவண் இப்பொழுதே அறம் ஆதி நான்கும் உன்னைச் சேரும்.

**ப-ரை:**—எப்பெயரால் கூறிடினும் - (கடவுளை) எவ்வெப் பெயர்களால் அழைத்தாலும், எவ்இயல்பை ஏற்றிடினும்-(கடவுளுக்கு) எவ்வெவ் விலக்கணங்களைப் பொருத்தினும், மெய்ப்பொருள்-கடவுள்,

எப்பொழுதும் - சர்வகாலங்களிலும், ஏகம்-ஏகமே. அப்பொருளை - கடவுளை, செப்பமுடன் பேணின்- (நீ) ஒழுக்கத்தோடு கூடி நின்று தியானிப்பாயாயின், இவண்- இவ்வுலகத்திலேயே, இப்பொழுதே-இக்கணத்திலேயே, அறம் ஆதி நான்கும்-அறம் பொருள் இன்பம வீடு என்னும் நான்கும், உனைச் சேரும்-உன்பால் வந்து பொருந்தும்.

க-ரை :—எவ்வெவர் எவ்வெப்பெயர்களால் கடவுளை அழைப்பினும், எவ்வெவர் எவ்வெவ் விலக்கணங்களைக் கடவுளுக்கு ஏற்றினும், கடவுள் எப்பொழுதும் ஒருவரே. நீ ஒழுக்கத்தோடு நின்று கடவுளைத் தியானித்து வருவாயாயின் இவ்வுலகத்திலேயே இக்கணத்திலேயே புருஷார்த்தமாகிய நான்கையும் நீ அடைவாய்.

தான், காண், அசைகள்.

## மெய்யுணர்தல்.

ஓதரிய மெய்ப்பொருளே யுன்பொறியின் முன்னுலக
மாதலன்றி வேறுலகென் றியாதுமிலை—யோது
முலகினு தாரமதா வுள்ளபொரு ளன்றி
யிலைவேறு மெய்ப்பொருளென் றெண். (அக)

அ-ம் :—ஓது அரிய மெய்ப்பொருளே உன் பொறியின் முன் உலகம் ஆதல் அன்றி உலகு என்று வேறு யாதும் இல்லை; ஓதும் உலகின் ஆதாரமதாக உள்ள பொருள் அன்றி மெய்ப்பொருள் என்று வேறு இல்லை, (இவ்வுண்மையை) எண்.

**ப-ரை:**—ஓது அரிய-சொல்லுதற்கு முடியாத மெய்ப்பொருளே-கடவுளே, உன் பொறியின் முன்-உனது ஞானேந்திரியங்களின் முன்னர், உலகம் ஆதல் அன்றி-உலகமாகத் தோற்றுதல் தவிர, உலகு என்று-உலகம் என்று, வேறு யாதும் இலே-வேறு ஒரு பொருளும் இல்லே; ஓதும் - நாம் கூறும், உலகின் ஆதாரமதா-உலகத்தின் ஆதாரமாக, உள்ள பொருள் அன்றி-இருக்காநின்ற வஸ்து தவிர, மெய்ப்பொருள் என்று - கடவுள் என்று, வேறு இல்லே - வேறு ஒரு பொருள் இல்லே. எண்-(இவ்வுண்மையை) ஞாபகத்தில் வைத்துக்கொள்.

**க-ரை:**—கடவுளே உனது பொறிகளின் முன்னர் உலகமாகத் தோற்றுதல் தவிர உலகமென்று வேறு ஒரு பொருளில்லே; உலகத்திற்கு ஆதாரமாயுள்ள வஸ்து தவிர கடவுளென்று வேறு ஒரு பொருளில்லே.

கானலினீர் போலுங் கயிற்றிலராப் போலுமெய்யி
லானதுல கென்றிங் கறைவருல—கானதது
கானல் கயிறடுக்கக் காணல்போ லவ்விரண்டு
ஞானமடுக் கக்காணு நன்கு (அஉ)

**அ-ம்:**—கானலில் நீர் போலும் கயிற்றில் அரவு போலும் மெய்யில் உலகு ஆனது என்று இங்கு அறைவர். கானலேயும் கயிற்றையும் அடுக்க அவ்விரண்டும் காணல் போல் ஞானத்தை அடுக்க அது உலகானது நன்கு காணும்.

ப-ரை:—கானலில் நீர் போலும்-கானலின் கண்ணே ஜலம் தோன்றுவது போலும், கயிற்றில் அரா போலும்-கயிற்றின் கண்ணே பாம்பு தோன்றுவது போலும், மெய்யில்-மெய்ப்பொருளிடத்தில், உலகு ஆனது என்று - உலகம் தோன்றுகின்றதென்று, இங்கு அறைவர் - இவ்வுலகில் (ஆன்றோர்) கூறுவர். கானல் கயிறு அடுக்க-கானலையும் கயிற்றையும் சமீபிக்க, அவ்விரண்டும் காணல் போல்-கானலும் கயிறும் தெரிதல் போல, ஞானம் அடுக்க-ஞானத்தைச் சமீபிக்க, அது உலகானது - மெய்ப்பொருள் உலகமாகத் தோன்றியது, நன்கு காணும்-நன்கு தெரியும்.

க-ரை:—கானல் ஒளியினது சம்பந்தத்தால் நீர் போலத் தோன்றும்; கயிறு இருளினது சம்பந்தத்தால் அரவு போலத் தோன்றும்: இவ்வாறே, மெய்ப்பொருள் பொறிகளின் சம்பந்தத்தால் உலகம் போலத் தோன்றும். கானலுள்ள இடத்தை நெருங்கிய போது, முன்னர் நீர்போலத் தோன்றியது கானலே எனத் தெரியும்; கயிறுள்ள இடத்தை நெருங்கிய போது, முன்னர் அரவுபோலத் தோன்றியது கயிறே எனத் தெரியும்: இவ்வாறே, ஞானத்தை நெருங்கியபோது, முன்னர் உலகம்போலத் தோன்றியது மெய்ப்பொருளே எனத் தெரியும்.

கானல் கயிறிரண்டுங் காணுங்கா னீரரவு
போனபடி மெய்காணப் போமுலகு—கானல்
கயிறுண்மை சேரவவை காணுமுல கெய்து
மெயினுண்மை சேர விரைந்து. (அரு)

**அ-ம்:**—கானல் கயிறு இரண்டையும் காணுங் கால் நீரும் அரவும் போனபடி மெய்யைக் காண உலகு போம். கானல் கயிறு (இவற்றின்) உண்மை சோர அவை காணும்; (அது போல), மெய்யின் உண்மை சோர உலகு விரைந்து எய்தும்.

**ப-ரை:**—கானல் கயிறு இரண்டும் காணுங் கால்-கானலும் கயிறுமாகிய இரண்டையும் காணும் போது, நீர் அரவு போனபடி - ஜலத் தோற்றமும் பாம்புத் தோற்றமும் நீங்கியது போல, மெய் காண- மெய்ப்பொருளைக் காண, உலகு போம் - உலகத் தோற்றம் நீங்கி விடும். கானல் கயிறு உண்மை சோர-கானலென்ற உண்மையும் கயிறென்ற உண்மையும் நழுவ, அவை காணும்-ஜலத் தோற்றமும் பாம்புத் தோற்றமும் உண்டாம்; (அது போல), மெயின் உண்மை சோர-மெய்ப்பொருளென்ற உண்மை நழுவ, உலகு விரைந்து எய்தும்-உலகத் தோற்றம் உடனே உண்டாம்.

**க-ரை:**—நீராகத் தோன்றிய பொருளைக் கானலென்று உணரும் போது நீர்த்தோற்றம் நீங்கிவிடுவது போலவும், அரவாகத் தோன்றிய பொருளைக் கயிறென்று உணரும் போது அரவுத்தோற்றம் நீங்கிவிடுவது போலவும், உலகமாகத் தோன்றிய பொருளை மெய்ப்பொருளென்று உணரும் போது உலகத் தோற்றம் நீங்கிவிடும். கானலென்ற உண்மை நழுவும் போது நீர்த்தோற்றம் உண்டாவது போலவும், கயிறென்ற உண்மையை மறந்தபோது அரவுத்தோற்றம் உண்டாவது போலவும், மெய்ப்

பொருளென்ற உண்மை நழுவும் போது உலகத் தோற்றம் உண்டாம்.

கானலினீர் காணக் கயிற்றிலராக் காணச்சேண்
போனவரு ரஞ்சுமரூர் போந்தசெயல்—மான
வுலகினைக்கா ணுந்தோறு முன்னரிய துன்ப
மிலகிமிகுங் காண்பா யினிது. (அச)

**அ-ம்:**—கானலில் நீரைக் காணச் சேண் போன அரூரும், கயிற்றில் அராவைக்காண அஞ்சும் அரூரும், போந்த செயலே மான, உலகினைக் காணும் தோறும் உன்னரிய துன்பம் இலகி மிகும். (இவ்வுண்மையை) இனிது காண்பாய்.

**ப-ரை:**—கானலில் நீர் காண - கானலின்கண் ஜலத்தோற்றத்தைப் பார்க்க, சேண் போன அரூர், (அதனை ஜலமென்று கருதிப் பருகுதற்காக) நீண்ட தூரம் சென்றதுன்பமும், கயிற்றில் அராக்காண-கயிற்றில்பாம்புத் தோற்றத்தைப் பார்க்க, அஞ்சும் அரூர்-(அதனைப் பாம்பென்று கருதிப்) பயப்படும் துன்பமும், போந்த செயல் மான - உண்டாயசெய்கையை ஒப்ப, உலகினைக் காணும்தோறும்-(மெய்ப்பொருளில்) உலகத்தோற்றத்தைப் பார்க்கும் போதெல்லாம், உன்னரிய துன்பம் - நினைத்தற்கரிய துன்பங்கள், இலகி மிகும் - உண்டாகிப் பெருகும். இனிது காண்பாய் - இவ்வுண்மையை நீ நன்றாகக் காண்பாயாக.

**க-ரை:**—கானலில் நீர்த்தோற்றத்தைக் காணும் போது அதனை நீரென்று கருதிப் பருகுதற்காக அது

தோன்றும் இடம்வரை செல்லும் துன்பமும், கயிற்றில் அரவுத்தோற்றத்தைக் காணும்போது அதனை அரவென்று கருதிப் பயப்படும் துன்பமும் உண்டாவது போல, மெய்ப்பொருளில் உலகத்தைப் பார்க்கும் போது உலகத் துன்பங்களெல்லாம் உண்டாகிப் பெருகும். இவ்வுண்மையை நீ நன்கு அறிவாயாக.

பற்றுமவா வும்மில்லார் பாம்புபுனல் கண்டாலுஞ்
சற்றுமனு ரெய்தார்காண் டாரணியிற்—பற்று
மவாவுமின்றி நிற்பார்க் கணுகாது தீது
தவாநன்றே மல்குந் தழைத்து. (அ௫)

அ-ம்:—பற்றும் அவாவும் இல்லார் பாம்பையும் புனலையும் கண்டாலும் சற்றும் அனுர் எய்தார். தாரணியில் பற்றும் அவாவும் இன்றி நிற்பார்க்குத் தீது அணுகாது; தவா நன்றே தழைத்து மல்கும்.

ப-ரை:பற்றும்-சரீர அபிமானமும், அவாவும்-நீர் வேட்கையும், இல்லார்-இல்லாதவர், பாம்பு-அரவையும், புனல்-நீரையும், கண்டாலும்-கயிற்றினிடத்தும் கானலினிடத்தும் பார்த்தாலும், சற்றும் - சிறிதும், அனுர் எய்தார்-(கானல்) நீரைப் பருகக் கருதிச் சேண் செல்லும் துன்பமும் (கயிற்று) அரவைக் கண்டு நடுங்கும் துன்பமும் அடையமாட்டார். தாரணியில் - இவ்வுலகத்தில், பற்றும்-அகப்புறப்பற்றுக்களும், அவாவும்-அப்பற்றுக்களுக்கு ஆதாரமாய பொருள்களின் மீது ஆசையும், இன்றி நிற்பார்க்கு-இல்லாமல் வாழ்வார்க்கு, தீது அணுகாது-தீய வினையோ பயனோ வாராது; தவா நன்றே-அழியாத நல்ல வினையும் பயனுமே, தழைத்து மல்கும்-வளர்ந்து பெருகும்

க-ரை:—சரீரப் பற்றில்லாதவர் கயிற்றை அரவாகக் கண்டாலும் அஞ்சும் துன்பமுறார்; நீர் வேட்கை யில்லாதவர் கானலை நீராகக் கண்டாலும் சேண் செல்லும் துன்பமுறார். அது போல, அகங்கார மமகாரங்க ளில்லாது இவ்வுலகத்தில் வாழ்கின்றவர் தீய செயல்களைச் செய்யவும் மாட்டார், அவற்றின் பயன்களை அடையவும் மாட்டார்; நல்ல செயல்களையே செய்வார், அவற்றின் பயன்களையே அடைவார்.

மண்ணாதி வித்தை மரனாகச் செய்துபல
னண்ணிடநாஞ் செய்தல்போ னஞ்செய்யு—மெண்ணில்
வினையையெலா மெய்யே விளைத்துநமக் கீயும்
வினையினது நேர்பயனை மீட்டு. (அசு)

அ-ம்:—மண் ஆதிய வித்தை மரன் ஆகச் செய்து பலனை நாம் நண்ணிடச் செய்தல் போல், மெய்யே நாம் செய்யும் எண் இல் வினையை எல்லாம் விளைத்து வினையினது நேர் பயனை நமக்கு மீட்டு ஈயும்.

ப-ரை:—மண் ஆதி-மண் நீர் முதலியன, வித்தை-வித்துக்களை, மரன் ஆகச் செய்து-மரங்களாக்கி, பலனை-அவற்றின் பலன்களை, நாம் நண்ணிட - நாம் அடைய, செய்தல் போல் - செய்கின்றது போல, மெய்யே-இறைவனே, நாம் செய்யும்-நாம் செய்கின்ற, எண் இல் - எண்ணிறந்த, வினையை எல்லாம் - வினைகளை யெல்லாம், விளைத்து-விதிகளாக்கி, வினையினது நேர்பயனை - வினைகளின் நேரான பயன்களை, நமக்கு மீட்டு ஈயும்-நமக்குத் திரும்பக் கொடுப்பான்.

**க-ரை:**—மண் முதலியன வித்துக்களை மரங்களாக்கி அவற்றின் கனிகளை நமக்கு நல்குவது போல, மெய்ப்பொருள் நாம் செய்யும் வினைகளை விதிகளாக்கி வினைகளின் நேரான பயன்களை நமக்கு நல்கும்.

பற்றறுக்க வெஞ்ஞான்றும் பற்றில்லா மெய்ப்பொருளைப்
பற்றுகவென் றான்குரவன் பற்றியதைப்—பற்றறுத்த
காலத்தே மெய்ப்பொருளைக் காரியத்தின் கர்த்தாவா
ஞாலத்தே கண்டிடுவோ நன்கு. (அஎ)

**அ-ம்:**—பற்றை அறுக்க எஞ்ஞான்றும் பற்று இல்லாத மெய்ப்பொருளைப் பற்றுக என்றான் குரவன். அதைப் பற்றிப் பற்றை அறுத்த காலத்தே மெய்ப்பொருளைக் காரியத்தின் கர்த்தாவாக ஞாலத்தே நன்கு கண்டிடுவோம்.

**ப-ரை:**—பற்று அறுக்க-அகப்பற்றையும் புறப்பற்றையும் ஒழிக்க, எஞ்ஞான்றும் பற்று இல்லா - எக்காலத்திலும் அவ்விரண்டு பற்றுக்களும் இல்லாத, மெய்ப்பொருளை-கடவுளை, பற்றுக - பற்றுக்கோடாகக் கொள்க, என்றான் குரவன்-என்று கூறினன் நமது ஆசிரியன் வள்ளுவன். அதைப்பற்றி - மெய்ப்பொருளைப் பற்றுக் கோடாகக் கொண்டு, பற்று அறுத்த - அகப்பற்றையும் புறப்பற்றையும் ஒழித்த, காலத்தே - காலத்திலே, மெய்ப்பொருளை - கடவுளை, காரியத்தின் கர்த்தாவா-இங்கு நிகழ்கின்ற பல காரியங்களுக்கும் முதல்வனாக, ஞாலத்தே - இவ்வுலகின்

கண்ணே, நன்கு கண்டிடுவோம் - நன்முக உணர் வோம்.

க-ரை :—அகப்புறப் பற்றுக்களை ஒழிப்பதற்கு மார்க்கம் கடவுளைப் பற்றுதலே. கடவுளைப் பற்றி அவ்விரண்டு பற்றுக்களையும் நாம் ஒழித்த காலத்தில் இவ்வுலகில் நிகழும் சகல காரியங்களுக்கும் கடவுளே கர்த்தா வென்று நாம் தெளிவாகத் தெரிவோம்.

சரீராபிமானித்தை அகப்பற்றென்றும் சரீர சுகத்தை நல்கும் பொருள்களபிமானத்தைப் புறப்பற்றென்றும் சிலர் கூறுவர். 'யான்' என்னும் நினைப்பை அகப்பற்றென்றும், அந்நினைப்புப் பற்றுநின்ற சரீரத்தையும் பிறவற்றையும் புறப்பற்றென்றும் கூறுவர் வேறு சிலர். "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்." என்றார் திருவள்ளுவர்.

உன்னையுமிங் குன்னையடுத் துள்ளவுயிர் தம்மையுமே
மன்னுமரு மின்பதுன்பம் வந்தவழி—யென்னென்று
பார்ப்பினுயிர் செய்வினையைப் பாரிக்கச் செய்தவையாச்
சேர்ப்பதுமெய் யென்றுணர்வாய் தேர்ந்து. (அஅ)

அ-ம் :—இங்கு உன்னையும் உன்னை அடுத்து உள்ள உயிர் தம்மையும் மன்னும் அரும் இன்ப துன்பம் வந்த வழி என் என்று பார்ப்பின், உயிர் செய் வினையைப் பாரிக்கச் செய்து அவையாகச் சேர்ப்பது மெய் என்று தேர்ந்து உணர்வாய்.

ப-ரை :—இங்கு - இவ்வுலகில், உன்னையும்

உன்னை அடுத்துள்ள உயிர் தம்மையும்-உன்னையும் உன்னை நெருங்கியுள்ள உயிர்களையும், மன்னும் அரும் இன்பதுன்பம் - பொருந்துகின்ற நீக்குதற்கரிய இன்பங்களும் துன்பங்களும், வந்த வழி-வந்த மார்க்கம், என் என்று - எஃது என்று, பார்ப்பின் - ஆராயின், உயிர் செய் வினையை - உயிர்கள் செய்கின்ற நல்வினை தீவினைகளை, பாரிக்கச் செய்து - பருமனாக்கி, அவையாச் சேர்ப்பது - இன்பதுன்பங்களாக நல்குவது, மெய் என்று-மெய்ப்பொருளே யென்று, தேர்ந்து உணர்வாய் - துணிந்து அறிவாய்.

**க-ரை :**—உன்னுடைய இன்பதுன்பங்கள் உனக்கும், உனது சமீபத்தில் உள்ள உயிர்களுடைய இன்பதுன்பங்கள் அவற்றிற்கும், எவ்வாறு வந்தனவென்று நீ சிந்தித்துப் பார்ப்பாயாயின், உயிர்கள் செய்கின்ற நல்வினைகளையும் தீவினைகளையும் விளையச்செய்து இன்பங்களும் துன்பங்களுமாக நல்குவது மெய்ப்பொருளே யென்று நன்கு அறிவாய்.

இரவிமதி மீன்கணங்க ளிவ்வுலக மாழி
மரபினொடு நிற்கின்ற மாண்பு—மரபி
னுயிர்பலவுந் தோன்றிநின்றுங் கோய்கின்ற மாண்பு
மெயினியலைக் காட்டும் விளக்கு. (அகூ)

**அ-ம் :**—செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை :**—இரவி - சூரியனும், மதி - சந்திரனும், மீன் கணங்கள்-நட்சத்திரக் கூட்டங்களும், இவ்வுலகம் - இப்பூமியும், ஆழி - சமுத்திரங்களும், மரபி

ஞெடு-முறைமையோடு, நிற்கின்ற மாண்பும்-அதனை தன் எல்லையில் நிற்கின்ற சிறப்பும், மரபின் - முறை யாக, உயிர் பலவும்-பலவகை உயிர்களும், தோன்றி-உற்பத்தியாகி, நின்று-நிலை பெற்று, ஒய்கின்ற மாண் பும்-அழிகின்ற சிறப்பும், மெயின் இயலை-மெய்ப்பொ ருளின் சர்வஜ்ஞத்துவம் சர்வசக்தி சர்வவியா பகம் என்னும் இலக்கணங்களை, காட்டும் விளக்கு - தெரிவிக்கும் தீபங்கள்.

க-ரை:—சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் பூமி சமுத்திரங்கள் அதனதன் எல்லை கடவாது நிற்கின்ற தன்மையும், பலவகை உயிர்களும் முறை யாகத் தோன்றி நின்று அழியும் தன்மையும், மெய்ப் பொருளினது சர்வஜ்ஞத்துவம் சர்வசக்தி சர்வ வியாபகம் ஆகிய இலக்கணங்களைக் காட்டுகின்றவை.

ஆங்கு அசை.

காண்பாயேற் காரியமுங் காரணமுங் கர்த்தாவுங்
காண்பாய்நீ மெய்ப்பொருளே காட்சிதனின்—மாண்பார்
மனமுயிர்மெய் யாழிபுவி வானவற்றைச் சார்ந்த
வினமா யவையளிப்ப தென்று. (கூ௰)

அ-ம்:—காரியத்தையும் காரணத்தையும் கர்த் தாவையும் காண்பாயேல், மெய்ப்பொருளே காட்சி தனில் மாண்பு ஆர் மனமும் உயிரும் மெய்யும் ஆழி யும் புவியும் வானும் அவற்றைச் சார்ந்த இனமு மாய் அவற்றை அளிப்பது என்று நீ காண்பாய்.

ப-ரை:—காரியமும் - இவ்வுலகத்தில் நிகழும்

பல காரியங்களையும், காரணமும் - அவற்றின் காரணங்களையும், கர்த்தாவும் - காரணங்களைக் காரியங்களாக்கும் கர்த்தாவையும், காண்பாயேல்-நீ காண்பாயானால், மெய்ப்பொருளே-கடவுளே, காட்சிதனில்-அறிவு மனம் பொறிஇவற்றின் பார்வையில், மாண்பு ஆர்-மாட்சிமை பொருந்திய, மனமும் - நினைப்புக்களும், உயிரும் - உயிர்களும், மெய்யும்-உடல்களும், ஆழி - சமுத்திரங்களும், புவி-பூமியும், வான்-ஆகாயமும், அவற்றைச் சார்ந்த இனம் - அவற்றைப் பொருந்திய பலவகைப் பொருள்களும், ஆய் அவை அளிப்பது - ஆகி அவற்றை ஆள்வது, என்று நீ காண்பாய் -என்று நீ அறிவாய்.

க-ரை :—இவ்வுலகத்தின் ஒவ்வொரு காரியத்தையும் அதனதன் காரணத்தையும் அக்காரணங்களைக் காரியங்களாக்கும் கர்த்தாவையும் நீ அறிவாயானால், கடவுளே அறிவு மனம் பொறி என்பவற்றின் காட்சிகளில் புலப்படும் நினைப்புக்களும் உயிர்களும் பிறவுமாகி அவற்றைக் காப்பதென்று நீ அறிவாய்.

### மெய்ந்நிலை யடைதல்.

மெய்ந்நிலையை யெய்துதலே மெய்வீடு மாந்தரெலாங்
கைந்நிலையி னின்றருளைக் கைக்கொண்டு—மெய்யுணர்வை
யெய்தவுமிங் கெவ்வுயிரு மின்ன லுறுதிழையா
துய்யவுஞ்செய் வார்க்கஃ தறம். (கக)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—மெய் நிலையை - மெய்ப்பொருளினது

தன்மையை, எய்துதலே - அடைதலே, மெய்வீடு - உண்மையான முத்தி. மாந்தர் எல்லாம்-மனித சமுகம் முழுவதும், கை நிலையில் நின்று - ஒழுக்க நெறியில் நடந்து, அருளைக் கொண்டு - ஜீவகாருண்ணியத்தைக் கொண்டு, மெய் உணர்வை எய்தவும் - மெய்ப்பொருள் ஞானத்தை அடையவும், இங்கு - இவ்வுலகில், எவ் உயிரும்-எந்த உயிரும், இன்னல் உறுது இழையாது உய்யவும்- துன்பத்தை அடையாதும் துன்பத்தைப் புரியாதும் பிழைக்கவும், செய்வார்க்கு - செய்கின்றவர்க்கு, அஃது உறும் - அம்மெய் முத்தி சித்திக்கும்.

க-ரை :—கடவுட்டன்மையை அடைதலே மெய்யான வீடு. அது மனித சமுகம் முழுவதும் ஒழுக்க நெறியில் நின்று ஜீவகாருண்ணியத்தைக் கொண்டு கடவுளை உணரவும், இவ்வுலகிலுள்ள எவ்வுயிரும் துன்பத்தை அடையாதும் செய்யாதும் வாழவும் செய்வார்க்குச் சித்திக்கும்.

உன்னையறிந் துன்னுடம்பு முன்னுளமும் பண்படுத்தி
யன்னைபிதா தெய்வ மருங்குரவர்—பொன்னடியைச்
சென்னி யுறவணங்கிச் சீரறங்கள் செய்தொழுக்க
முன்னி யடைந்துசெய்நல் லூழ். (கூஉ)

அ-ம் :—உன்னை அறிந்து உன் உடம்பையும் உன் உள்ளத்தையும் பண்படுத்தி, அன்னை பிதா தெய்வம் அருங்குரவர் பொன் அடியைச் சென்னி யுற வணங்கிச் சீர் அறங்களைச் செய்து, ஒழுக்கத்

தை உன்னி அடைந்து நல் ஊழைச் செய்.

**ப-ரை :**—உன்னை அறிந்து - உனது எதார்த்த சொரூபத்தைத் தெரிந்து, உன் உடம்பும் - உனது சரீரத்தையும், உன் உளமும் - உனது நினைப்பையும், பண்படுத்தி-தூயனவாக்கி; அன்னை பிதா தெய்வம் அரும் குரவர் - தாய் தகப்பன் கடவுள் அருமையான ஆசிரியர் இவர்களுடைய, பொன் அடியை - சிறந்த அடிகளை, சென்னி உற வணங்கி-தலை பொருந்துமாறு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து; சீர் அறங்கள் செய்து-சிறந்த தருமங்களைச் செய்து; ஒழுக்கம் - உயர்ந்தோரது நடையை, உன்னி அடைந்து-விசாரித்துக் கைக் கொண்டு, நல் ஊழ் செய் - நல்ல விதியை ஆக்குவாயாக.

**க-ரை :**— உனது நினைப்பையும் செயலையும் நோக்கி நிற்கும் அறிவே நீ என்று உணர்ந்து, உனது சரீரத்தையும் நினைப்பையும் நல்லன வாக்கி, தாய் தந்தையரையும் கடவுளையும் ஆசிரியரையும் ஒவ்வொரு நாளும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, நல்ல தருமங்களைச் செய்து, ஒழுக்கங்களை யெல்லாம் கைக் கொண்டு, நல்ல விதியைச் செய்வாயாக.

அறமொன்றே செய்தற் கரசாகி நின்று
திறமொன்றே மேன்மேலுஞ் சேர்த்து—மறமொன்றி
நிற்கின்ற நாடெல்லா நேர்நெறியிற் கொள்ளற்குக்
கற்கின்ற துன்முற் கடன். (கூரு)

**அ-ம் :**—செயயுள் நடையே அநுவய நடை.

**ப-ரை :**—அறம் ஒன்றே - தருமமென்னும் ஒன்றையே, செய்தற்கு - செய்வதற்காக, அரசு ஆகி நின்று-ஓர் அரசனாகி அரசு நெறியில் நடந்து, திறம் ஒன்றே - தரைப்படை கடல்படை ஆகாயப்படை முதலிய வலியையே, மேன்மேலும் சேர்த்து-மேலும் மேலும் சேர்த்து, மறம் ஒன்றி நிற்கின்ற - அதருமங்கள் பொருந்தி நிற்கின்ற, நாடு எல்லாம்-தேசங்களையெல்லாம், நேர் நெறியில் - நேரான வழியில், கொள்ளற்கு - அடைதற்கு, கற்கின்றது - படிப்பது, உன் முன் கடன்-உனது முதல் கடன்.

**க-ரை :**—இவ்வுலகின் கண்ணே தருமத்தை நிலை நாட்டுதற்காக, ஒரு தேசத்தின் அரசனாகி அதருமங்கள் பொருந்தி நிற்கின்ற தேசங்களையெல்லாம் பிடிப்பதற்குரிய மார்க்கங்களை நீ கற்பது உனது முதல் கடமை.

நாடெல்லாங் கொண்டவற்றி னானிலத்துஞ் சேர்ந்துள்ள
காடெல்லாஞ் சீர்திருத்திக் காட்டாற்றின்-பீடெல்லா
நல்லாற்றிற் சேர்ந்துதவ நன்னதிகு ளங்கிணறு
பல்லாற்றிற் செய்வாய் பரிந்து. (கூச)

**அ-ம் :**—நாட்டையெல்லாம் கொண்டு அவற்றின் நால் நிலத்தும் சேர்ந்துள்ள காட்டையெல்லாம் சீர்திருத்திக் காட்டு ஆற்றின் பீடு எல்லாம் நல் ஆற்றில் சேர்ந்து உதவ நல் நதி குளம் கிணறு பல் ஆற்றில் பரிந்து செய்வாய்.

**ப-ரை :**—நாடு எல்லாம் கொண்டு-அதருமங்கள்

பொருந்தி நிற்காநின்ற தேசங்களை யெல்லாம் பிடித்து, அவற்றின் - அத்தேசங்களுடைய, நால் நிலத்தும்-குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்னும் நால் வகை நிலங்களினும், சேர்ந்துள்ள-பொருந்தி யுள்ள, காடு எல்லாம் - காடுகளை எல்லாம், சீர்திருத்தி-வெட்டிப் பண்படுத்தி, காட்டு ஆற்றின்-காட்டில் ஓடுகின்ற ஆறுகளின், பீடு எல்லாம்-வலி (நீர்) முழுவதும், நல் ஆற்றில்-நல்ல ஆறுகளில், சேர்ந்து உதவ - சேர்ந்து உபயோகப்படுமாறு, நல் நதி- நல்ல நதிகளையும், குளம் - குளங்களையும், கிணறு - கிணறுகளையும், பல் ஆற்றில் - பல வழிகளிலும், பரிந்து செய்வாய்-முயன்று செய்வாயாக.

க-ரை:—அதருமம் பொருந்திய தேசங்களை யெல்லாம் பிடித்து, அவற்றிலுள்ள காடுகளை யெல்லாம் வெட்டித் திருத்திப் பண்படுத்தி, அவற்றில் ஓடும் ஆறுகளெல்லாம் பயன்படும்படி நல்ல நதிகளையும், குளங்களையும், கிணறுகளையும் உண்டு பண்ணுவாயாக.

ஏர்த்தொழிலுங் கைத்தொழிலு மெங்கும் பெருகிவரப்
பார்த்தெழிலுங் காப்பும் படைநலனுஞ்—சேர்த்து
நகரரண்கல் விச்சாலை நற்சமயக் கோவி
னிக்ரறவாங் காக்கு நினைத்து. (கூ௫)

அ-ம்:—ஏர்த்தொழிலும் கைத்தொழிலும் எங்கும் பெருகிவரப் பார்த்து, எழிலும் காப்பும் படைநலனும் சேர்த்து, நகரும் அரணும் கல்விச் சாலையும் நல் சமயக் கோவிலும் நிகர் அற நினைத்து ஆக்கு.

ப-ரை :—ஏர்த் தொழிலும்-விவசாயமும், கைத் தொழிலும் - பல கைத் தொழில்களும், எங்கும் பெருகிவரப் பார்த்து - எவ்விடத்திலும் நாளுக்கு நாள் விர்த்தியாகிக் கொண்டு வருமாறு ஏற்பாடு செய்து, எழிலும் காப்பும் படை நலனும் சேர்த்து- அழகும் மதிற்காப்பும் படைக்காப்பும் சேர்த்து, நகர் அரண் கல்விச்சாலை நல் சமயக் கோவில் - நகர்களையும் கோட்டைகளையும் கலாசாலைகளையும் நல்ல மத ஆலயங்களையும், நிகர் அற நினைத்து ஆக்கு - ஒப்பு இல்லாதவாறு நினைத்துக் கட்டு விப்பாயாக.

க-ரை :—பல இடங்களிலும் விவசாயமும் கைத் தொழில்களும் விர்த்தியாகுமாறு செய்து, நகரங்களையும் அரண்களையும் கலாசாலைகளையும் நல்ல மத ஆலயங்களையும் அழகோடும் மதிற்காப்போடும் படைக்காப்போடும் சேர்த்து அமைப்பாயாக.

ஆங்கு அசை.

எவ்வுயிருந் தன்னிலையி லின்பமொடு வாழ்ந்திடவு
மெவ்வுயிருந் தன்னிலைவிட் டேகியய—லெவ்வுயிர்க்கு
மின்னலிழை யாதுறவு மேற்றமுள மாந்தரெலாந்
தன்னிலையி னிற்கவும்பார் தாங்கு. (கூசு)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—எவ் உயிரும்-ஒவ்வோர் உயிரும், தன் நிலையில்-தன் தன் இடத்தில், இன்பமொடு வாழ்ந்

திடவும் - சுகமாக வாழுமாறும், எவ் உயிரும் - எந்த உயிரும், தன் நிலை விட்டு ஏகி - தனது இடத்தை விட்டு வெளி சென்று, அயல் எவ் உயிர்க்கும்- பக்கத்திலுள்ள வேறு எந்த உயிருக்கும், இன்னல் இழையாது உறவும்-துன்பம் செய்யாது இணங்கி வாழுமாறும், ஏற்றம் உள மாந்தர் எலாம் - அறிவு மிக்க மனிதரெல்லாம், தன் நிலையில்-ஆத்ம நிலையில், நிற்கவும்-நிற்குமாறும், பார் தாங்கு-பூமியை ஆள்.

**க-ரை:**—ஒவ்வோர் உயிரும் அதற்கு ஏற்பட்ட இடத்தில் நின்று சுகமாக வாழுமாறும், எவ்வுயிரும் தனது எல்லையைக் கடந்து சென்று வேறு எவ்வுயிர்க்கும் எவ்வகைத் தீங்கும் இயற்றாதவாறும், ஆறறிவுள்ள மக்களெல்லாம் ஆத்ம நிலையில் நிற்குமாறும் பூமியை அரசாட்சி செய்.

உயிரெல்லா மெய்ப்பொருளி னோர்வித்திற் றோன்றும்
பயிரென்றே யெஞ்ஞான்றும் பார்த்துச்-செயிரெஃது
மெவ்வுயிர்க்கு மெப்பொழுது மெட்டுணையுஞ் செய்யாம
லெவ்வுயிர்க்கு நன்றே யியற்று. (கூஎ)

**அ-ம்:**—செய்யுள் நடையே அநுவய நடை.

**ப-ரை:**—உயிர் எல்லாம் - இவ்வுலகத்திலுள்ள பலவகை உயிர்களும், மெய்ப் பொருளின்-கடவுளாகிய, ஓர் வித்தில்-ஒரே வித்தினின்று, தோன்றும், உண்டாகும், பயிர் என்றே-பலவகைப் பயிர்களென்றே, எஞ்ஞான்றும் பார்த்து-எந்நாளும் கருதி, செயிர் எஃதும்-தீமை எதனையும், எவ்வுயிர்க்கும்-எந்த உயிருக்கும், எப்பொழுதும் - எந்தக் காலத்திலும்-

எள் துணையும் செய்யாமல்-எள்ளளவும் (ஒரு சிறிதும்) புரியாமல், எவ் உயிர்க்கும் - எந்த உயிருக்கும், நன்றே இயற்று-நன்மையையே செய்.

க-ரை:—பலவகை உயிர்களும் பரம் பொருளின் குழந்தைகளே என்று கருதி, அவ்வுயிர்களில் எதற்கும் என்றும் எவ்வளவும் தீமை செய்யாது, எவ்வுயிர்களுக்கும் என்றும் நன்மையே செய்.

ஒருயிர்மற் றோருயிர்க்கிங் கூறுசெயி னவ்வுயிருன்
றுருயிரென் றெண்ணிமுத லாய்ந்தகற்று—பாருயிர்க
ளென்றுவரை யொன்றற்கொன் றின்னலிழைக் கின்றனவோ
வன்றுவரை நீதீ யரசு. (கூஅ)

அ-ம்:—இங்கு ஓர் உயிர் மற்று ஓர் உயிர்க்கு ஊறு செயின், அவ் உயிர் உன் ஆர் உயிர் என்று எண்ணி முதலை ஆய்ந்து அகற்று. பார் உயிர்கள் என்று வரை ஒன்றற்கு ஒன்று இன்னலை இழைக்கின்றனவோ அன்று வரை நீ தீ அரசு.

ப-ரை:—இங்கு-இவ்வுலகின் கண், ஓர் உயிர்-ஓர் உயிரானது, மற்று ஓர் உயிர்க்கு - வேறு ஓர் உயிருக்கு, ஊறு செயின் - தீங்கு செய்தால், அவ் உயிர் - தீங்கைச் செய்த அந்த உயிரும், உன் ஆர் உயிர் என்று எண்ணி-உனது அருமையான உயிரே என்று கருதி, முதல் ஆய்ந்து அகற்று - அத்தீங்கு செய்ததற்குரிய காரணத்தை விசாரித்துத் தெரிந்து நீக்கு. பார் உயிர்கள்-பாரிலுள்ள உயிர்கள், என்று வரை-எந்நாள் வரையில், ஒன்றற்கு ஒன்று-ஓர் உயி

ருக்கு மற்ரோர் உயிர், இன்னல் இழைக்கின்றனவோ- தீங்கைச் செய்கின்றனவோ, அன்று வரை- அந்நாள் வரை, நீ தீ அரசு-நீ தீய அரசனென்று அறிவாயாக.

க-ரை :—இவ்வுலகில் ஓர் உயிர் மற்ரோர் உயிருக்குத் தீங்கு செய்தால், அவ்வுயிர் உனது அரிய உயிரே என்று கருதி, அதற்கு ஒருவகைத் துன்பமும் செய்யாது, அது தீங்கு செய்ததற்குரிய காரணம் யாதென்று கண்டு அதனை நீக்குவாயாக. இவ்வுலகில் ஓர் உயிர் மற்ரோர் உயிருக்குத் தீங்கு புரியும் காலமெல்லாம் நீ தீய அரசனுயிருக்கின்ருயென்று அறிவாயாக.

என்றுமுத லொன்றற்கொன் றின்னலிழை யாதுயிர்க
ளொன்றியிவ ணின்றின்ப முற்றிடுமோ—வன்றுமுத
னீதியர சானுய்நீ நேரில்லா மெய்ந்நிலையிற்
பாதியடைந் தாயென்று பார். (கக)

அ-ம் :—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை :—என்று முதல் - எந்நாள் முதற் கொண்டு, ஒன்றற்கு ஒன்று-ஓர் உயிர்க்கு மற்ரோர் உயிர், இன்னல் இழையாது - துன்பம் செய்யாது, உயிர்கள் ஒன்றி - உயிர்கள் ஒன்ரோடு ஒன்று பொருந்தி, இவண் நின்று - இங்கு வாழ்ந்து, இன்பம் உற்றிடுமோ - இன்பத்தை அடையுமோ, அன்று முதல் - அந்நாள் முதற் கொண்டு, நீ நீதி அரசு

ஆனாய் - நீ நியாயம்புரியும் அரசனாகினை; நேர் இல்லாமெய் நிலையில்-ஒப்பற்ற கடவுட்டன்மையில், பாதி அடைந்தாய் - ஒரு பாகத்தை அடைந்து விட்டாய்; என்று பார்-என்று அறிவாயாக.

க-ரை:—எந்நாள் முதல் உயிர்கள் ஒன்றற்கு ஒன்று தீங்கு புரியாமல் ஒத்து வாழ்கின்றனவோ அந்நாள் முதல் நீ நல்ல அரசனாகி விட்டாயென்றும் கடவுட்டன்மையில் பாதியை அடைந்து விட்டாயென்றும் அறிவாயாக.

நன்றறியு மாந்தரெலா நல்வினையைச் செய்துளத்தை
வென்றுநடு நின்றருளான் மெய்யுணர—வென்றுலக
மேம்படுமோ வன்றேநீ மெய்ந்நிலையை யெய்திநனி
மேம்படுவா யஃதேமெய் வீடு. (ரு)

அ-ம்:—செய்யுள் நடையே அநுவய நடை.

ப-ரை:—நன்று அறியும்-இது நன்மை இது தீமை என்று பகுத்து அறியும், மாந்தர் எலாம் - மனிதர்களெல்லாம், நல்வினையைச் செய்து - அறச் செயல்களைச் செய்து, உளத்தை வென்று-மனத்தை ஜயித்து, நடுநின்று - நடுவு நிலைமை தவறாது ஒழுகி, அருளால்-கருணையால், மெய் உணர-கடவுளை உணருமாறு, என்று-எந்நாள், உலகம் மேம்படுமோ-உலகமானது மேம்பாடு அடையுமோ, அன்றே நீ-அந்த

நாளிலே நீ, மெய் நிலையை - கடவுட்டன்மையை, எய்தி-பூரணமாக அடைந்து, நனி மேம்படுவாய்- மிக மேம்பாடு அடைவாய். அஃதே மெய்வீடு - அம் மேம்பாடே மெய்யான முத்தி.

**க-ரை :**—பகுத்தறிவுடைய மனித சமூகம் முழுவதும் நல்ல செயல்களையே செய்து, மனத்தை அடக்கி, நடுவு நிலைமையில் நின்று, கருணையால் கடவுளை உணருமாறு எந்நாளில் இவ்வுலகம் மேம்படுமோ, அந்நாளிலே நீ கடவுட்டன்மையைப் பூரணமாக அடைந்து மேம்படுவாய். அம்மேம்பாடே மெய்வீடு.

மெய்யறிவு முற்றிற்று.

எஸ். வி. என். பிரஸ், மூக்கர் நல்லமுத்து தெரு, மதராஸ்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 21 | 7 | கிழ்ப்படிய | கீழ்ப்படிய |
| 23 | 15 | இண்டு | இரண்டு |
| 24 | 12 | பதார்தங்களும் | பதார்த்தங்களும் |
| 32 | 14 | தன்னின் | தன்னின் |
| 32 | 8 | 3-ம் அதி.— | 4-ம் அதி.— |
| 36 | 1 | ஞனேந்திரிய | ஞானேந்திரிய |
| 38 | 6 | மைம்பெறிய | மைம்பொறிய |
| 43 | 22 | நி | நீ |
| 51 | 7 | வாயிலாகத் துன் | வாயிலாக இன் |
| 51 | 9 | வாயிலாக இன்பங் | வாயிலாகத் துன்பங் |
| 55 | 24 | குனத்தை | குணத்தை |
| 65 | 10 | நேறிகளிலெ | நெறிகளிலே |
| 71 | 17 | குறவை | குறைவை |
| 77 | 1 | ஏகரமும் | ஏகாரமும் |
| 80 | 24 | மன்னும் ன்எ | மன்னும் என் |
| 82 | 16 | மெய் | 9-ம் அதி.—மெய் |
| 90 | தலைப்பு | மேய்யறிவு | மெய்யறிவு |
| 90 | 8 | சரீராபிமானி | சரீராபிமான |
| 93 | தலைப்பு | மெய்யுணர்தல் | மெய்ந்நிலையடைதல். |
| 93 | 19 | மெய் | 10-ம் அதி.—மெய் |